கோகுலம்

GOKULAM

ஏப்ரல் '85 ரூ.2





டாக்டர் அழகப்ப செட்டியார்

தோற்றம் : 6-4-1909 மறைவு : 5-4-1957



கோகுலம்

மலர்—3 இதழ்—3

1985 ஏப்ரல் மாத இதழ்

கௌரவ ஆசிரியர்:

அழ. வள்ளியப்பா

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

தனிப்பிரதி ரூ. 2/-
ஆண்டுச் சந்தா ரூ. 24/-

அருமைச் சிறுவர் சிறுமியரே,

இந்த இதழ் வெளிவரும்போது உங்களில் பலர் ஆண்டுத் தேர்வுகளை எழுதி முடித்திருப்பீர்கள். மற்றவர்களும் விரைவிலே தேர்வுகளை எழுதத் தயார் செய்து கொண்டிருப்பீர்கள். நீங்கள் அனைவரும் நல்ல மதிப்பெண்களைப் பெற்றுச் சிறந்த முறையில் வெற்றியடைய வேண்டுமென மனமார வாழ்த்துகிறோம்.

ஏப்ரல் 13—ஆம் தேதி தமிழ்ப் புத்தாண்டு பிறக்கிறது. புது ஆண்டு எல்லாருக்கும் எல்லா வகையிலும் நல்ல ஆண்டாக விளங்குமென நம்புவோம்.

இந்த இதழில் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தம் குழந்தைப் பருவத்தை மிகவும் சுவையாகக் கூறியிருக்கிறார். பள்ளிக்கூடத்தில் மழைக்குக் கூட ஒதுங்காதவர், பல சிறந்த புத்தகங்களை எழுதித் தந்திருக்கிறார். தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளராகவும் சிந்தனையாளராகவும் திகழ்கின்றார். இவரது பேச்சிலே தெளிவு இருக்கும்; செயலிலே ஒழுங்கு இருக்கும். இவருக்கு மதுரை — காமராசர் பல்கலைக்கழகம் 'டாக்டர்' பட்டமும், தமிழ்நாடு அரசு 'கலைமாமணி' விருதும் வழங்கிச் சிறப்பித்திருக்கின்றன. இவரது கட்டுரை, உங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்குகிறது. படித்துப் பயனடையுங்கள்.

—அழ. வள்ளியப்பா






த.கி.இராமசாமி

இந்த இதழ் எழுத்தாளர்கள்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்



திருச்சி ராஜா



ஆர்.சிவகாமி



எஸ்.எஸ்.ராமன்

பிருந்தாவனக் கவிஞர்கள்



ஏ.எஸ்.மீனாள்



க.பழனிவேல்



எஸ்.விஜயா



எஸ்.ரம்யா



ஆர்.வசுமதி

அட்டை வண்ணப்படம் : யோகா

மின் மினிக் கதைகள்

நம் நாட்டுத் தெனாலிராமனைப் போல், இலங்கையிலும் ஒரு விகடகவி இருந்தான். அவன் பெயர் அந்தரே. அவனைப் பற்றிப் பல வேடிக்கைக் கதைகள் உள்ளன. அவற்றில் சிலவற்றைக் கீழே படித்து மகிழுங்கள்.

தூங்க ஒரு மரம்

அரண்மனைத் தோட்டத்தில் உள்ள மாமரத்தில் மாம்பழங்களைத் திருடுவதற்காக ஏறினான் அந்தரே. இதைப் பார்த்த அரண்மனைக் காவலாளிகள் இருவர் அந்த மாமரத்தருகே வந்து சத்தம் போட்டார்கள்.

''ஏன் மரத்தில் ஏறினாய்?'' ஒரு காவலாளி கேட்டான். அந்தரே சொன்னான்... ''தூங்குவதற்காக ஏறினேன்...''

''என்ன, தூங்குவதற்காக மரத்தில் ஏறினாயா? தூங்க வேறு இடமே உனக்குக் கிடைக்கவில்லையா? விளையாடாதே... மரியாதையாக இறங்கு...! மரத்தில் தூங்க முடியுமா?'' என்று கேட்டான் மற்ற காவலாளி.

''அதுதான் ரகசியம். வேண்டுமானால் நீங்கள் இருவரும் மரத்தில் ஏறிப் பாருங்கள், எப்படித் தூக்கம் வருகிறது என்று...''

அந்தரே மரத்திலிருந்து கீழே இறங்கினான். காவலாளிகள் இருவரும் அந்தரே சொன்னதைப் பரீட்சித்துப் பார்க்க மரத்தில் ஏறினார்கள்.

அந்தரே இதுதான் சமயம் என்று ஓடினான்.

காவலாளிகள் அப்போதுதான் அந்தரேயின் தந்திரத்தை உணர்ந்தார்கள். காவலாளிகளிடம் அந்தரே பிடிபட்டிருந்தால் சவுக்கடிதான் கிடைத்திருக்கும்.





நிழலைச் சாப்பிடு

அரண்மனைக்குள் ஒரு தடவை பெரிய கெட்டிக்காரன் ஒருவன் வந்திருந்தான். தன்னால் எதையும் செய்ய முடியுமென்று சவால் விட்டான். அவனோடு போட்டி போட்டுப் பலரும் தோல்வி கண்டார்கள்.

அரசருக்குக் கவலை ஏற்பட்டது. தன்னுடைய நாட்டில் எங்கிருந்தோ வந்திருக்கும் ஒருவனை வெற்றி கொள்ள திறமைசாலி இல்லையே என்று வருத்தப்பட்டார். அரண்மனைக்கு வரும்போதெல்லாம் சோகமாக இருந்தார். அந்தரேயோடு கூடப் பேசுவதே இல்லை. அந்தரேக்கும் கவலையாக இருந்தது. அரண்மனையில் அரசரது விருந்தாளியாக இருந்த கெட்டிக்காரன் கர்வத்துடன் இருந்தான். அடிக்கடி சவால் விட்டான். ஆனால் அவனோடு போட்டிப் போட யாருமே வரவில்லை.

அந்தரே யோசித்து நாட்டின் மானத்தைக் காப்பாற்ற ஒரு வழி கண்டு சவால் விட்டான்.

"என்னால் எதையும் செய்ய முடியும் என்று சொன்னாயே! அப்படியென்றால் நான் தரும் இனிப்புப் பலகாரத்தையும் சாப்பிட வேண்டும். அதன் நிழலையும் சாப்பிட வேண்டும். முடியுமா?"

கெட்டிக்காரன் விழித்தான்; தவித்தான்.

அப்போது அந்தரே கேட்டான்.

"என்னால் முடியும்! நான் செய்து காட்டுகிறேன். அதை நீ தெரிந்து கொண்ட பின் இந்த நாட்டை விட்டு ஓடி விட வேண்டும், சரியா?"

கெட்டிக்காரன் மறுநாள் வருவதாகச் சொல்லி விட்டான். ஆனால், அன்றிரவே அவன் ஓடிவிட்டான். பலகாரத்தையும் சாப்பிட்டு அதன் நிழலையும் சாப்பிட வேண்டுமாமே! யாரால் முடியும்?

கெட்டிக்காரன் ஓடிப் போனது அரசருக்குத் தெரிந்தது. அந்தரேயைக் கூப்பிட்டார்... "சரி. நீ நிழலைச் சாப்பிட்டுக் காட்டு!" என்றார்.

அந்தரே சிரித்துக்கொண்டே ஒரு விளக்கைக் கொண்டு வரச் சொன்னான். விளக்கு வந்தது! விளக்கின் அருகில் உட்கார்ந்தான். அப்போது அவன் நிழல் பூமியில் விழுந்தது. அந்தரே கூறினான்.

"அரசே! என்னைப் பார்க்காதீர்கள்! என் நிழலைப் பாருங்கள்; நிழலைச் சாப்பிடுவது தெரியும்...".

அரசர் நிழலையே பார்த்தார். அந்தரே பலகாரத்தை வாயில் வைத்துச் சாப்பிட்டான். நிழலும் கூடவே சாப்பிட்டது.

"பார்த்தீர்களா, அரசே! இங்கே நான் பலகாரத்தைச் சாப்பிடுகிறேன். அங்கே பலகாரத்தின் நிழலையும் சாப்பிடுகிறேன். இது கூட அந்தக் கெட்டிக்காரனுக்குத் தெரி யவில்லையே!" என்றான் அந்தரே.

அரசர் சிரித்து விட்டுச் சொன்னார்.

"எனக்கே தெரியவில்லையே!"

அந்தரேயின் தொப்பி

அந்தரே பட்டுத்துணியால் தயாரான தொப்பி அணிய ஆரம்பித்தான். அது அவனுக்கு அழகாக இருந்தது.

அரசர் அந்தத் தொப்பியைப் பார்த்தார். அவருக்கு அந்தத் தொப்பி மீது ஆசை பிறந்தது.

''இந்தத் தொப்பி எங்கே வாங்கினாய்? அழகாக இருக்கிறதே...'' என்று கேட்டார் அரசர்.

''இது பக்கத்து நாட்டில் வாங்கினேன்...'' என்றான் அந்தரே.

''அதை எனக்குத் தருகிறாயா?'' அரசர் கேட்டார்.

அந்தரேக்கு தர்ம சங்கடமாகப் போய்விட்டது.

அரசர் நினைத்தால் புதுத்தொப்பியே வாங்கலாம். இதைப்போய்க் கேட்கிறாரே!

''தொப்பியைத் தந்தால் என்ன தருவீர்கள்?''

அந்தரேதான் கேட்டான்.

''என்ன கேட்டாலும் தருகிறேன்...''

அப்படியானால்-உங்கள் தலையில் உள்ள மகுடத்தைத் தாங்களேன்:...''

அரசர் திடுக்கிட்டார். பிறகு கேட்டார்... ''என்ன விளையாடுகிறாயா அந்தரே?''

''நான் விளையாடவில்லை. நீங்கள்தான் விளையாடுகிறீர்கள். ஏழையான என்னுடைய தொப்பி உங்கள் தலையில் உள்ள மணி மகுடத்திற்குச் சமமானது. என்னிடம் ஒரு தொப்பிதான் உள்ளது. உங்களிடமும் ஒரு மகுடம்தான் இருக்கிறது. உங்களைப் போன்ற அரசர் என்னைப் போன்ற ஏழையின் தொப்பிக்கு ஆசைப்படலாமா?''

அரசர் ஒன்றுமே பேசவில்லை. அதன் பின்னர் தொப்பியைப் பற்றி அவர் பேசவே இல்லை.

அடுத்த நாள் அந்தரே வந்தான். ஆனால், அவன் தலையில் பட்டுத் தொப்பியைக் காணவில்லை.

அரசர் கேட்டார், ''எங்கே, உன் தொப்பி?''

அந்தரே சொன்னான்:

''மற்றவர்கள் ஆசைப்படும் பொருட்களை வீசி விட வேண்டும் என்று ஒரு முனிவர் சொன்னார். அதன்படி தொப்பியை வீசி விட்டேன்...''

அரசர் முகத்தில் ஈயாடவில்லை.

மற்றவர் ஆசைப்படும் பொருள் வைத்திருக்கக் கூடாது என்றால், மகுடத்தின் மீது அந்தரேக்கு ஆசை இருக்கிறதே! அதை வீச வேண்டுமே!... வீச முடியுமா?





வாயில் மண்... வாயில் மண்...

ஒரு நடவை அரசருடைய மாளிகையின் முன்னால் வெள்ளைச் சர்க்கரையை ஒரு பெரிய பாயில் காயப்போட்டிருந்தார்கள். அரசரைப் பார்க்க மாளிகைக்குப் போன அந்தரே மன்னரிடம், ''வாசலில் என்ன காயப்போட்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டான்.

அரசர் இவன் எங்கே அள்ளிச் சாப்பிட்டு விடுவானோ என்ற பயத்தில்,

''ஆற்றில் இருந்து எடுத்துவந்த புதுவகையான மணல். காயப்போட்டிருக்கிறேன்...'' என்றார்.

அந்தரேக்கு அரசர் சொல்வது பொய்யென்று புரிந்தது. தன் வீட்டிற்குப் போய், தன் மகனைக் கூப்பிட்டான். அவனிடம், ''நான் இன்னும் கொஞ்ச நேரத்தில் அரசரின் மாளிகையின் முன்னால் நிற்பேன். நீ அந்த நேரத்தில், 'அம்மா செத்து விட்டாள்' என்று சொல்லி அழு!'' என்று சொன்னான்.

அந்தரே மாளிகையின் வாசலுக்குப் போனான். அரசர் சர்க்கரை காயப்போட்டிருந்த இடத்தைச் சுற்றிக் காவல் போட்டிருந்தார். இதையெல்லாம் கவனித்த அந்தரே அரசரோடு பேசிக் கொண்டிருந்தான்.

அந்தரேயின் மகன் ஓடி வந்தான். ''அப்பா... நம்ம அம்மா திடீரென்று செத்துப் போயிட்டாங்க...'' என்று அவன் சத்தம் போட்டு அழுதான். அவ்வளவுதான்! அந்தரே தலையில் அடித்துக்கொண்டு விட்டு சர்க்கரையின் மீது உருண்டான். இனி எப்படி வாழ்வேன்? அடக்கடவுளே! இப்படித் திடீரென்று போய் விட்டாளே! என் வாழ்க்கையே முடிந்து விட்டதே...! வாயில் மண்... வாயில் மண்...'' என்று சொல்லியவாறு வெள்ளைச் சர்க்கரையை அள்ளி அள்ளி வாயில் போட்டான்.

அந்தரேயின் தந்திரம் அரசருக்குப் புரிந்துவிட்டது. ஆனால், அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர் வெள்ளைச் சர்க்கரையை மணல் என்று அல்லவா சொல்லியிருந்தார்.

அரசர் தன் மந்திரியை அழைத்து அந்தரேக்கு ஒரு மூட்டை வெள்ளைச் சர்க்கரை கொடுக்கச் சொன்னார்...

—மாத்தளை சோமு எழுதி, மதுரை மீனாட்சி புத்தக நிலையம் வெளியிட்ட 'இலங்கை நாட்டு தெனாலிராமன்' என்ற புத்தகத்திலிருந்து



என் குழந்தைப் பருவம்

-பத்மஸ்ரீ நெ.து.சுந்தரவடிவேலு

-அடுத்த இதழில்

மணியும் ஜூலியும் ⑬

கருத்து:
எம்.ஆர்.ராஜன்



விளையும் பயிர்







சென்னை பாரதீய வித்யா பவனில் படிக்கும் என். தீபக்கிற்கு வயது 5.

இரண்டரை வயதுக் குழந்தையாக இருந்த போதே, பாரதியார் வேடம் அணிந்து பாரதியாரின் பாடல்களை உணர்ச்சியோடு பாடி, தமிழ்நாடு அரசின் சமூகத் துறையின் முதல் பரிசைப் பெற்றான்.

மாறுவேடப் போட்டிகளில் மிகவும் உற்சாகமாகக் கலந்து கொள்வான். கட்டபொம்மனாக வந்து வீர முழக்கம் செய்வான். ஆசிரியராக வந்து அறிவுரை கூறுவான். போலீஸ் அதிகாரியாக வந்து சல்யூட் செய்வான். எந்த வேடம் போட்டாலும், இவனுக்குப் பொருத்தமாக இருக்கும். அந்த வேடத்திற்கு ஏற்றபடி நடித்துச் சபையோரின் பாராட்டைப் பெற்று விடுவான்; பரிசையும் தட்டிக் கொண்டு போய் விடுவான்.

ரேடியோவிலும், தொலைக் காட்சியிலும் பல முறை பங்கு கொண்டிருக்கிறான். அழகாகக் கதை சொல்லுவான்; உணர்ச்சி ததும்பப் பாட்டுப் பாடுவான்; சிறந்த முறையில் நடிப்பான்.

சமீபத்தில், சென்னை மியூசிக் அகாடமியில் நடந்த பல்சுவை நிகழ்ச்சியில் பங்கு கொண்டு பரிசும் பாராட்டும் பெற்றான்; லயன்ஸ் கிளப் நடத்திய விழாவில், பிரிட்டிஷ் டெபுடி ஹை கமிஷனரின் துணைவியார் திருமதி ஸ்டப்ஸ் இவனை மிகவும் பாராட்டிப் பரிசு வழங்கினர்.

நடிப்பு, பாட்டு, கதை எல்லாவற்றிலும் கெட்டிக்காரனாக இருக்கும் தீபக், படிப்பிலே எப்படி?

அதிலும் மிகவும் கெட்டிக்காரனாகவே விளங்குகிறான். இவனுக்கு மிகவும் பிடித்தவை: விளையாட்டு, சங்கீதம், சித்திரம்.



இருக்க வேண்டும்'' இப்படி அவர் நினைத்தது ஒரு காரணம். இன்னொரு முக்கிய காரணம் உண்டு. அதுதான் வறுமை. நாங்கள் எல்லோருமே வேலைசெய்து சம்பாதித்துத்தான் சாப்பிட வேண்டிய நிலை இருந்தது. அப்போது என் தந்தைக்கு மாதச் சம்பளம் மூணரை ரூபாய்தான்! ஒரு ரூபாய் சம்பளம் அதிகமாகக் கேட்டு, கொடுக்கப்படாததால் வேலையை விட்டு விலகி சொந்தமாகக் கடை வைக்கத் தொடங்கினர்.

என் மூத்த அண்ணனுக்கு மாதச் சம்பளம் மூன்று ரூபாய். மற்ற அண்ணன்மார்கள் இரண்டரை ரூபாய், இரண்டு ரூபாய் என்று சம்பளம் வாங்கினார்கள். எனக்கு மாதச் சம்பளம் எவ்வளவு தெரியுமா? ஒரு ரூபாய்! ஒரு கடையில் ஆறு மாதங்கள் சம்பளம் இல்லாமல் பயிற்சி பெற்ற பிறகுதான் இந்தச் சம்பளமும் கிடைத்தது. அப்போது எனக்கு எட்டு வயது. வீட்டுச் சமையலுக்காக ஒவ்வொருவருடைய சம்பளத்திலிருந்தும் ஒவ்வொரு பொருள் வாங்கி விடுவார்கள். என் சம்பளம் தினமும் வீட்டுக்கு மோர் வாங்குவதற்குப் பயன்பட்டது. தினமும் அரையணுவுக்கு (இப்போது உள்ள மூன்று காசு) ஒரு குடம் மோர் வாங்குவார்கள். நானும் குடும்பத்திற்காகச் சம்பாதிக்கிறேன் என்ற பெருமிதம் எனக்கு ஏற்படும். பிறகு பத்தாவது வயதில் என் தந்தையின் கடைக்கே வந்துவிட்டேன். கல்லாவில் உட்கார்ந்து வியாபாரம் பண்ணினேன்.

என் குழந்தைப் பருவம்

முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம்

நான் சென்ற நூற்றுண்டில் பிறந்தவன். 1899—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10—ஆம் தேதி பிறந்தேன். தகப்பனர் பெயர் திரு. பெரியண்ணப் பிள்ளை. தாயார் பெயர் திருமதி சுப்பு லட்சுமி. எனது பெற்றோருக்கு மொத்தம் 16 குழந்தைகள். ஆண் குழந்தைகள் 9 பேர்; பெண் குழந்தைகள் 7 பேர். நான்தான் கடைக்குட்டி, 16—வது குழந்தை. எனக்கு தம்பி, தங்கை யாருமில்லை.

எங்கள் தந்தையார் எங்கள் யாரையுமே படிப்பதற்காகப் பள்ளிக்கூடம் அனுப்பவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. நாங்கள் குழந்தைகளாயிருந்தபோது, எனது தந்தை, ஒருவரிடம் கூறிய வார்த்தைகள் இன்னும் என் மனத்தில் பசுமையாய் இருக்கின்றன. ''எனது குழந்தைகள் படித்துவிட்டு யாருக்கும் அடிமை உத்தியோகம் பார்க்கக் கூடாது. தெருவோரத்தில் சாக்கை விரித்துக் கடலை விற்றாலும் பாதகமில்லை. சுதந்திரமாக

இப்படிப்பட்ட சூழ்நிலையில் எப்படி நான் பள்ளிக்கூடம் போயிருக்க முடியும்? ஆனாலும் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் அதிகமாக இருந்தது.

படித்த பிள்ளைகளைப் பார்த்துப் பொறாமைப்படுவேன். நாமும் அவர்களைப்போல் படிக்க முடியவில்லையே



என்று ஏக்கம் கொண்டேன். என்னுடைய ஏழாவது வயதில் தமிழ் எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளும்வாய்ப்பு கிடைத்தது.

முத்துசாமிக் கோனார் என்பவர் தான் எனக்கு அ, ஆ எழுதக் கற்றுக் கொடுத்தார். எங்கள் கடையையொட்டி ஒரு திண்ணை உண்டு. அதில்மணலைப்பரப்பி எழுதக்கற்றுக் கொடுப்பார். எழுதிக்காட்டிவிட்டு அவர் வேறு ஓர் இடத்துக்கு வேலைக்குச் சென்றுவிடுவார். நான் எழுதி எழுதிப் பழகுவேன். இப்படி எல்லா எழுத்துக்களையும் கற்றுக் கொண்ட பிறகு சொற்களைப் பயில வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. அவரிடம் சொன்னேன். அதற்கு அவர், "டு" என்ற எழுத்தை எழுதச் சொல்லி எனக்குத்தெரிந்தஎழுத்துக்களையெல்லாம் அதற்கு முன்னால் எழுதச் சொல்லிவிட்டுப் போய் விடுவார். "ஆ" போட்டால் 'ஆடு' வரும். 'கா' போட்டால் 'காடு' வரும். 'மா' போட்டால் மாடு வரும். 'வீ' போட்டால் 'வீடு' வரும். இப்படிப் பல சொற்களைப்பயிலமுடிந்தது. அதற்குப்பிறகு சிலேட்டிலும் எழுதிப் பழகினேன். அந்த சிலேட்டை உடைத்துவிடாமல் '77' வருடங்களாக இன்னும் பாதுகாப்பாக வைத்திருக்கிறேன். இப்படி எழுத்துக்களையும் சொற்களையும் பயின்ற பிறகு என்னுடைய பாட்டி வைத்திருந்த இராமாயணப் புத்தகத்தைப் படிக்கத்தொடங்கினேன். நான் எழுத்துக் கூட்டிப் படிப்பதைப் பார்த்த பாட்டி, "என்து பேரன் இராமாயணம் படிக்கத் தொடங்கி விட்டான்!" என்று பலரிடமும் சொல்லி மகிழ்ந்தார்.

"எனக்குத் தமிழ்ப்பற்று ஏற்பட்டதற்கான ஒரு நிகழ்ச்சியையும் குறிப்பிட வேண்டும். எங்கள் தெருவில். நெய் காய்ச்சுகிற ஒருவர் இருந்தார். நான் கடையிலிருந்து வந்த நேரம் நெய்யைக் கிண்டிவிடுகிற வேலையை எனக்குக்கொடுப்பார். அந்த வேலைக்குக் கூலியாக நெய்யும் கொடுப்பார். ஆனால், கதை சொன்னால் தான் நெய்யைக் கிண்டிவிடுவேன் என்று நான் அடம் பிடிப்பேன். அப்போதுதான் ஒட்டக்கூத்தர், புகழேந்தி வரலாற்றையெல்லாம் அவர் சுவைபடச் சொன்னார். ஒட்டக் கூத்தரை எதிர்த்துப் புகழேந்தி நடத்திய போராட்டத்தைக் கேட்டு அந்தச் சுவையில் மூழ்கிவிட்டேன். பிறகு நளவெண்பா பாடல்களையெல்லாம் மிகவும் ஆர்வமாகக் கேட்டு நயங்களைச் சுவைக்கத் தொடங்கினேன். இப்படித்தான் என் தமிழார்வம்வளர்ந்தது. இதைத்தவிர எனது தகப்பனாரே எனக்கு ஆசானாக இருந்திருக்கிறார். இரவில் படுக்கப் போகும்போதும் காலையில் தூங்கி எழுந்தபோதும் 'ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்' என்ற உலகநீதி முதல் நல்வழி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நன்னெறி, மூதுரை போன்ற நூல்களையெல்லாம் பாடம்பண்ணச்சொல்லிக்கட்டாயப்படுத்துவார். அவருடைய உதவியால் இப்படிப்பலநூல்களைப் படிக்கமுடிந்தது.

சைவ சித்தாந்த சபையில் ஏற்பட்ட தொடர்பினால் மேலும் பல இலக்கியங்களைக் கற்றுத் தெளிய





முடிந்தது. நாவலர் வேங்கடசாமி நாட்டார் அவர்களிடம் நான் பாடம் கேட்டிருக்கிறேன். அத்துடன் மேடையிலே பேசுவது எப்படி என்பதையும் அவர் கற்றுக்கொடுத்தார். சிறு வயதிலேயே பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதத் தொடங்கினேன். 'ஆனந்தபோதினி' என்ற பத்திரிகைக்குக் கட்டுரைகள் எழுதினேன்.

அப்போதெல்லாம் எனது கட்டுரையில் ர, ற, ழ, ள, ல போன்ற எழுத்துப் பிழைகள் அதிகமாக இருக்கும். ஆரணி குப்புசாமி முதலியார் என்பவர் அவற்றையெல்லாம் திருத்தி வெளியிடுவார். நான் எழுதியதையும் அதையும் ஒப்பிட்டுப் பார்த்து எனது தவறுகளைத் திருத்திக் கொள்வேன். முதலில் ஐம்பது திருத்தங்கள், பிறகு இருபத்தி இரண்டு திருத்தங்கள், அதன் பிறகு ஏழு திருத்தங்கள் அப்புறம் திருத்தங்களுக்குத் தேவையில்லாமல் போய்விட்டது.

திருக்குறளை நாவலர் சோமசுந்தர பாரதியாரிடமிருந்து கற்றுத் தெரிந்து கொண்டேன். தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்களிடமும் பாடம் கேட்டிருக்கிறேன். பக்கத்து வீட்டுக்காரர் ஒருவரின் உதவியோடு ஆங்கில எழுத்துக்களையும் எழுதக் கற்றுக்கொண்டு, சிறிது ஆங்கில அறிவையும் பெற்றேன். இப்படி ஒவ்வொன்றிலும் முயன்று முயன்று என்னை நான் தயார் செய்து கொண்டேன்.

இப்படிப்பட்ட இலக்கியத் தொடர்பு மட்டுமல்லாமல், ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து உண்மையோடும், நேர்மையோடும் வளரக்கூடிய சூழ்நிலையும் ஏற்பட்டது. அதற்கு ஒரு சம்பவம் காரணமாக அமைந்தது. அப்போது எனக்கு பன்னிரண்டு வயது. எங்களது கடையில கல்லாப் பெட்டியில் உட்கார்ந்திருந்தேன். கடையில் வேலை பார்க்கின்ற இருவர் உள்ளேயிருந்து பேசும் குரல் எனக்குக் கேட்டது. மற்றவர்களையெல்லாம் குறை சொல்லிக் கொண்டே வந்த அவர்கள் என்னைப் பற்றியும் பேசத் தொடங்கினார்கள். ''விஸ்வநாதம் நல்ல பையன்; ஒழுக்கமான பையன்'' என்று ஒருவர் சொல்ல, மற்றவர் அதை மறுத்து ''சிறு பையனாக இருப்பதால் இப்போது வேண்டுமானால் இப்படி இருக்கலாம். போகப் போகப் பாருங்கள். அவனும் கெட்டுப் போய் விடுவான்.'' என்று சொன்னார். ஆனால், முதலாமவர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ''நீங்கள் வேண்டுமானால் பாருங்கள். அவன் நல்ல பிள்ளையாகவே வளருவான். அதனால் எதிர்காலத்தில் உயர்ந்த நிலையை அடைவான்'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்.

அந்தப் பேச்சு என் காதில் விழுந்ததிலிருந்து, நல்ல பிள்ளையாகவே நடந்து அவர் நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும் என்ற உறுதி என் மனத்தில் ஆழமாகப் பதிந்தது.

சிறு வயதிலேயே பெரியோர்களின் நட்புக் கிடைத்து விட்டதால், விளையாட்டுப் புத்தியும், தீயவர் நட்பும், சிற்றினம் சேர்தலும் இல்லாமல் போய் விட்டன. எனது குழந்தைப் பருவத்தில் நானாகப் படித்துத் தெரிந்து கொண்டதைக் காட்டிலும், பெரியவர்களிடம் கேட்டுத் தெரிந்து



கொண்டவை அதிகம். பல நாட்கள் முயன்று, தேடி அலைந்து படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய கருத்துக்களை, சில மணி நேரங்களில் பெரியவர்களின் வாய் மூலம் நாம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். பன்னிரண்டு வயதுச் சிறுவனாயிருக்கும் போதே, திருப்பாப்புலியூர் ஞானியார் சுவாமிகள், 'மறைமலை' அடிகள் ஆகியோரின் சொற்பொழிவுகள் எங்கு நடந்தாலும் என் தந்தையாருடன் சென்று கேட்டு மகிழ்வேன்.

பதினோரு வயதுப் பையனாக இருந்தபோதே நாடகத்தில் நடித்திருக்கிறேன். முதன் முதலில் எனக்குக் கிடைத்த வேடம் அரிச்சந்திரா நாடகத்தில் லோகிதாசன் வேடம். அப்போது நடந்த சுவையான நிகழ்ச்சி ஒன்றைச் சொல்லுகிறேன். பாம்பு கடிக்கப்பட்டு நான் மேடையில் கிடக்க வேண்டும். சந்திரமதி அழுது புலம்பிய வண்ணம் என்னைத் தூக்குவாள். அப்போது பாம்பு கடித்ததற்கு அறிகுறியாக என் வாயிலிருந்து நுரை தள்ள வேண்டும். அதற்காக முன் கூட்டியே சோப்புக் கரைத்த நீரை என் வாயில் ஊற்றி மேடையில் படுக்க வைத்து விட்டார்கள். சந்திரமதியாக நடித்தவர் உடனே வந்து என்னைத் தூக்காமல் நீண்ட நேரம் பாடிக் கொண்டிருந்துவிட்டு பிறகு வந்து தூக்கினார். ஆனால், அதற்குள் என் வாயிலிருந்த சோப்பு நுரை கரைந்து நீரெல்லாம் ஒழுகிவிட்டது. அதனால் சந்திரமதி என்னைத் தூக்கிய போது என்னால் வாயிலிருந்து நுரை காட்டமுடியவில்லை. நட்டுவனாருக்குக் கடுமையான கோபம். திரை விழுந்ததும் நட்டுவாங்கத் தாளக்கருவியால் என் தலையில் ஓங்கி அடித்துவிட்டார். ரத்தம் கசிந்தது. அதுதான் நான் நடிப்புக்காக வாங்கிய முதல் பரிசு. அப்புறம் பல நாடகங்களில் நடித்தேன். அந்த அனுபவத்தினால்தான் திருச்சியில் 'நுண் கலைக்குழு' என்ற நாடகக் குழுவை அமைத்து தொடர்ந்து 26 ஆண்டுகள் நடத்த முடிந்தது.

எச்சரிக்கை இல்லாமல் நடந்தால் எப்படிப்பட்ட ஆபத்தும் வரும் என்பதை, சிறுவயதிலேயே நான் உணர்ந்து கொள்ள முடிந்தது. ஒன்பது வயதுப் பையனாக இருந்தபோது தாராநல்லூரில் ஒரு குளத்தில் பல பையன்களோடு குளிக்கப் போனேன். நீச்சல் தெரிந்த பிள்ளைகள் ஆழமான பகுதிக்குப் போய்க் குளித்தார்கள். எனக்கு நீச்சல் தெரியாது. ஆனாலும், ஆர்வ மிகுதியால் நானும் ஆழமான பகுதிக்குப்போய்விட்டேன். அதனால் நீரில் மூழ்கி உயிருக்குப் போராடினேன். சில பெரியவர்கள் வந்து என்னைக் காப்பாற்றினார்கள். மற்றப் பிள்ளைகளுக்கும் இது ஓர் எச்சரிக்கை!

சிவகாசி சே. கா. கந்தசாமிக் கவிராயர் என்பவர் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவார். என்னுடைய பதினோராவது வயதில் எனக்கு அறிவுரையாகவும் அறவுரையாகவும் ஒரு பாடலைக் கொடுத்தார். அது மற்றக் குழந்தைகளுக்கும் பயன்படுமானால் மகிழ்வேன். இதோ, அந்தப் பாடல்:

கடவுளைத் தொழுது
காலையில் எழுந்திரு.
காலையில் எழுந்துன்
வேலையில் நில்லு.
வேலையிற் சோம்பலை
விட்டு நீ முயலு.
முயலும் வேலையை
முடித்திடப் பழகு.
சுத்த நீரிலே
நித்தமும் முழுகு.
தூய ஆடையை
நேயமாய் உடுத்து.
நல்ல உணவையே
நாடி நீ உண்ணு.
தீய உணவை
நோயென விலக்கு.
வித்தையை விரும்பி
நித்தமும் ஓது.
ஓதுவது இந்தப்
போதெனக் கொள்ளு.
கொண்ட அப்பொழுதில்
குறைவின்றி ஓது.
இன்ப நிலையில்
இருக்கப் பழகின்
இனிய வாழ்வுதனை
அடைவாயே!

கேட்டு எழுதியவர்:
இளசை எஸ். சுந்தரம்



டாக்டர் அழகப்பர்

செட்டி நாட்டைச் சேர்ந்த கோட்டையூரில் பிறந்த இவர், சிறு வயதிலே கல்வியில் அதிக அக்கறை கொண்டிருந்தார். ஆனால், இவருடைய தந்தையாரோ, இவரை மலேயாவுக்கு அனுப்பி அங்கு வட்டித் தொழிலில் ஈடுபடுத்த ஏற்பாடு செய்தார்.

சென்னையிலிருந்து கப்பலில் புறப்பட்ட இவருக்கு, உடனேயே காய்ச்சல் வந்துவிட்டது. கப்பல் தலைவராயிருந்த வெள்ளைக்காரர் இதை அறிந்தார். 'இந்தப் பையனுக்கு அம்மை நோய் வந்தாலும் வரலாம். அது மற்றவர்களுக்கும் பரவிவிட்டால் ஆபத்து!' என்று எண்ணி இவரை வழியிலே — அதாவது நாகப்பட்டினத்திலே இறக்கிவிட்டு விட்டார். இவருக்கு ஒரே மகிழ்ச்சி!

இவர் தமது படிப்பைத் தொடர்ந்தார். மேல் படிப்புக்காக இங்கிலாந்து சென்றார். பாரிஸ்டர் பட்டம் பெற்றிருந்தாலும், இவருக்கு வக்கீல் தொழிலில் மனம் செல்லவில்லை. பெரிய பெரிய தொழிற்சாலைகளை நிறுவ வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

கேரளத்தில் ஒரு பாஞ்சாலையை நிறுவினார். மற்றும் பல தொழில்களில் ஈடுபட்டார். பெரும் செல்வத்தைத் திரட்டினார். திரட்டிய செல்வத்தில் பெரும் பகுதியைக் கல்விப் பணிக்கே செலவு செய்தார்.

இவர் கல்விக்காகச் செலவிட்ட தொகை கொஞ்ச நஞ்சமல்ல; 75 லட்ச ரூபாய்!

இவர் பெயரில் காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகத்தை தமிழ்நாடு அரசு விரைவில் அமைக்கப் போகிறது.

இவர், தாம் பிறந்த மாதத்திலே, பிறந்த தேதியிலே மறைந்தது குறிப்பிடத்தக்கது!



அன்னை கஸ்தூரிபா

இந்தியாவின் தந்தை எனப் போற்றப்படும் மகாத்மா காந்தியின் மனைவியான இவர் குஜராத்திலே போர்பந்தர் என்ற ஊரில் பிறந்தார். (பிறந்த தேதி தெரியவில்லை; மாதமும் வருடமும் தெரிகின்றன).

திருமணமான போது இவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனாலும், காந்தி இவருக்கு நல்ல முறையிலே எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தார்.


தென் ஆப்பிரிக்காவில் காந்தி சத்தியாக்கிரகம் நடத்தியபோது, இவர் பெண்களுக்குத் தலைமை தாங்கினார். அதனால், இவரைச் சிறையில் அடைத்தார்கள்.

தீண்டாமை ஒழிப்பு, மது விலக்கு, கதர் இயக்கம், உப்பு சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை இயக்கம் என்று காந்திஜி ஆரம்பித்த எல்லாவற்றிலும் இவர் பங்கெடுத்துக் கொண்டார்.

'வெள்ளையனே, வெளியேறு' என்று 1942 ஆகஸ்ட் மாதம் நடந்த போராட்டத்தில் காந்திஜியையும் மற்ற தலைவர்களையும் கைது செய்து சிறையில் அடைத்துவிட்டார்கள். அதைக் கண்டித்து பம்பாய் சிவாஜி பூங்காவில் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசப் போவதாக இவர் அறிவித்தார். இவரைப் பேசவிடாமல் முன்னதாகவே ஆங்கில அரசாங்கம் கைது செய்துவிட்டது.

ஏற்கெனவே புனாவிலுள்ள அகாகான் மாளிகையில் காந்திஜியைச் சிறை வைத்திருந்தார்கள். அங்கே இவரையும் சிறை வைத்தார்கள். சிறையில் இருந்தபோது, இவரது உடல் நிலை நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டே வந்தது. இறுதியில் காந்திஜியின் மடியில் தலை வைத்தபடி, இவர் மரணமடைந்தார். அன்று மகா சிவராத்திரி!

கீதை உபதேசம்



ஜகத்குரு
ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஜீ

அஸ்தினபுரத்தை ஆண்ட திருதராஷ்டிரனுக்கு நூறு பிள்ளைகள். ஆனால், அவன் கண் தெரியாதவன். அவன் தம்பி பாண்டு அவனுக்காக நாட்டை ஆண்டு வந்தான். திருதராஷ்டிரனின் மூத்த மகன் துரியோதனன். அவன் வயதுக்கு வந்த காலத்தில் பாண்டு இறந்துவிட்டான். துரியோதனன் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தான். பாண்டுவுக்கு தருமன், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்று ஐந்து பிள்ளைகள். அவர்கள் பாண்டவர்கள் என்று அழைக்கப்பட்டனர். துரியோதனனின் சகோதரர்கள் கௌரவர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

சிறுவயதிலிருந்தே பாண்டவர்கள் குருவிற்குப் பணிந்தார்கள். அவர் காட்டும் தர்ம வழியில் சென்றார்கள். அதன் காரணமாக எல்லோரும் அவர்களைப் புகழ்ந்தார்கள். அதனால், மிகச் சிறுவயதிலேயே துரியோதனன் அவர்களைப் பார்த்துப் பொறாமைப்பட்டான். அதிகமான இடையூறுகளைச் செய்தான். அவர்களை வெறுத்தான். அவனுடைய சகோதரர்களும் நண்பனான கர்ணனும் அவனைப் பின்பற்றிப் பாண்டவர்களை வெறுத்து அவர்கள் மீது பொறாமை கொண்டார்கள்.

கௌரவர்கள் செய்த தீமைகளைப் பாண்டவர்கள் பொறுத்துக் கொண்டனர். பாண்டவர்களை அரக்கு மாளிகையில் தங்க வைத்து தீயிட்டனர். தர்மாத்மாக்களான பாண்டவர்கள் கௌரவர்கள் செய்த சூழ்ச்சியிலிருந்து தப்பிவிட்டார்கள். பல்வேறு இடங்களில் மறைந்து வாழ்ந்தார்கள்.

தங்களுக்குக் கிடைத்த நாட்டை அறவழியிலும் திறமையிலும் மிகப் பெரிதாக்கி விட்டார்கள். இந்திரப்பிரஸ்தத்தைத் தலைநகராக்கினார்கள். அவர்களுடைய நேர்மையான ஆட்சியையும் தர்ம வழிகளையும் கண்டு உலகத்தினர் போற்றினர். எல்லோரும் கொண்டாடினார்கள். தர்மம் எங்கு இருக்கின்றதோ, அங்கு வெற்றி இருக்கும். வெற்றி இருக்கும் இடத்தில் கடவுள் இருப்பார். இவையெல்லாம் சேர்ந்த பாண்டவரிடம் கண்ணபரமாத்மா இருந்தார்.

பாண்டவர்கள் இராஜசூய யாகம் நடத்தினார்கள். கௌரவர்களையும் அழைத்தார்கள். யாகமுடிவில் அவிர்ப்பாகம் கண்ணபெருமானுக்கு வழங்கப்பட்டது. ஏற்கெனவே பொறாமை கொண்ட கௌரவர்களுக்கு இச்செயல் வெறுப்பைத் தூண்டிவிட்டது.

நாடு திரும்பிய துரியோதனன் பல இரவுகள் தூங்கவில்லை. பாண்டவர்களை அழிக்கத் திட்டம் தீட்டினான். அவனுக்கு அவனுடைய மாமன் சகுனி துணை செய்தான்.

கௌரவர்கள் பாண்டவர்களை அஸ்தினபுரத்திற்கு அழைத்தார்கள். தர்மரைத் தந்திரமாக சூதாட்டத்தில் ஈடுபடுத்தினார்கள். கெட்டகாலத்தின் காரணமாக தர்மர் சூதாட்டத்தில் நாடு, நகரம், ஆட்சி எல்லாவற்றையும்

இழந்தார்கள். அவர் தங்களைக் காக்கும் தெய்வமான 'கண்ண பெருமானை' நினைக்காதலால் இந்தக் கஷ்டத்திற்கு ஆளானார்கள்.

பாண்டவர்கள் திரும்பவும் நாட்டைப் பெறத் துரியோதனன் இரு நிபந்தனைகள் விதித்தான். 1. பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில் வாழ வேண்டும். 2. ஓர் ஆண்டு எவரும் அறியாமல் மறைந்து வாழவேண்டும்.

இந்த நிப்ந்தனைகளைப் பாண்டவர்கள் ஏற்றுக் கொண்டனர். கண்ண பிரானின் கருணையால் எல்லாத் துன்பங்களையும் வென்று மீண்டு வந்தார்கள்.

இதைக் கண்டும் துரியோதனன் பொறாமைப்பட்டான். அவர்களை முன்னைவிட அதிகம் வெறுத்தான். அவர்களை அழிக்கத் துடித்தான். பாண்டவர்கள் தாங்கள் இழந்த நாட்டை மீட்கக் கண்ணபெருமானை அனுப்பினார்கள்.

கண்ணபிரான் நாட்டைக் கேட்டார். துரியோதனன் மறுத்தான். ஐந்து வீடுகளையாவது கொடுங்கள் என்று கேட்டார். ஊசி குத்துகின்ற இடத்தைக் கூடத் தர துரியோதனன் மறுத்து விட்டான்.

அதனால் குருக்ஷேத்திரத்தில் போர் ஏற்பட்டது. உறவினர்களைக் கொல்ல அருச்சுனன் தயங்கினான். அவனுக்குத் தேரோட்டிய கண்ண பெருமான் புகழ் பெற்ற கீதையை உபதேசித்து தயக்கத்தை விரட்டினார்.

போரின் முடிவில் கௌரவர்கள் அனைவரும் அழிந்தார்கள். அவர்கள் தேவையில்லாமல் கொண்டிருந்த பொறாமையும் வெறுப்பும் அவர்களை அழித்து விட்டன. பொறாமை, தன்னைக் கொண்டவனையும் அவனைச் சார்ந்தவர்களையும் அழித்து விடும் என்பதற்குக் கௌரவர்கள் உதாரணமாவார்கள்.

பாண்டவர்கள் கண்ணபெருமான் காட்டிய வழியில் நீண்ட காலம் ஆட்சிபுரிந்தார்கள்.

குறள் வர்க்கு

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம், உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.





தேசப் பற்றை வளர்க்கும் தொடர்கதை

* இளைய பாரதத்திற்கு ஒரு நல்ல படிப்பினை. சத்ரபதி சிவாஜியின் தேச பக்தி, தெய்வ பக்தி, குரு பக்தி, அஞ்சாநெஞ்சம் ஆகியவை நமக்குச் சிறந்த உதாரணங்களாக விளங்குகின்றன.

—எம். கிருஷ்ணா, சேலம்.

* சத்ரபதி சிவாஜியின் கதையை ஆலந்தியின் வார்த்தைகளாலும் வினுவின் படங்களாலும் படித்துப் பார்த்தபின், எனக்குள் வீர உணர்ச்சி தோன்றுகிறது.

—அ. முஹம்மது நிஜாமுத்தீன், ஜின்னா நகர்.

* 'பெற்றோருக்கு அடங்கிய பிள்ளை' யான சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களின் 'குழந்தைப் பருவம்' கட்டுரை 'முயற்சியுடையார் மேன்மை பெறுவார்' என்பதை நன்கு வலியுறுத்துகிறது.

—சி. டி. லலிதா, மதுரை—1.

* 'அறுந்து போன செருப்பு' கதையில் செருப்பைப் பற்றி அருமையாக எடுத்துக் கூறி, இடையிடையே இராமாயணம், மகாபாரதம் பற்றியும் விளக்கிக் கூறிய ஆசிரியர் எம். கருப்பையா அவர்களுக்கு நன்றி.

—எச். சாயிரா பேகம் (4582), லால்குடி.

* எம். சோலையன் அவர்களின் 'பனிமனிதனுடன் பத்து நொடிகள்' கதையில், 'நாங்கள் பெரியவர்களாகி மீண்டும் திரும்பிவருவோம்' என்று கூறுகிறான் பஞ்சம்பட்டி பஞ்சு. என்னையும் அப்போது மறக்காமல் கூடவே அழைத்துச் செல்லும்படி பஞ்சுவுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

—ச. பத்மநாபன் (8406), கோவை.

* 'நேர்த்திக் கடன்' படித்துவிட்டு கடவுள் நம்பிக்கை இல்லாத என் நண்பன் கூட கோயிலுக்குப் போய்வரத் தொடங்கிவிட்டான்.

—சி. பாலசந்தர் (6981), சென்னை—94.

* 'கோகுலம்' பொழுது போக்குப் புத்தகம் என்பதுபோல், சென்ற இதழில் கூறினீர்கள். ஆனால், அது தவறு. பள்ளிப் பாடங்களுக்கு நிகரான அறிவுரைப் புத்தகம் 'கோகுலம்' என்பதை நான் ஐயமின்றிக் கூறுவேன்.

—எஸ். கோகுலகிருஷ்ணன் (7785), திருக்கோகர்ணம்.

* 'என்கிட்டே வாலாட்டாதே!' கதை நல்ல நகைச்சுவைக் கதை. 'சிறுமி அளித்த பதில்' ஆசிரியருக்கே பாடம் கற்பித்துவிட்டாள் அந்தச் சிறுமி.

—சே. துர்காதேவி (7753), சென்னை—14.

* 'ஒரு பூனை புலியாகிறது!' தொடர்கதை தேசப்பற்றை என் போன்ற மாணவர்களிடையே வளர்க்கிறது. தேசத்தின் அருமையை உயிர் கொடுத்தேனும் காக்க வேண்டும் என்பதை, இன்றைய மாணவர்கள் நன்கு உணர வேண்டும். ஏன் எனில், இன்று முக்கியப் பொறுப்பில் உள்ளவர்கள் பகைவனுக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்கும் பாதகச் செயலில் இறங்கிவிட்டார்களே! இதைத் தவிர்க்க இக்கதை பெரிதும் உதவும்.

—பொன். கல்விவாணன், இராஜபாளையம்

* 'ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே நாடு காக்கும் தலைவராய் நாளை விளங்கப் போகிறார்' எப்படி? 'கோகுலம்' போன்ற சிறப்புமிக்க இதழ்களையும், உயர்ந்த புத்தகங்களையும் படித்தால், தலைவராக வருவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

—எஸ். கோபால், திருவள்ளூர்.

* 'அம்புலியில் அணுகுண்டு' ராக்கெட் போல் படிப்பதற்கு வேகமாகவும் அபாரமான கற்பனையுடனும் இருந்தது. கல்யாண வெங்கடேசன் அவர்களுக்குப் பாராட்டு.

—தேரழுந்தூர், சி. சுப்பு.


* 'திருக்குறள் புதிரை நிறுத்திவிட்டோம்' என்றதும் திகைத்துவிட்டோம். மறுகணமே, 'சித்திரப் புதிர் தொடர்கிறது' என்று படித்ததும் சற்று மனம் ஆறுதல் அடைந்தது.


—என். சந்திரன் (4785), என். இராஜசிம்மன் (4818), கே. கோபாலகிருஷ்ணன் (6606), ஆத்தூர்.

* 'கேளுங்கள் சொல்லுகிறோம்' பகுதி மூலம் சிறுவர்கள் மட்டுமல்ல: பெரியவர்கள் கூட ஏராளமான விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

—ஹேமதாசன், உடையார்கோயில்.

சார், தபால்!






ஃபிலிகா, என் நண்பன்


ஆங்கிலமூலம்: மேரி ஓ.ஹாரா

தமிழ்வடிவம்: ஆனந்தி

படம்: விஜு









நான் அதன் விலாவில் உதைத்தது தவறு... குதிரை கீழே தள்ளி விட்டது என்று தெரிந்தால் எனக்குத் திறமை இல்லை என்று அப்பா கோபித்துக் கொள்வார்.
கென் வீட்டை அடைந்தான். அம்மா வரவேற்றாள்.
சீக்கிரம் வா கென்! பசிக்கலை?
அப்பாவும் அண்ணனும் உணவருந்திக் கொண்டிருந்தனர். அப்பாவுக்கு எதிரே மேஜையில் பள்ளிக் கூடத்திலிருந்து வந்திருந்த பிராக்ரஸ் ரிப்போர்ட்!
கணக்கில் 17, சரித்திரம் 40. இங்கிலீஷில் சுழி. எப்பேர்ப்பட்ட சாதனை!
அம்மா துணைக்கு வந்தாள்.
அவன் முதலில் சாப்பிடட்டுமே.
ஆங்கிலத்தில் எப்படி சைபர் வாங்கினாய்? ஒரு வரி கூட எழுதலையா!
நமது முதல் தர குதிரைகளான பானர் ஆல்பினை இரண்டையும் பற்றி நினைச்சுண்டே இருக்கச்சே மணி அடித்து விட்டது.



தந்தை பெருமூச்சுடன் எழுந்தார்.
இன்று குதிரைகளை மடக்கி வேலித் திடலில் அடைக்க வேண்டும்.
அப்பா! நாங்களும் வருகிறோம்.
வேண்டாம்! நாலு குதிரைகளை வளைத்துப்பிடிக்கும் போது விவரந் தெரியாதவர்கள் குறுக்கே வந்தால் அவர்கள் அதோ கதிதான்.
"எனக்கு ஒரு குதிரைக் குட்டி வேணும்ப்பா.
உனக்குப் பொறுப்பே வரலே. உன்னை நம்பி ஒரு குதிரைக் குட்டியை எப்படித் தருவது?
எனக்குப் பத்து வயசாச்சு. இப்போ நீங்க கொடுத்தா அதைப் பழக்கி ஏறி சவாரி செய்ய மூணு வருஷம் பிடிக்கும். எனக்குப் பதிமூணு வயசாயிடும்.
அட! உனக்குக் கணக்குப் போடத் தெரியறதே! அதிசயம்தான்!


அப்பா போனபிறகு கென் பாடம் படிக்க முயன்றான்.
அப்பா குதிரைகளை மடக்கிக் கொண்டு வருவார். அவற்றுக்குப் பயிற்சி கொடுப்பார். அதைப் பார்க்காமல்.....
கென் புத்தகத்தைப்போட்டு விட்டு மூச்சிரைக்க ஓடி ஒரு குன்றின் மீது ஏறினான்.
தொலை தூரத்தில் "கோட்டைப் பாறை" தெரிந்தது.
அந்தப் பக்கத்திலிருந்து தான் குதிரைகள் வரும்.
கென் சமவெளியை அடைந்தபோது களைத்துப் போய்ப் புல்தரையில் விழுந்தவன் தூங்கி விட்டான்.
குதிரைகள் வரும் குளம்படி சத்தம் கேட்டதும் கென் திடுக்கிட்டு விழித்துக் கொண்டான்.


முதலில் வருவது ராக்கெட்! ஆல்பிரேனவின் பெண் குட்டி. என்ன அழகு?
ஹோ! ஹோ!
ராக்கெட்டால் கவரப்பட்ட கென் அதனருகே குறுக்கே ஓடினன். ராக்கெட் முன்னங்கால்களைத் தூக்கிக் கனைத்தது.
அடுத்த கணம் ராக்கெட் திசை திரும்பி ஓடியது. மற்ற எல்லா குதிரைக்குட்டிகளும் அதைப் பின்தொடர்ந்து பறந்தன.
கென்னுடைய தந்தை தம் குதிரையை வேகமாகச் செலுத்தி ராக்கெட்டை நிறுத்த முயற்சி செய்தார். ராக்கெட் நின்றுவிட்டால் மற்ற குதிரைகளையும் நிறுத்த முடியாது.



குதிரைகளின் போக்கில் தான் குறுக்கிட்ட தன் வினையைப் பார்த்த கென் நடுங்கினான்.
அதோ, ராக்கெட் கண் மூடித்தனமாய் ஓடி பள்ளத் தாக்கில் விழப் போகிறது! ஐயோ!
அந்த சமயம் பானர் ராக்கெட்டை நோக்கி ஓடத் தொடங்கியது. மின்னலைப்போலப் பாய்ந்து ...
ராக்கெட்டின் பக்கத்தில் போய் ஒரு இடி இடித்தது; கடித்தது. அதிர்ச்சியடைந்த ராக்கெட் மெள்ள நின்று திரும்பியது.
சிறிது நேரத்தில் பானர் எல்லாக் குதிரைகளையும் பாய்ந்து பாய்ந்து அடக்கி ஒன்று சேர்த்து விட்டது. எல்லாம் பானரின் பின்னால் அடங்கி நடந்தன.
சபாஷ்! பானர்.
அப்பா பார்த்த பார்வையைத் தாங்க முடியாத கென்...
குதிரைகள் வருவதைச் சும்மா பார்க்கத் தான் வந்தேன். நான்... நான்....
ஒரு வார்த்தை பேசாமல் போய் விட்டார் அப்பா! கென் கண்களில் நீர்...
அப்பா மெச்சும்படியாக ஒருகாரியம் கூடச் செய்யத் தெரியவில்லையே எனக்கு!



வீடு திரும்பினான் கென்.
பானர் என்ன அற்பு தமாக ராக்கெட்டை அடக்கிற்று! ராக்கெட்டைப் போல எனக்கு ஒரு குதிரைக் குட்டி கிடைத்தால்...
அன்றிரவு நிலவொளியில் அப்பா, அம்மா, அண்ணன் ஹோவர்ட், தம்பி கென்...
ராக்கெட்டை மட்டும் பிடிக்கவே முடிய வில்லை. ரொம்ப முரட்டுப் பெண் அது.
எத்தனை கயிறு வாங்குவது... எல்லாம் அறுந்து போச்சு.
கயிறு என்றதும் நினைவு வருகிறது. ராக்கெட் கழுத்தில் கட்டின கயிற்றை அவிழ்க்கவே இல்லை. அது எங்கேயாவது சிக்கிக் கொண்டால் ராக்கெட்டுக்கு ஆபத்து.
அதனால் என்ன? ராக்கெட்தான் நமக்கு உதவாத குதிரையாச்சே!
அப்படி நினைக்கவே கூடாது. மிருகங்களை நாம் பிடிக்கிறோம். கட்டிப்போடுகிறோம். அடைத்து வைக்கிறோம். அடிமைப் படுத்தி வேலை வாங்குகிறோம். அவை தற்காப்பை மறந்து விரும்படி செய்கிறோம். அதனால் அவற்றுக்குப் பாதுகாப்பு தருவது நமது கடமை.
சில காலம் சென்று ஒரு நாள் காலை..
கென்! நான் உனக்கு ஒரு குதிரைக் குட்டி கொடுக்கப் போகிறேன்.


நிஜமாகவா? நானே தேர்ந்தெடுக்கலாமா?
நம் பண்ணையில் பதினெட்டு குதிரைக் குட்டிகள் இருக்கின்றன. புதிதாக ஈன்ற குட்டிகள் பதினான்கு. அவற்றைப் பற்றி விவரங்கள் எல்லாம் இதில் குறித்து வைத்திருக்கிறேன்...
ஹையா!
அப்பா! எனக்குக் குதிரை கிடைத்து விட்டது.
எது வேண்டும்? சொல்லு! சீக்கிரமாகப் பிடித்துப் பழக்கத் தொடங்கலாம்.
ராக்கெட்டின் ஒரு வயதுக்குட்டி!
அடக்கடவுளே! நீ இந்த விஷயத்திலாவது புத்திசாலியாக இருப்பாய் என்று நினைத்தேன்.
ராக்கெட்டின் வம்சமே முரண்டு பண்ணுகிற வம்சம்.
ராக்கெட்டின் வேகம் அதன் குட்டிக்கும் இருக்கிறது அப்பா! நேற்று நான் மேய்ச் சரிவில் பார்த்தேன்.




ஃபிலிகாவைப்பழக்குவதற்காகப் பெரிய பட்டிக்குள் தனியாக அடைத்தார்கள்.








ஒரு வேலிச் சட்டம் உடைந்தது. ஃபிலிகா மறுபடியும் தப்ப முயன்ற போது இன்னொரு சட்டமும் உடைந்தது. பிறகு வேலியை எளிதாகத் தாண்டி குதித்து மின்னல் வேகத்தில் மறைந்தது.




கென்! நீ அடக்கிப் பழக்கக் கூடிய ஒரு குதிரையாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்துக் கொள்.
எனக்கு ஃபிலிகாதான் வேணும்.
ஃபிலிகாவின் தாயான ராக்கெட்டைப் பிடித்து விற்பதற்காக எப்படியோ லாரியில் ஏற்றிக் கொண்டு போனார்கள். இது......
... ராக்கெட்டுக்குப் பிடித்த விஷமம். துள்ளியது. பண்ணையின் கேட்டைக் கடக்கும் போது மேல் வளைவில் மோதி.....
... ராக்கெட் இறந்து போயிற்று. ஒரு நாள்...
அம்மா! ராக்கெட் மாதிரியே ஃபிலிகாவும் முரண்டு பண்ணுமா?
பாரம்பரிய குணம் எங்கே போகும்? ராக்கெட் செத்துப் போனதில் அப்பா ரொம்ப வருத்தமாய் இருக்கிறார்...
ஃபிலிகாவைப் பிடிக்க பல நாட்கள் முயன்று தோற்றனர். ராஸ் என்ற குதிரைப் பயிற்சியாளர் வந்த போது....
தனியாக மேய்ந்து கொண்டிருக்கிறது ஃபிலிகா. சுற்றி வளைப்போம்.



சுருக்குக் கயிறில் சிக்கிய
ஃபிலிகாவை இழுத்து வந்து
வேலிக்குள் அடைத்தனர்.
ஃபிலிகா தவிக்க கென்னியும்
வேதனையுற்றான்.
எட்டடி உயரவேலி. ராக்கெட்டைப்
போல இதுவும் தப்ப
முயன்றால் அதோ கதிதான்!
எது நடக்கக் கூடாது
என்று வேண்டினா
களோ அதுவே
நடந்தது. விடுதலை
பெற முயன்ற ஃபிலிகா
இடித்துக் கொண்டு
வேலியோடு விழுந்தது.
ஐயோ ஃபிலிகா!
ஏன் இப்படி செய்தாய்!
ஃபிலிகாவை
வேலியிலிருந்து
விடுவித்தார்கள்.
தண்ணீரும்
கொள்ளும்
வைத்தார்கள்.
அது
நகரவில்லை.
பலத்த அடி.
பிழைக்குமா
என்பதே
சந்தேகம்!
அப்பா வீடு
திரும்பிய
பிறகும் கென்
ஃபிலிகாவை
விட்டு நகர
வில்லை.
எவ்வளவு
காயங்கள்!
ஃபிலிகா!
செத்துப்
போயிடாதே!
எப்படியா
வது பிழைத்து
விடு, பிளீஸ்!


மாலையில் பெரு மழை. அம்மா குடையுடன் வந்து கென்னியை வீட்டுக்கு அழைத்துப் போனாள்.
மறு நாள் காலை கென் வந்து பார்த்தபோது ஆச்சரியமாய் ஃபிலிகா நின்று கொண்டிருந்தது!
ஃபிலிகா! நீ அழகாய் ஓடணும். சமர்த்தாய் இருக்கணும்...
ஆனால் ஃபிலிகாவை கடும் ஜுரம் தாக்கியதால் இளைத்துக் கொண்டே வந்தது... சில நாட்களில்...
இனி இது வாழ்ந்து பயனில்லை. இதன் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய வேண்டியதுதான்.
அப்பா என்ன சொல்கிறார் என்று கென்னிக்குப் புரிந்தது. அடிபட்ட குதிரைகள் படும் துன்பத்திலிருந்து அவற்றுக்கு விடுதலை தர சுட்டுக் கொன்று விடுவார்கள்!
அப்பா வேண்டாம்! இன்னும் இரண்டு நாள் பொறுங்கள். ப்ளீஸ்! ப்ளீஸ்!
இரவு வெகு நேரம் சென்றும் கென் வீடு திரும்பாததால் அண்ணா வந்து இழுத்துக் கொண்டு போனான்...
நீ அதன் பக்கத்திலேயே இருப்பதால் பிழைத்து விடப் போகிறதா என்ன?


நள்ளிரவுக்குப் பின் ஃபிலிகாவுக்குத் தாகமாய் இருந்தது... ஓநாய்கள் அதன் முடிவு நெருங்குவதை அறிந்து ஊளையிட்டன... கென்னியை நினைத்துக் கொண்டது ஃபிலிகா...
தூக்கம் பிடிக்காமல் கென் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான்.
ஃபிலிகா கனைக்கிறது! ஓநாய்கள் ஊளையிடுகின்றன... ஒருவேளை... அப்பா ஃபிலிகாவை சுடுமாறு உத்தரவு போட்டு விட்டாரோ?...
ஓசை எழாமல் கென் வீட்டை விட்டு வெளியேறி ஓடினான்...
ஃபிலிகா! ஃபிலிகா! இதோ வந்து விட்டேன்! பயப்படாதே!
ஆனால் ஃபிலிகாவை விட்ட இடத்தில் காணவில்லை! தேடிக்கொண்டே போனான் கென்...
எங்கே போனாய், ஃபிலிகா?
... ஃபிலிகா ஜுரத்தின் சூடு தணிய ஓடை நீரில் விழுந்து கிடப்பதைப் பார்த்தான்.
ஃபிலிகா! என் கண்ணே! இங்கே இருக்கியா!
கென் தண்ணீரில் இறங்கி அமர்ந்து ஃபிலிகாவின் தலையை எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டான். ஃபிலிகா கண் திறந்து பார்த்தது....
கவலைப்படாதே கண்ணு! ஜுரம் இறங்கிடும்.


கென் செய்த பிரார்த்தனை பலித்தது. ஃபிலிகாவுக்கு ஜுரம் இறங்கியது. குளிர் நீரில் கென்னியின் உடல் மரத்துப் போயிற்று...
என்னவானாலும் சரி. உன்னைத் தனியே விட்டுட்டுப் போக மாட்டேன்...
சற்றுத் தூரத்தில் ஒரு பசுங் கன்றை காட்டுப் புலி அடித்துக் கொல்வதைப் பார்த்த பிறகும் கென்னி அசையவில்லை. பயத்தில் கண்களை மட்டும் மூடிக் கொண்டான்!
இருள் பிரியும் நேரம். பண்ணையாள் கண் விழித்துக் கொண்டான்...
ஃபிலிகாவை முதல் காரியமாகச் சுட்டு விட வேண்டும். எஜமான் உத்தரவு.
கென் தூங்கிக் கொண்டிருப்பான். அவன் அறியாமல் ஃபிலிகாவைத் தீர்த்துக்கட்ட இது தான் சமயம்.
கடமையாற்ற நடந்தான் கஸ்...
பாவம் அந்தப் பிள்ளை ஃபிலிகாமீது உயிரையே வைத்திருக்கிறது. ஆனால் ஃபிலிகா இன்னும் எத்தனை நாள் வேதனை அனுபவிப்பது...!


ஆனால் ஃபிலிகாவை விட்டு வந்த இடத்தில் அதனைக் காணாமல் கஸ் திகைத்தான்.
எங்கே போயிற்று அந்தக் குதிரைக் குட்டி?
ஃபிலிகாவைத் தேடிப் போனவன் ஓடையை அடைந்த போது...
கென்னி! கென்னி! என்ன காரியம் செய்தாய்? இந்தக் குளிரில் தண்ணீரில் கிடந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்! ஐயோ, உன் உடல் கொதிக்கிறதே!
ஜுரஜன்னி கண்டிருந்த கென்னியை வீட்டுக்குத் தூக்கி வந்தான் கஸ். டாக்டர் வந்து பார்த்தார்.
நிமோனியா... இந்த மருந்து கொடுங்கள்... கடவுளையும் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள்!
இரவும் பகலும் அருமைக் கென்னியைக் கவனித்துக் கொண்டாள் அம்மா.
கஸ் வருத்தமடைந்தான்...
பாவம் கென்னிக்காகவாவது இந்தக் குதிரைக்குட்டி பிழைத்துக் கொண்டால் நல்லது. கடைசி முயற்சியாக தாளி போட்டு நிற்க வைக்கிறேன்...


கஸ் செய்த சிகிச்சை பயன் தந்தது.... டாக்டரின் மருந்தும் வேலை செய்தது...
கென்! ஃபிலிகாவை நீ பார்க்க வேண்டாமா? 'கென்னி எங்கே?' என்று அது தேடுகிறதே!
நிஜமாவா? குணமடைந்து விட்டதா? அப்பா அதைச் சுட்டு விட வில்லையா? இரவு துப்பாக்கி சத்தம் கேட்டதே!
அப்பா சுட்டது மலைப்புலியை. அதன் அட்டகாசம் தாங்காததால் சுட்டார்.
ஃபிலிகாவிடம் கென்னியை அழைத்துப் போனார் அப்பா...
எப்படியோ ஃபிலிகாவைப் பிழைக்க வைத்து விட்டோம். உன்னையும் மரணத்தின் பிடியிலிருந்து மீட்டு விட்டோம்... ஆண்டவனுக்கு நன்றி...
டாக்டருக்கும் தான்... கஸ்ஸுக்கும் உங்களுக்கும் அம்மாவுக்கும் ஃபிலிகாவும் நானும் எத்தனை கடமைப் பட்டிருக்கிறோம்!
கென்னியைப் பார்த்ததும் அவனிடம் ஓடி வந்தது ஃபிலிகா. முரட்டுக் குதிரை சாதுவானதைப் பார்த்து மகிழ்ந்தார் அப்பா.



ஆகாய விமானத்தில் அப்பாவுடன் போனேன்!

"என் பெயர் ஷரீன். நான் ஆறாம் கிளாஸ் படிக்கிறேன். என்னுடைய அப்பா பெயர் காரஸ். அவர் இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தில் 'பிளைட் இஞ்சினியராய்' இருக்கிறார். பம்பாய், டெல்லி, கல்கத்தா என்று பல நகரங்களில் வேலை பார்த்திருக்கிற என் அப்பா, இப்போது சென்னையில் இருக்கிறார்.

எனக்கு ஒரு தம்பி இருக்கிறான். அவனும் நானும் என் அப்பா, அம்மாவுடன் நிறையத்தடவை ஏரோப்பிளேனில் பிரயாணம் செய்திருக்கிறோம்.

நான் ஆறு மாசக் குழந்தையாய் இருந்த போது, முதல் முதலாக விமானத்தில் போனதாய் என்னுடைய அம்மா சொல்லுவார். அதற்கப்புறமும் பல தடவை போயிருக்கிறேனாம். எனக்கு அதெல்லாம் ஞாபகமில்லை; விமானத்தினுள் போனதும் கொஞ்ச நேரத்தில் தூங்க ஆரம்பித்து விடுவேனாம். இப்போதுகூட அடிக்கடி அம்மா அதை நினைவுபடுத்துவார்.

ஐந்தாறு வயதுக்கப்புறம் பிளேனில் போனதெல்லாம் நினைவில் இருக்கிறது.

விமானத்துக்கு, படிகள் வழியாக ஏறி, உச்சிப் படியில் நின்றுகொண்டு கீழே இருப்பவர்களைப் பார்ப்பேன். டீ.வி.யில், மறைந்த நம் இந்தியாவின் பிரதம மந்திரி புறப்படும் போது, சிரித்த முகத்துடன் 'டாடா' காட்டுவாரே, அதுபோல நானும் 'டாடா' காட்டுவேன். (திருமதி. காந்தியை எனக்கு ரொம்பப் பிடிக்கும்.)

விமானத்தினுள், பெரிய சினிமா தியேட்டர் போல, வரிசை, வரிசையாக, பெரிய பெரிய 'சீட்' (இருக்கை)கள் இருக்கும். விமானப் பயணத்தின் போது, எனக்குப் பிடித்த விஷயங்களில் ஒன்று இந்த விமான இருக்கைகள். மெத்து மெத்தென்று அழகாய் இருக்கும், உட்கார்ந்தால் ஜாலியாய் இருக்கும். ஒரு பட்டனை அழுத்தினால், 'சீட்'கள் படிப்படியாகப் பின்பக்கமாய்ச் சாயும். வசதியாய் உட்கார்ந்து கொள்ளலாம்; படுத்துக் கொள்ளலாம்.

பிளேனின் உள்ளே, ஒரே கலர்ப் புடவை, இரவிக்கை போட்டுக்கொண்டு, அழகாக ஒரு 'ஆண்ட்டி' வந்தாங்க. கையிலே ஒரு தட்டு நிறைய 'ஸ்வீட்ஸ்' வைச்சிருந்தாங்க. எனக்கும், என் தம்பிக்கும் நிறைய ஸ்வீட்ஸ் குடுத்தாங்க. எங்களைப் பற்றியெல்லாம் விசாரிச்சாங்க. 'நீங்க யாரு?''ன்னு கேட்டேன்.

"நான் விமானப் பணிப்பெண் (ஏர் ஹோஸ்டஸ்)" என்று சொல்லி விட்டு, அவங்களை மாதிரியே டிரஸ் போட்டிருந்த இன்னும் இரண்டு பேரைக்காட்டி, "அவங்களும் என்னைப் போல ஏர் ஹோஸ்டஸ்" என்று சொன்னாங்க.

"எல்லோருக்கும் ஸ்வீட் குடுக்கிறதுக்கா நீங்க?" என்று என் தம்பி கேட்டான். அதற்கு அந்த ஆண்ட்டி, "ஸ்வீட்ஸ் மட்டுமில்லை; காபி, டீ, ஜூஸ், சாப்பாடு, இதெல்லாம் தவிர பிரயாணிகளுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்யத்தான் நாங்கள்" என்றாள்.

நான் எழுந்து கொஞ்ச தூரம் நடந்து பார்த்தேன். நேராக, வீட்டிலே நடப்பது போல என்னால் நடக்க முடியவில்லை. ஆனாலும், பணிப்பெண்கள் சர்வ சாதாரணமாய் நடப்பது எனக்கு ரொம்பவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. "அவர்கள், ஒரு டிராலியில் சாப்பாடெலாம் வைத்து, துளிக்கூட அசையாமல், கீழே விழாமல் எடுத்துக்கொண்டு போகிறார்களே! இது எப்படி முடிகிறது?" என்றேன் என்னுடைய அம்மாவிடம். என் அம்மா, "அந்த ஆண்ட்டியைக் கூப்பிடுகிறேன். நீயே கேள்" என்றார். ஆண்ட்டி வந்தவுடன், நான் அந்தக் கேள்வியைக் கேட்டேன். என்ன பதில் சொன்னாங்க தெரியுமா?

"நாங்க வேலைக்குச் சேர்ந்ததும், எங்களுக்குப் பயிற்சி தருவார்கள். அப்போது விமானம் ஆகாயத்தில் பறக்கிற போது எப்படி ஆடாமல், கீழே விழாமல் நடப்பது, சாப்பாடு, ஜூஸ், காபி, டீ எல்லாம் கீழே சிந்தாமல் எப்படிக் கொண்டு போவது என்றெல்லாம் சொல்லித் தருவார்கள். நாங்களும் நடந்து பழகுவோம்."


நான் உட்கார்ந்திருந்தது ஜன்னல் பக்கத்து ஓரமான சீட். எப்பவுமே, நான் பஸ், டிரெயினில் போகும் போது, ஜன்னலுக்குப் பக்கத்து சீட்டில் உட்கார்ந்து கொண்டு, வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டே பிரயாணம் செய்வேன். அதுபோலவே விமானப் பிரயாணத்தின் போதும், வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டு போகலாம் என்று ஆசையாய், வெளியில் எட்டிப் பார்த்தேன். நல்ல உயரத்தில் போகும் போது என் கண்களுக்குத் தெரிந்தது வெறும் ஆகாயம்தான். ஆனால், தாழ்வாகப் பறந்த போது, வீடுகள், மனிதர்களெல்லாம் பொம்மைகள்போல் தெரிந்தார்கள்!"

ஒவ்வொரு இருக்கையிலும் டெலிபோன் மாதிரி ஒன்று இருக்கும். ஏதாவது வேணுமானா, அதன் மூலமா ஏர்ஹோஸ்டஸ் கிட்டே சொல்லலாம். நான் அடிக்கடி அந்த போனில், "ஹலோ! ஏர் ஹோ ஸ் ட ஸ் ஆண்ட்டி"ன்னு கூப்பிட்டுவிட்டு வைச்சிடுவேன். அம்மா, "இது தப்பு. அனாவசியமா அவங்களைத் தொந்தரவு செய்யக் கூடாது. ஏதாவது தேவையா இருந்தா, அவங்களை, போனில் கூப்பிட்டுச் சொல்லணும்" என்று கண்டிச்சாங்க.

பயணத்தின் போது, படிப்பதற்காக நிறைய நியூஸ் பேப்பர்கள், பத்திரிகைகள் எல்லாம் தருவாங்க. விமானத்தின் உள்ளே, படிப்பதற்கு வசதியாகப் பளிச்சென்று, பிரகாசமான வெளிச்சம். பஸ்ஸில் போகும்போது படிப்பதற்குக் கஷ்டமாய் இருக்குமில்லையா? ஆனால், பிளேனில் அதுபோல இல்லை. வீட்டில், சோபாவில் உட்கார்ந்து படிப்பது போல இருந்தது. விமானத்தினுள் இந்தியன் ஏர் லைன்ஸ் நிறுவனம் நடத்துகிற அழகான போட்

பிறந்தநாள் பாட்டு

பிறந்த நாளின்போது 'ஹாப்பி பர்த்டே டு யூ' (Happy birth day to you) என்று பாடுகிற வழக்கம் உலகம் முழுவதும் பரவிவிட்டது.



இந்தப் பாட்டை எப்போது யார் இயற்றினார்கள்?

1893—ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள பெட்டி ஹில், மில்ட்ரெட் என்ற இரு சகோதரிகள் இயற்றினார்கள். 1935—ல் அவர்கள் இந்தப் பாட்டின் உரிமையைப் பதிவு செய்து கொண்டார்கள். சினிமா, ரேடியோ நாடகம் இவற்றில் இப்பாட்டைப் பாடினால், அவர்களுடைய சந்ததியாருக்கு உரிமைத் தொகை தரவேண்டுமாம்!

-எஸ். விஜயா, திருச்சி—14



டோக்கள் நிறைந்த 'ஸ்வாகத்' என்கிற பத்திரிகையும் கொடுத்தாங்க. அதை முழுக்கப் பார்த்தேன். ரொம்ப நல்லா இருந்தது.

விமானத்தில் பயணம் செய்கிற போது ஜாலியாய் மியூஸிக் கேட்கவும் வசதி உண்டு.

விமானம் மேலே கிளம்பும்போது, சீட்டில் இருக்கிற ஒரு பெல்ட்டை, இடுப்பில் கட்டிக் கொள்ளச் சொன்னார்கள். என் அம்மா எனக்கு பெல்ட்டைக் கட்டிவிட்டார்கள். ''ஏன் பெல்ட் கட்டிக் கொள்ள வேண்டும்?'' என்று அம்மாவைக் கேட்டேன். மேலே கிளம்பும்போது, உனக்குக் கீழே தள்ளாடி விழுவது போல ஒரு உணர்ச்சி இருக்கும். அதனால்தான் சீட்டுடன் கட்டிக் கொண்டுவிட வேண்டும். பயமிருக்காது'' என்றார். (இதே போலத்தான் இறங்கும்போதும் பெல்ட்டால் கட்டிக் கொண்டேன்.)

''விமானம் ஓட்டுகிறவர் அறைக்குள் அழைத்துப் போய்க் காட்டுகிறேன்'' என்று என் அப்பா என்னிடம் ஏற்கெனவே சொல்லியிருந்தார். என் அப்பாவுக்கு அதை ஞாபகப்படுத்தினேன். எங்கள் இரண்டு பேரையும், இரண்டு கைகளிலும் பிடித்துக் கொண்டு, நடத்தி ஒரு அறைக்குள் அழைத்துக் கொண்டு போனார்.

அங்கிருந்த இரண்டு பேரையும் 'விமானி' (பைலட்) என்று அறிமுகப் படுத்தினார்.

எங்கள் இரண்டு பேரையும் அங்கே உட்கார வைத்தார்கள். விமானம் பற்றி விளக்கமாய்ச் சொன்னார்கள். என் தம்பியும், நானும் அவர்களை நிறையக் கேள்விகள் கேட்டோம். அவர்கள் பதில் சொன்னார்கள். சில விஷயங்களை, ''இது உங்களுக்குப் புரிகிறது கஷ்டம். பெரியவர்களானால் நன்றாய்ப் புரியும்'' என்றார்கள்.

இரவு நேரத்தில் விமானத்திலிருந்து நிறைய 'லைட்' எரிவதைப் பார்ப்பது குஷியாய் இருக்கும்.

விமானம் மேகங்களுக்கு நடுவில் போகும்போது, நிறைய சப்தம் வரும்.

ரோடில் கார் போகும்போது, மேடு, பள்ளங்கள் காரணமாய் ஏறி, இறங்குவது சகஜம் அல்லவா? அது போல, ஆகாயத்தில் பறக்கும்போது கூட, சில சமயங்களில் காற்றழுத்தம், உஷ்ணம் காரணமாக, விமானம் லேசாக மேலும், கீழுமாய் ஆடுவதுண்டு என்று அந்த பைலட் மாமா சொன்னார்.

ஒவ்வொரு விமானத்திலும் இரண்டு பைலட்களும், ஒரு ஃப்ளைட் இஞ்சினியரும் இருப்பார்கள் என்று என் அப்பா சொன்னார்.

விமானியின் அறையினுள் நிறைய பட்டன்களும், குமிழ்களும் இருக்கும். குமிழைச் சிறிது திருப்பினாலும் கூட, விமானம் அப்படியே திரும்புமாம்.

விமானத்தில், பைலட்டின் அறைக்கு ''காக் பிட்'' என்று பெயராம். ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு, பார்ப்பதைவிட, 'காக்–பிட்'டிலிருந்து பார்த்தால் நிறையப் பார்க்க முடிகிறது.

விமானத்தில், என் அப்பா போன்ற ஃப்ளைட் இன்சினியர்களுடைய வேலை என்ன தெரியுமா? விமானத்தில், எலெக்டிரிக், எலெக்டிரானிக் மற்றும் இயந்திர சாதனங்கள் எல்லாம் சரிவர வேலை செய்கின்றனவா என்று கவனித்துக் கொள்ள வேண்டியதுதான்.

''சாதாரணமாய், பூமியில் பிரயாணம் செய்யும்போது, ரோடு இருக்கிறது; ரயிலுக்குத் தண்டவாளங்கள் இருக்கின்றன. இதனால் வழி தெரிகிறது. ஆகாயத்தில் அது மாதிரியெல்லாம் ஒன்றுமே கிடையாதே? நீங்கள் எப்படி வழிதவறாமல் போகிறீர்கள்?'' என்று கேட்டேன் பைலட் மாமாவிடம். அவர் ''நீ புத்திசாலிப் பெண்! நல்ல கேள்வியெல்லாம் கேட்கிறாய்! ஆனால், இதில் ஒரு கஷ்டம் என்னவென்றால் நான் இதற்குச் சொல்லுகிற பதில் உனக்கு முழுசாய்ப் புரியாது. பள்ளிக்கூடத்தில் 'காம்பஸ்' கருவி பற்றிப் படித்திருப்பாயே! அதன் உதவியால், திசைகளை, அறியலாம் அல்லவா? அதைத்தான் இங்கேயும் பயன்படுத்துகிறோம். 'ராடார்' என்று ஒரு சாதனம் உண்டு. அதுவும் விமானத்தை ஓட்டுவதுடன் சம்பந்தப்பட்ட ஒரு முக்கியமான கருவி'' என்றார் பைலட் மாமா.

''இன்னொரு விஷயம் தெரியுமா? ஒவ்வொரு விமானத்திலும் இரண்டு எஞ்சின்கள் இருக்கும்.'' என்றதும் என் தம்பி, ''ஏன், ஒரு எஞ்சின் போதாதா?'' என்று கேட்டான். அதற்கு இன்னொரு பைலட் மாமா, லேசாகச் சிரித்துவிட்டு,

''ஒரே எஞ்சின் போதும். வானத்தில் பாதி வழி போய்க் கொண்டிருக்கும்போது, திடீரென அந்த எஞ்சின் பழுதாகிவிட்டால், என்ன செய்வது? விமானம் அவ்வளவு மேலே இருந்து கீழே விழுந்தால்... ஓ!... பயங்கரம்! அதனால் அந்த மாதிரியான நெருக்கடியான சமயங்களில், இன்னொரு எஞ்சின் தானாகவே, வேலை செய்ய ஆரம்பித்துவிடும். எதற்கு இரண்டு எஞ்சின்கள் என்பது இப்போது புரிகிறதா?'' என்றார்.

அடுத்து விமானத்தின் இன்னொரு அறைக்கு என் அப்பா எங்களை அழைத்துக் கொண்டு போனார். அது தான் விமானத்தின் சமையல் அறை. அங்கே பெரிய அடுப்பு. சைவ, அசைவ உணவு வகைகள் எல்லாம் சுடச்சுட, கமகமவெனத் தயாராகிக் கொண்டிருந்தன. விமானப் பயணத்தின்போது, பிரயாணிகளுக்கு, விமானத்திலேயே உணவு தயார் செய்து கொடுப்பதற்காகவே இது!''

விமானத்திலேயே கழிவறை வசதியும் உண்டு.

விமானம் முழுவதையும் சுற்றிப் பார்த்துவிட்டு, நிறைய விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டோம் நாங்கள்.

எல்லாவற்றுக்கும் கடைசியில் என் தம்பி, எங்களிடம் பெருமையுடன் சொன்னான்: ''நான் பெரியவனானதும் பைலட் ஆகப் போகிறேன்.''

பேட்டிக்கட்டுரை: **எஸ்.சந்திரமௌலி**



ஆனை விலை

''தக்காளி கிலோ என்ன விலை?''

''பதினைந்து ரூபாய்!''

''என்னய்யா இது! ஆனை விலை சொல்றியே!''

''ஆனை இருந்தாலும் ஆயிரம் பொன். இறந்தாலும் ஆயிரம் பொன். தக்காளி அழுகிட்டால் என்ன விலை போகும்?!''

—'கீதா.



இன்று பள்ளிக்குப் போகமாட்டேன்

பூதலூர் முத்து

"அம்மா, இன்றைக்கு என்னால் பள்ளிக்கூடத்துக்குப் போக முடியாது". என்று முகத்தைச் சுளித்துக் கொண்டே சொன்னாள் புவனா.

"ஏன்... என்ன காரணம்?" என்று கேட்டாள் அவளுடைய அம்மா வேதாம்பாள்.

"என்னுடைய செருப்பைப் பாருங்களேன். இந்த வார் அறுந்துபோய் விட்டது. வார் ஏற்கெனவே நைந்து போயிருந்தது. நானும் விஜியும் ஓடி வரும் போது அவள் என்னுடைய காலில் தவறுதலாக மிதித்துவிட்டாள். அப்போது அறுந்துபோய்விட்டது. பையில் எடுத்து வைத்துக் கொண்டு வந்தேன். வீட்டுக்கு வந்ததும் சொல்ல நினைத்தேன். மறந்து போய்விட்டேன்."

"சரி...' பரவாயில்லை... இன்று பள்ளிக்கூடத்துக்குப் போய்விட்டு வா... நான் கலைவாணனிடம் சொல்லிச் செருப்பைத் தைத்துவைக்கிறேன். நாளைக்குப் போட்டுக் கொண்டு போகலாம்..." என்றாள் வேதாம்பாள்.

புவனாவின் முகம் சுருங்கிவிட்டது.

அவள் அப்படித்தான்! புத்தகப் பையின் கைப்பிடி பிய்ந்து போகக் கூடாது. பிய்ந்து போனால் உடனே பள்ளிக் கூடம் புறப்படுவதற்குமுன் தைத்துக் கொடுத்துவிட வேண்டும். சட்டையில் ஒரு பொத்தான் போய் விட்டால் உடனே தைத்துத் தர வேண்டும். அதுவும் அந்த வரிசையில் பொத்தான்கள் என்ன நிறமோ அதே நிறத்தில்தான் வைத்துத் தைத்துத் தர வேண்டும். 'அவசரத்துக்கு ஊக்குப் போட்டுக் கொண்டு போய்வா அம்மா' என்றால் கேட்கவே மாட்டாள்.

அணிந்திருந்த பாவாடை என்ன நிறமோ அதே நிறத்தில் சட்டை அணிய வேண்டும் என்று விரும்புவாள். சில சமயங்களில் வேலைக்காரி அந்த நிறப் பாவாடையைத் துவைத்துவிட்டுச் சட்டையை அழுக்கில் போட்டிருப்பாள்.

புவனா பாவாடையைக் கட்டிக் கொண்டு சட்டையைத் தேடுவாள். "இருக்கிற வேறு ஏதாவது ஒரு சட்டையைப் போட்டுக் கொண்டு போ அம்மா" என்று வேதாம்பாள் சொல்வாள். அவள் அழத் தொடங்கிவிடுவாள்.

சட்டை கிடைத்தாலும் பிரச்னை ஓயாது. சட்டையின் நிறத்துக்கே வளையல் போட்டுக் கொள்ள வேண்டும் என்பாள். அதற்காகவென்றே நேரமும் செலவழித்து உரிய வளையல்களைத் தேடுவாள்.

அவளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பூவதற்குள் 'போதும் போதும்' என்று ஆகிவிடும்.

* * * * *

"வெறுங்காலோடு நான் பள்ளிக்கூடத்துக்குப் போக மாட்டேன். எல்லோரும் என்னைக் கிண்டல் செய்வார்கள்..." என்றாள் புவனா.

"வார் பிய்ந்து போவதும் அறுந்து போவதும் இயல்புதானே.. இதற்கா கிண்டல் செய்வார்கள்..போய்வா" என்றாள் வேதாம்பாள்.

"புவனா... பள்ளிக்கூடத்துக்கு நேரமாகிவிட்டது. நேரத்தில் போ... இப்போது எனக்கு வீட்டில் நிறைய வேலை இருக்கிறது.. நீ திரும்பி வரும்போது செருப்பைத் தைத்துக் கொண்டுவந்து வைத்திருப்பேன்..." என்றான் கலைவாணன்.

அவன் அந்த வீட்டுப் பணியாள்.

"வழியில் கல்லும், முள்ளும் குத்தும்... பள்ளிக்கூடத்துக்குப் போனால் கல்யாணியும், ரோஸியும், பாத்திமாவும் 'ஏண்டி இப்படிப் பஞ்சப்பாட்டுப் பாடுகிறாய்?' என்பார்கள். எங்க டீச்சர் பொன்மணி எல்லாவற்றிலும் ஒழுங்கை எதிர்பார்க்கக் கூடியவர்கள். இப்படி அழகாக 'மேக்ஸி' போட்டுக் கொண்டு காலில் யாராவது செருப்பில்லாமல் வருவார்களா? நான் இன்றைக்குப் போக மாட்டேன் அம்மா... செருப்பு தயாரானதும் நாளைக்குப் போகிறேன்..." என்றாள்.

அவள் ஒன்றும் மசிவதாகக் காணோம்; உள்ளத்தின் பரபரப்பை முகம் தெளிவாகக் காட்டியது. அவளுடைய பிடிவாதத்தைக் கண்டு வேதாம்பாள் திகைத்து நின்றாள்.

கலைவாணனைத் தனியே அழைத்து, "வீட்டு வேலைகளைப் பார்த்துக் கொள்ளலாம். நீ அவளுடைய செருப்பை எடுத்துக் கொண்டு போய் நல்லமுறையில் தைத்துக் கொண்டு வா. மதியமாவது அவளைப் பள்ளிக்கு அனுப்பி வைக்கலாம்" என்று சொல்லி அனுப்பி வைத்தாள் அவள்.

* * * * *

"புவனா... இந்தா உன்னுடைய செருப்பு. கலைவாணன் நன்றாகத் தைத்துக் கொண்டு வந்திருக்கிறான் பார்..." என்றாள் வேதாம்பாள்.

அதைக் கேட்டு முகமலர்ச்சியோடு வெளியே வந்த புவனாவின் முகம் சற்று நேரத்திற்கெல்லாம் சுருங்கிவிட்டது.

"என்னம்மா புவனா... ஏன் உன் முகம் அப்படிக் கோணிவிட்டது?" என்றாள் அம்மா.

"இதைப் பாருங்களேன்.. அறுந்து போன வார் சிவப்பு நிறம். அதே நிறத்தில் இல்லாமல் காவி நிறத்தில் போட்டுத் தைத்திருக்கிறான். இவனும் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறான்" —புலம்பினாள் புவனா.

"உன் செருப்பில் இருந்து அறுந்து போனதை ஒட்டுப் போட்டுத் தைத்தால் நன்றாக இருக்காது என்று இந்த வாரைப் போட்டுத் தைத்துக் கொடுத்தான். அவனிடம் இருக்கிறதைத் தானேம்மா தைத்துத் தர முடியும்?" என்றான் கலைவாணன்.

"அவனைத் தவிர செருப்புத் தைக்கிற ஆள் வேறு யாருமே இல்லையா?"

"ஏன் இல்லை... இந்த நிறத்தில் தான் வேண்டும் என்றால் நீ நாளைக்கும் பள்ளிக்கூடம் போக முடியாது. நானும் அலைய வேண்டும்."

"அதற்குப் புதுச் செருப்பே வாங்கி விடலாம் அம்மா" என்றாள் புவனா.

"செருப்பு நன்றாகத்தானேம்மா இருக்கிறது. ஒரே ஒரு வார் அறுந்து போனதற்கு... இப்படி அவஸ்தைப் படுகிறாயே... அதையும்தான் நன்றாகத் தைத்துக் கொண்டு வந்துவிட்டான்... வார் கொஞ்சம் நிறம் மாறியிருந்தால் என்ன? இதற்கெல்லாம் பதற்றப்படக் கூடாது. கவலைப்படக் கூடாது. ஒரு மாதம் போகட்டும்... புதுச் செருப்பு வாங்குவோம்..." என்றாள் வேதாம்பாள்.

அதைக் கேட்டும் புவனா ஆறுதல் அடையவில்லை. புதுவைக்குப் போயிருக்கும் அவளுடைய தந்தையின் வருகைக்காகக் காத்திருந்தாள்.

* * * * *

புவனாவின் தந்தை ஆறுமுகம் புதுவையிலிருந்து வந்துவிட்டார்.

அவர் வந்ததும் வராததுமாகப் புவனு ஓடிப் போய்த் தன்னுடைய செருப்புப் 'புராண'த்தைப் பாடினுள்.

அவர் இயல்பாகவே இரக்க சிந்தை மிக்கவர்; தம் குழந்தைகள் சிறுதுன்பம் கூடப்படக் கூடாது என்று எண்ணுபவர். குழந்தைகள் எள் என்பதற்கு முன்னுலேயே எண்ணெய் ஆகிவிடுவார்.

"இவ்வளவுதானு?... தூக்கிப் போடும்மா அந்தச் செருப்பை... வா என்னோடு... நல்ல கடையாகப் பார்த்து உனக்கு வேண்டிய செருப்பை வாங்கி வருவோம்..." என்ருர் அவர்.

வேதாம்பாள், "இந்தச் செருப்புக்கு என்னங்க... அவள்தான் புரியாமல் பேசுகிருள் என்ருல் நீங்களும் அவளுக்கு ஆதரவு கொடுக்கிறீர்களே! மிகவும் செல்லம் கொடுக்கக் கூடாதுங்க... பின்னுல சிறு துன்பம் என்ருல்கூட துவண்டுவிடுவாள்... பொறுப்போடு நாம் அவளை வளர்க்க வேண்டாமா?" என்ருள்.

"சிறுபெண் அவளுடைய ஆசையை ஏன் கெடுக்க வேண்டும்?" என்று சொல்லிவிட்டுக் கடைக்குப் புறப்பட்டுவிட்டார். அவருக்கு முன்னுல் புவனு போய்க் கொண்டிருந்தாள்.

* * * * *

மறுநாள்—

அழகிய உடையை அணிந்து கொண்டு அந்தப் புதுச் செருப்புக் கால்களை அலங்கரிக்கப் பள்ளிக்குப் புறப்பட்டாள் அவள்.

'தாச் இப்படியா வீணுக வேண்டும்' என்று வேதாம்பாள் நினைத்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் புவனுவை மகிழ்ச்சியோடு வழியனுப்பி வைத்தாள்.

கலைவாணன் தைத்துக் கொண்டு வந்த செருப்பு நடையில் கிடந்தது.

'யாராவது ஏழைப் பிள்ளைக்குக் கொடுக்கலாம். வெளியே கிடந்தால் எடுத்துக் குப்பையில் போட்டாலும் போட்டு விடுவாள்' என்று எண்ணியவாறே அதைப் பத்திரமாக எடுத்து வைத்தாள் வேதாம்பாள்.



1. ஆங்கிலத்தை ஒரு சிறிதும்
அறியா இங்கி லாந்தரசன்
பாங்காய் ஆண்டான் அந்நாட்டைப்
பதின்மூன் ருண்டு. மன்னன்யார்?

2. விலங்கு வகையில் நீர்அருந்தா
விலங்கின் பெயரை அறிந்திட்டால்
கலக்கம் ஏதும் இன்றிஎன்றன்
காது கேட்கக் கூறிடுவாய்?

3. 'கரன்சி நோட்டாம்' பணத்தாளைக்
கண்டு பிடித்து வெளியிட்ட
பெருமை எந்த நாட்டிற்காம்?
பேசு, வாயைத் திறந்துடனே.

4. அறுத்துப் போட்ட அடிமரத்திற்கு
ஆன வயதை எந்தவிதம்
அறிய லாகும் என்பதைநீ
அறிந்தால் சொல்லுக, விரைவாக?

5. பாட்டுப் பாடும் இசைத்தட்டில்
பதிவு செய்து கோடுகளைக்
கூட்டிப் பார்த்தால் எத்தனையாம்
கோடுக ளென்று சொல்வீரே?

6. பையில் போட்டு வேண்டுங்கால்
பாரோர் இன்று பயன்படுத்தும்
கையில் அடங்கும் கைக்குட்டை
கண்டுபிடித்த காவலன் யார்?

7. உப்புச் சுரங்கம் மிகுதியாக
உள்ள இடந்தான் இந்தியாவில்
இப்போ தெங்கே எனநீங்கள்
எடுத்துச் சொல்ல வல்லீரோ?

8. எண்ணில் ஒன்றை ஆறுமுறை
எடுத்தே ஆண்டு நூறென்னும்
எண்ணின் மதிப்பைத் தெரிவிக்க
இயலும் என்ருல் சொல்லிடுவீர்?

'பிறையணிவோன்' இயற்றிய 'அறிவுக் கேள்விகள்' என்ற புத்தகத்திலிருந்து.

''புவனுவைப் பாரடி... புத்தம் புதுச் செருப்பு...'' என்ருள் விஜயா.

''ஏய் ரமா... அந்தச் செருப்பில் மணிகள் பதித்திருக்கிருர்கள் பார்... வெகு அழகாக இருக்கிறதே...'' என்ருள் கோமளா.

''இதுதான் லேட்டஸ்ட் டிசைன்!'' என்று வர்ணித்தாள், பாத்திமா.

''புவனு... என்ன விலையடி இந்தச் செருப்பு?'' என்று ஆவலோடு கேட்டாள் பிளாரென்ஸ்.

வைத்த கண் வாங்காமல் புவனுவின் கால் செருப்பையே பல பிள்ளைகள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்

வகுப்பு தொடங்குவதற்கான மணி அடித்தது.

ஒலிகள் எல்லாம் அடங்கி அவரவர் வகுப்புகளில் வந்து அமர்ந்தார்கள்.

அடுத்த இரண்டு நிமிடத்தில் அவர்களுடைய ஆசிரியை பொன்மணி வியர்க்க விறுவிறுக்க வகுப்புக்குள் நுழைந்தாள்.

வகுப்பு நேரத்தில் வந்து விட வேண்டும் என்ற பரபரப்பில் அவள் வேகமாக வந்திருக்கிருள் என்பது எல்லோருக்கும் தெரிந்தது.

'ஆசிரியை ஏன் இப்படி வியர்க்க விறு விறுக்க வரவேண்டும்? வீட்டிலிருந்து நேரத்திலேயே புறப்பட்டு விடுவார்களே! என்று சில மாணவிகள் குழம்பினுர்கள்.

பாட்டிலே புதிர்-விடைகள்

1. முதலாம் ஜார்ஜ் மன்னர் (1714—1727).
2. ஆஸ்திரேலியாவில் வாழும் கோலா, நீரை அருந்துவதில்லை. அதற்குத் தேவையான நீரை, அது உண்ணும் ஒரே உணவான ஈக்லிப்டஸ் இலைகளி லிருந்து பெறுகிறது.
3. சைனு
4. மரத்தண்டின் குறுக்கு வெட்டில் காணப்படும் ஒவ்வொரு வளையமும் ஓர் ஆண்டைக் காட்டும். மொத்தம் அமைந்த வளையங்களை எண்ணி மரத்தின் வயதைக் கூறலாம்.
5. ஒரே ஒரு கோடு.
6. இங்கிலாந்து மன்னன் ரிச்சர்டு—2.
7. பஞ்சாப்
8. 99 99/99.

நாற்காலியை விட்டுக் கரும் பலகையை நோக்கி வந்த பொன்மணி 'சுரீர்' என்று காலில் வலிக்கவே பாதத்தைத் தூக்கி கை விரலால் அந்த இடத்தைத் தேய்த்துவிட்டாள்.

பிள்ளைகள் பதற்றத்தோடு அதைக் கவனித்தார்கள்; புவனுவும் பார்த்தாள்.

''என்ன டீச்சர்... காலில் என்ன?...'' என்று குரல் எழுப்பிய வாறே அவளது இருக்கையை நோக்கி வந்தார்கள்.

''பிள்ளைகளே... நீங்கள் பயப்படும்படி ஒன்றுமில்லை... நான் நடந்து வரும் போது ஒரு கூர்மையான சிறு கல் குத்திவிட்டது. அதை அப்போதே எடுத்துப் போட்டுவிட்டேன். அந்த இடத்தில் இப்போது வலி... அவ்வளவுதான்...'' என்ருள் அவள்.

''ஏன் டீச்சர்... உங்கள் செருப்பு எங்கே...? செருப்பு இல்லாமலா நடந்து வந்தீர்கள்?'' என்று கேட்டாள் ரமா.

''ஆமாம் ரமா. இன்று வழக்கம் போல் நேரத்திலேயே வீட்டிலிருந்து புறப்பட்டு விட்டேன். கொஞ்ச தூரம் வந்த பின்னுல் என்னுடைய செருப்பில் ஒரு வார் அறுந்து விட்டது. செருப்புத் தைப்பவர் யாரும் அங்கு இல்லை. ஒரு வார் அறுந்துபோய்விட்டதற்காக செருப்பைத் தூக்கி எறியலாமா?... அதை மட்டும் தைத்துக் கொண்டால் இன்னும் மூன்று மாதம் பயன்படுத்தலாம். அதனுல் செருப்பை எடுத்துக் கொண்டு மறுபடி வீட்டுக்கே போனேன். வீட்டில் வைத்து விட்டுத் திரும்பினேன். பள்ளிக்கு நேரமாகி விடும் என்பதால் வேக வேகமாக நடந்து வந்தேன். வெயில் கடுமையாக இருந்தது. பாதையும் மோசம்... கற்களும் முட்களும் நிரம்பிய பாதை.''

''டீச்சர்... இன்றைக்கு நீங்கள் லீவு போட்டிருக்கலாமே... ஏன் இவ்வளவு தொல்லை?'' — புவனு கேட்டாள்.

''செருப்பு இல்லை என்பதற்காகவோ... பாதை மோசமாக இருக்கிறது என்பதற்காகவோ... வெயில் என்பதற்காகவோ வீட்டில் தங்கலாமா...? ஒருநாள் செருப்பு இல்லா

விட்டால் என்ன...? நம் கடமைதானே நமக்கு முக்கியம்... இது போன்ற சிறு சிறு தொல்லைகள்... துன்பங்கள் வரத்தான் செய்யும்... அதற்காக நம் கடமைகளை... அன்றாடப் பணிகளைக் கோட்டை விடக் கூடாது. தொல்லைகளைப் பொறுத்துக் கொண்டு நம் கடமைக்கே முதலிடம் கொடுக்க வேண்டும்.''

ஆசிரியை சொன்னதைக் கேட்ட புவனாவின் உள்ளம் படபடத்தது. அவள், பொதுவாக வகுப்புக்குச் சொன்ன செய்தியை, தனக்குச் சொல்லப்பட்ட செய்தியாக உணர்ந்து ஏற்றுக் கொண்டாள்.

''ஒரு பொத்தான் இல்லாவிட்டால் ஊக்கைப் போட்டுக் கொண்டு பள்ளிக்கு ஓடி வரலாம்... தைத்துக் கொண்டு வந்த செருப்பில் வாரின் நிறம் வேறு என்பதற்காக மறுக்காமல் அதைப் போட்டுக் கொண்டு வரலாம்... இவற்றையெல்லாம்விட படிப்பு முக்கியம்... கடமை முக்கியம்..

தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள் புவனா.

வீட்டுக்கு வந்ததும் வராததுமாக, ''அம்மா... என்னுடைய பழைய செருப்பு எங்கே அம்மா?'' என்று கேட்டாள் அவள்.

வேதாம்பாள் ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

''அதையே நாளை முதல் போட்டுக் கொண்டு போகிறேன். அது தேய்ந்து போய்ப் பயன்படுத்த முடியாமல் போகும் போது இந்தச் செருப்பைப் போட்டுக் கொள்வேன்... இதைப் பத்திரமாக வைத்திருங்கள் அம்மா...''

புவனாவிடம் ஏற்பட்ட மாற்றம் அவளுடைய அம்மாவிடம் மேலும் வியப்பை ஏற்படுத்தியது.



பொன் மொழிகள்

துணியுங்கள்! துணியுங்கள்! இந்த உலகத்தையே ஆளப் பிறந்தவர்கள் நாம் என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்.

* * *

அன்பு, பணிவு, நேர்மை, நன்றி, நம்பிக்கை உடையவராக இருங்கள். இறைவனையே நம்புங்கள். உங்களை யாராலும் வெல்ல முடியாது.

* * *

புகழ், இகழ் ஆகியவற்றைக் கருதாது என்றும் உண்மையைக்கொண்டு செய்கின்ற தியாகமே தியாகங்கள் அனைத்திலும் சிறந்தது.

* * *

நீ ஒருவருக்கு உதவி செய்தால், அந்த உதவி செய்ததற்கு உனக்கு சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணிச் சந்தோஷப்படு; மன நிம்மதி பெறுவாய்.

* * *

தனக்குத்தானே நன்மை செய்து கொண்டு இன்ப உலகிற்குச் செல்வதைவிட, மற்றவர்க்கு நன்மை செய்து நரகத்திற்குச் செல்வதாக இருந்தாலும் அதுவே விரும்பத்தக்கது

- தொகுப்பு: கே. ஆர். எஸ். மணியன்

பழைய நோட்டு

சிறுவன் பாங்க் காஷியரிடம் ''சார், பழைய நோட்டைக் கொடுத்தா, புது நோட்டு தருவீங்களாமே! இந்தாங்க இதெல்லாம் போன வருஷத்து நோட்டுகள். புதுசு குடுங்க.''

—லலிதா செல்லப்பா







கல்வியா ஒழுக்கமா?

(குரோம்பேட்டை என். எஸ். என். மெட்ரிகுலேஷன் பள்ளியில் நடந்த பட்டிமன்றத்தில் பாடப்பெற்ற கவிதை)

அவையின் முதல்வரே! அறிவின் மிக்கீர்!
நவைதீர் மாணவ நண்பர்காள்! இங்கே
உங்கட் கெல்லாம் வணக்கம் உரைத்து
சங்கத் தமிழில் சாற்ற வந்துளேன்!

பட்டி மன்றப் பொருளோ சிறந்தது.
அட்டி யில்லை கல்வியும் ஒழுக்கமும்
சிறந்தன; ஆனால் கல்வியைக் காட்டிலும்
சிறந்தது ஒழுக்கமே என்பதைச் செப்பவே
வந்துளேன்; என்றன் வார்த்தை கேட்பீர்.

கல்வியை மாணவன் கற்க முதலில்
சொல்லித் தருவது ஒழுக்கமே யாகும்;
காலையில் எழுந்து கடன்களை முடித்து,
நூலை எடுத்து, குருவை அடுத்து
பணிந்து வணங்கிப் பயத்துடன் இருந்து
கனிவுடன் கல்வியைக் கற்பதேஒழுக்கம்;

ஒழுக்க மின்றி உறங்கி வழிந்து
அழுக்கு மனத்துடன் படிக்கச் சென்றால்
எப்படிக் கல்வி ஏறும் மூளையில்?
செப்படி வித்தையா கல்வி என்பது!

கல்வி என்பது கத்தி போன்றது
நல்லவர், ஒழுக்கம் உள்ளவர் கையில்
கல்வி என்னும் கத்தி இருந்தால்,
பொல்லாச் செயல்களைப் போரிட்(டு) அழிப்பர்.
ஒழுக்கம் இல்லாத் தீயவர் இடத்தில்
வழக்கம் மீறிய கல்வி என்னும்
கத்தி இருந்தால் கழுத்தை அறுப்பர்.

கல்வி என்பது தீபம் போன்றது.
நல்லவர் அதனைக் கூடத்தில் வைப்பர்;
பொல்லா தவரோ கூரைமேல் வைப்பர்.
கூடத்தில் வைத்தால் வெளிச்சம் கிடைக்கும்.
கூரைமேல் வைத்தால் வீடே எரியும்!
இன்னுமா உங்கட்குப் புரிய வில்லை?


கல்வி இல்லாமல் ஒழுக்கம் மட்டுமே
உள்ளவர் வாழும் நாட்டில் வாழலாம்;
ஒழுக்க மில்லாத படித்த மிருகங்கள்
இருக்கும் நாட்டில் வாழ முடியுமா?

கொலையும், கொள்ளையும் கொடிய செயல்களும்
விளைவது எதனால்? விந்தை மனிதர்கள்
கல்வி கற்றும் பட்டம் பெற்றும்
நல்லவ ராக வாழ மறந்து
பொல்லாச் செயல்களைச் செய்வத னால் தான்!

கல்வியைக் காட்டிலும் ஒழுக்கமே சிறந்தது!
கண்ணைக் காட்டிலும் உயிரே சிறந்தது!
கண்ணில் லாமல் வாழலாம். ஆனால்
உயிரில் லாமல் வாழ முடியுமா?
உயிரே ஒழுக்கம்! உயர்வே ஒழுக்கம்!
உண்மையை உரைத்தேன்; வருகிறேன் வணக்கம்!

—ஏ. மணிமேகலை (2356), சென்னை—64

விந்தை உலகம்



வெளவால் வாயினால் ஒலி எழுப்புகிறது. ஒலி எழுப்பிவிட்டு எதிரொலிக்காக காத்திருக்கும். எதிரொலி கேட்கிறதா இல்லையா என்பதைக் கொண்டு தன் வழியை-யும், இரையையும் கண்டு கொள்-கிறது.



பிரெஞ்சு நிபுணர் ஒருவர் பரிசோ-தனை நடத்தியபோது ஒரு தேள் 420 நாட்கள், ஏறத்தாழ 14 மாதம் எவ்வித உணவும் உண்ணாமலேயே வாழ்ந்தது. எப்படிப் பார்த்தாலும் தேள்கள் தொடர்ந்து ஆறு மாதம் உணவு இல்லாமலே வாழக் கூடி-யவை.



ஆங்கில சிரிப்பு நடிகர் "சார்லி சாப்ளின்" மூன்று விமானங்கள் சொந்தமாக வைத்திருந்தார். அவர் குடும்பத்துடன் வெளிநாடுகளுக்குப் போகும்போது குடும்பத்தினர் இந்த மூன்று விமானங்களிலும் பயணம் செய்வார்கள். ஒரே விமானத்தில் அவர்கள் பயணம் செய்தது இல்லை. காரணம், விமானத்துக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் குடும்பம் முழுவதற்-குமே ஆபத்து அல்லவா? ஆகவேதான் இவ்வாறு மூன்று விமானங்களில் பயணங்கள் செய்தார்கள்.

— செந்தமிழ்ச்செல்வன் —

வீரர் கேட்ட பரிசு

கங்கா ராமமூர்த்தி

முதலாம் உலகப்போர் உலகைக் கிடுகிடுக்க வைத்துக் கொண்டிருந்த நேரம்.

கலிபோர்னியாவிலே படித்துக் கொண்டிருந்த பல இந்திய வாலிபர்களின் புரட்சிகரமான எண்ணங்களை வெளியிட அது நல்ல வாய்ப்பாக அமைந்தது.

பாரதத்தின் விடுதலைக்குப் போராடுபவர்களுக்கு உதவுவதற்காகவே ஆரம்பிக்கப்பட்டது புரட்சிக் கட்சி. ஆயுதங்களைச் சேகரிப்பது, விடுதலைப் பாடல்களையும், இலக்கியத் துணுக்குகளையும் எழுதிய துண்டுப் பிரசுரங்களை இந்தியாவுக்கு அனுப்புவது... இது போன்ற செயல்களிலே ஈடுபட்ட பல இந்திய இளைஞர்களிலே கர்தார் சிங் என்ற பதினெட்டு வயது இளைஞரும் ஒருவர்.

'புரட்சி' என்ற பத்திரிகையின் ஆசிரியர்களிலே ஒருவராக இருந்த கர்தார் சிங், உணர்ச்சிகரமான கவிதைகள் எழுதுவார். தாய்நாடும், அதன் அடிமைத்தனமும், அதை நீக்கப் பாடுபட வேண்டும் என்ற எண்ணமுமே அவரது மூச்சாக இருந்தது.

இந்தியர்கள் என்றதால் கனடாவில் அனுமதி மறுக்கப்பட்டது; அவர்கள் திரும்பித் தாயகம் சென்றாலோ, அங்கே ஆங்கில அரசு உயிரையே பறித்துவிடும்! என்ன கொடுமை!

கர்தார் தினந்தோறும் இது போன்ற செய்திகளைக் கேட்டுக் கேட்டு மனம் கொதித்தார். ஏதாயினும் செய்ய வேண்டும் என்ற துடிப்பு மிகுந்தது. பல நூறு சுதந்திர உணர்ச்சி கொண்ட இந்திய வாலிபர்களைக் கலிபோர்னியாவிலே திரட்டினார். கர்தார் சிங்கின் தலைமையிலே வீரர்கள் தாயகம் சென்று போராடக் கப்பலேறினர்.

வரும் வழிகளில் ஜப்பானிலும், ஹாங்காங்கிலும் இருந்த இந்திய இளைஞர்களும் இவர்களோடு சேர்ந்து கொண்டனர். அது மட்டுமா? தான் கண்ட இந்தியர்களிடமெல்லாம் புரட்சிக் கருத்தையும், தாய் நாட்டுப் பற்றையும், புரட்சி வித்தையும் ஊன்றிக் கொண்டேதான் வந்தார்கள்.

கப்பல் புரட்சி கோஷங்களோடு கல்கத்தாவை எட்டுவதற்குள்ளாகவே ஆயுதம் தாங்கிய போலீஸ் படை கப்பலைச் சூழ்ந்து கொண்டது. கர்தார் சிங் அவர்களிடம் சிக்காமல் மறைந்து ஒளிந்து பஞ்சாப்புக்குப் பறந்துவிட்டார்!

சும்மா இருக்க முடியுமா இந்த வீரரால்? பஞ்சாபின் வாலிப உள்ளங்களிலே பேச்சினாலும், எழுத்தினாலும் வீரக் கனலை வளர்த்தார். புரட்சிக்குத் தயாராக்கினார்.

சைக்கிளிலே ஊர் ஊராகச் சென்று ராணுவ ரகசியங்களை அறிந்து கொண்டார். சிங்கம் போன்ற அஞ்சாத அந்த வாலிபரின் துணிவை விளக்க எத்தனையோ கதைகள் உண்டு; கதைகள் என்றால் உண்மையான நிகழ்ச்சிகள்தான்!

கர்தாரைப் பிடிக்கப் பஞ்சாபில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் போலீஸ் வலை விரித்திருந்தது. ஒரு கிராமத்திலிருந்து மற்றொன்றுக்குப் போகும் வழியிலே நாலைந்து போலீசார் உட்கார்ந்திருந்தார்கள். துப்பாக்கி கர்தாரின் உடலிலே மறைவாக இருந்தது. கர்தார் சிறிதும் அஞ்சாமல், போலீசை அணுகி, "ஐயா, தாகமாயிருக்கிறது. அடுத்த கிராமம் செல்ல வேண்டும். தயவு செய்து குடிக்க நீர் தருவீர்களா?" என்று கேட்டு வாங்கிக் குடித்துவிட்டுச் சென்றார்.

அவர்கள் பாவம், அவர்தான் கர்தார் என்று அறியவில்லை. பயங்கரமான புரட்சிக்காரன் இவ்வளவு ஒல்லியாக ஒடிந்துவிழும் தேகத்தோடு இருப்பான் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

கர்தார் புரட்சி மனப்பான்மை கொண்டவர். ஆனால், புரட்சிக்குப் பணம் வேண்டுமே! வேறு வழியின்றி நண்பர்களோடு பணக்காரார்களைச்சூறை யாடினார். ஆனாலும் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் சிறிதளவு துன்ப மும் தர அவர் மனம் இடம் தராது. ஒருமுறை நண்பர்களுடன் ஒரு வீட் டில் கொள்ளையிடச் சென்றபோது, ஒரு நண்பன் அவ்வீட்டுப் பெண்க ளிடம் கேவலமாக நடந்துகொண் டான்.

கர்தார் சும்மா பார்த்துக் கொண் டிருப்பாரா? நண்பன் என்றும் பாரா மல் அவனை அறைந்து, அந்தப் பெண் மணியிடம் மன்னிப்புக் கேட்கச்சொன் னார்.

உயர்ந்த மனமுடைய இவர் கொள் ளைக்காரரா?

அவ்வீட்டிலிருந்த மூதாட்டி கர்தா ரிடமே கேட்டாள்: ''இவ்வளவு நல்ல வனாக இருக்கிறாயே? பின் எதற்காகக் கொள்ளையிடுகிறாய்?''

''தாயே! நான் என் சுகத்துக்காகக் கொள்ளையிடவில்லை. இந்த நாடு விடு தலை பெறப் போராடும் எங்கள் புரட்சி இயக்கத்துக்குப் பணம் தேவைப்படுகிறது. ஆயுதங்களை வாங் கவே நாங்கள் பணம் திரட்டுகிறோம்.''

கர்தாரின் பணிவான பேச்சும், உண்மையான செயலும் தாய்நாட்டுப் பற்றும் விடுதலையில் ஆர்வமும், புரட்சி யில் ஆவேசமும் கொண்டவர்களுக்கு வழிகாட்டியாயின.

பிப்ரவரி 22—ம் தேதி, புரட்சி நாள் எனத் தீர்மானிக்கப்பட்டது. புரட்சி செய்தவர்கள் ஏழைகளையோ, பெண் களையோ, சிறுவர் சிறுமியரையோ துன்புறுத்தவில்லை. போலீஸ் ஸ்டே ஷன்களைக் கொளுத்தினார்கள்; துப் பாக்கிகளைத் தூக்கிக் கொண்டார்கள். பணக்காரரின் வீடுகளும், கடைகளும் கொள்ளையிடப்பட்டன.

பொது மக்கள் கர்தார் சிங்குக்குப் புரட்சியில் பெரும் உதவிகளைச் செய் தார்கள். இவ்வாறு மீரட், காசி, அலகாபாத் எல்லா இடங்களிலும் புரட்சிக் கொடியை உயர்த்தத் தீர்மா னித்தார்கள்.



கர்தார் சிங்கின் ஓயாத உழைப்பு, நாட்டின் மேல் கொண்ட சலியாத பற்று. இவைகளைப் புகழ்ந்து கொண்டே புரட்சிக்கு வாழ்த்துக் கூறிய வாறு இயக்கத்துக்கு வந்து சேர்ந்தான் கிருபால் சிங் என்ற வீரன். நாடெங்கும் புரட்சி வெடிகுண்டுகளை வைத்துவிட்டு அதனை வெடிக்கும் நாளாக ஒரு தேதியை நிர்ணயித்தார்கள். கூட்டத்தில் கிருபால்சிங்கும் இருந்தான். கிருபால்சிங்கின் சகோதரன் ராணுவத்திலே தலைவன். எனவே, கர்தாரின் திட்டங்கள் உடனுக்குடன் ராணுவத்துக்குத் தெரிவிக்கப்பட்டது.


புரட்சி வெடி வெடிக்கும் நாள். கர்தார்சிங் துடிப்போடு எல்லா முகாம்களுக்கும் சென்று வந்தார். ராணுவத்திலேயே புரட்சி வீரர்களை உருவாக்கி ராணுவப் புரட்சியை நடத்தத் தீர்மானித்தார் கர்தார்.

ஆனால், என்ன பரிதாபம்! கர்தார் தோழர்களோடு இருந்த இடத்தைப் போலீசார் வளைத்துக் கொண்டனர். புரட்சியாளர் இருந்த முகாம்களில் எல்லாம் போலீஸ்! ஆயுதமற்ற சிப்பாய்கள் ஒருபுறம்; கைது செய்யப்பட்ட புரட்சிக்காரர்கள் ஒருபுறம். மிகுந்த கஷ்டப்பட்டுச் செய்த விடுதலை முயற்சிகள் எல்லாம் ஒரு தேசத் துரோகியால் தோல்வியடைந்தன!

கோர்ட்டிலே தமது குற்றங்களை மறுக்கவில்லை கர்தார். ''எனக்குத் தூக்குத் தண்டனை கொடுங்கள்; ஆயுள் தண்டனை வேண்டாம். என் நாடு விடுதலை பெறும் வரை மீண்டும் பிறந்து விடுதலைக்காகப் போராடுவேன்; அப்புறமும் தூக்குத் தண்டனை கிடைக்குமானால், பிறகும் ஒரு பிறவி எடுப்பேன். விடுதலை பெறும் வரை ஓய மாட்டேன்'' என்று வீர முழக்கமிட்டார்.

தூக்குத் தண்டனை அளித்தபோது கர்தார்சிங் முகம் மலர்ந்தார். அவரோடு 25 பேர் தூக்குத் தண்டனை பெற்றார்கள். விடுதலைக்குப் போராடிய வீரர்க்குக் கிடைத்த பரிசு அது!

ஓவியராகலாம்





ஆயிரம் பேரைக் கொன்றவன்!

தணிகை உலகநாதன்

"பொன்னு! என்னைத் தடுக்காதே! விடு என்னை!" என்று வேகமாகக் கிளம்பினான் சுந்தரம்.

"நில்! எங்கே இப்படி ஆத்திரமாகக் கிளம்பி விட்டாய்?" என்று தடுத்தான் பொன்னன்.

"எங்கேயோ போகிறேன்; எப்படியோ வாழப் போகிறேன் 'வேலை வெட்டி இல்லாதவன்' என்று என் அப்பாவே என்னைக் கேவலமாகப் பேசிவிட்டார். இனிமேல் எனக்கு வீட்டில் என்ன வேலை? எங்கேயாவது கிராமத்துக்குச் சென்று அரைகுறை வைத்தியம் செய்தாவது பிழைக்கப் போகிறேன். என் அப்பா ஒரு நாட்டு மருத்துவர். எனக்கும் கொஞ்சம் மருந்துகள் தெரியும். 'ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்' என்பது பழமொழி. தெரிந்து கொள்."

"அட பாவி! ஆயிரம் பேரைக் கொல்வதற்கு முன்னே ஒரு நல்ல பழமொழியையே கொலை செய்துவிட்டாயே!"

"கொலையா? எப்படி?"

"'ஆயிரம் **பேரைக்** கொன்றவன்' என்பது தவறு. 'ஆயிரம் **வேரைக்** கொன்றவன் அரை வைத்தியன்' என்பதுதான் உண்மையான பழமொழி. இதன் பொருளை உணராமல் சிலர் தவறாக மாற்றிவிட்டார்கள். நாட்டு மருத்துவர்கள் பல வகையான வேர்களைப் பிடுங்கி எடுத்துவந்து ஆராய்ச்சி செய்துதான் மருந்துகள் செய்கிறார்கள். அதற்காக ஆயிரக் கணக்கான வேர்களை அழிப்பதால், 'ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன்' என்னும் பழமொழி பிறந்தது. பழகப் பழக மேலும் சிறந்த மருத்துவராகலாம் என்பது இதன் கருத்து. இதனை நீ சரியாக உணராததால் ஆயிரம் பேரைக் கொல்லப் பார்க்கிறாய்! பாவம்! வேண்டாம் இந்தப் பிடிவாதம். நேராக வீட்டுக்குப் போய்ச் சேர்."

"பொன்னு! உன்னால் இன்று ஒரு பழமொழியின் உண்மைப் பொருளை அறிந்து கொண்டேன். நன்றி. என்ன இருந்தாலும் இனிமேல் வீட்டுக்குப் போக எனக்கு மனம் இல்லை. 'களவும் கற்று மற' என்பது பழமொழி. தெரியுமா? 'அதன்படி நடந்தால் என்ன?' என்று யோசிக்கிறேன். பெரியோர் சொன்ன பழமொழிதானே?"

"அட, சண்டாளா? உன் புத்தி இப்படியா போக வேண்டும்! இதிலேயும் ஒரு தவறு இருக்கிறது!"

"என்ன பொன்னு, புதிர் போடுகிறாய்!"

"புதிரும் இல்லை. குதிரும் இல்லை. இந்தப் பழமொழியின் உண்மை வடிவம் என்ன தெரியுமா?"

"என்ன? சொல், பார்க்கலாம்."

"'களவும் **கத்து(ம்)** மற' என்பதுதான் இந்தப் பழமொழியின் உண்மை வடிவம். 'திருடுதலையும் பிதற்றுவதையும் மறந்துவிடு' என்பது இதன் பொருள். கத்து — பிதற்று. எவரோ ஒருவர் இதை மாற்றிக் 'களவும் **கற்று** மற' என்று கூறிவிட்டார். திருட்டுத் தொழிலை நல்லவர் எவராவது கற்க வேண்டும் என்று சொல்வாரா? திருட்டுத் தொழிலைக் கற்றுக் கொண்டவன் மேலும் மேலும் திருட நினைப்பானே தவிர, அதை மறக்க நினைப்பானா? யோசித்துப் பார்" என்று இடித்துக் கூறினான் பொன்னன்.

அதுகேட்ட சுந்தரம், "பொன்னு! எதற்கெடுத்தாலும் பெரிய விளக்கம் கொடுத்துத் தடுத்து விடுகிறாய். பின்னே என்னை என்னதான் செய்யச் சொல்கிறாய்? எங்கேயாவது போய் யாரையாவது **காக்காய்** பிடித்துப் பிழைக்கட்டுமா?"

''காக்காய் பிடிக்கவும் வேண்டாம்; குருவி பிடிக்கவும் வேண்டாம். நீ பிடிக்கும் அளவுக்குக் காக்கை ஓர் ஏமாந்த பறவை இல்லை.''

''போதும் பொன்னா, என் வயிற்றெரிச்சலைக் கிளப்பாதே. காக்காய் பிடிப்பதுகூடத் தவறா?''

''**கால் கை** பிடிப்பதைத்தான் இப்போது சிலர் **காக்காய்** பிடித்தல் என்று கூறுகிறார்கள். ஒருவரால் காரியம் ஆக வேண்டுமானால், அவரிடம் போய், 'ஐயா! அம்மா!'' என்று காலும் கையும் பிடித்துத் தயவாகக் கேட்டால்தானே காரியம் நடக்கும்? **கால்கை** என்பதைத்தான் **காக்காய்** என்று கொச்சையாகப் பேசுகிறார்கள். தெரிந்து கொள்'' என்று விளக்கினான் பொன்னன்.

''பொன்னா! நீ சொல்வதையெல்லாம் கேட்டால், எனக்குச் சிரிப்பு வருகிறது. என் நிலைமையை நினைத்தால் அழுகை வருகிறது. என்ன செய்வது?'' என்றான் சுந்தரம்.

''சுந்தரம்! இப்போதுதான் எனக்கு நினைவு வருகிறது. கவலைப்படாதே. என் மாமா வேலை செய்யும் துணிக்கடையில் எழுத்தர் வேலைக்கு ஒரு நல்ல ஆள் தேவை என்று கூறினார். அவரிடம் உன்னைப் பற்றிச் சொல்வேன். அடுத்த வாரமே நீ வேலைக்குப் போகலாம். என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டான் பொன்னன்.

''கரும்பு தின்னக் கூலி வேண்டுமா? கட்டாயமாக வேலைக்கு வருகிறேன். எனக்குப் புத்தியும் கூறினாய்; புகலிடமும் காட்டினாய். நன்றி. ஒரு வாரம் பொறுத்துக் கொள்ளும்படி என் அப்பாவிடம் கூறி, மன்னிப்புக் கேட்டுக் கொள்வேன்.''

''சரி, போய் வா.''

சிறுகடை வைத்துச் சேமித்த மாணவன்

நாங்குநேரி சங்கர் ரெட்டியார் அரசு மேல்நிலைப்பள்ளியில் 9-ஆம் வகுப்பில் பயிலும் மாணவன் முத்துப் பெருமாள் என்பவன், சென்ற ஆண்டு கோடை விடுமுறையை வீணாக்காமல் சுமார் 50 ரூபாய் முதலீட்டில் ஒரு சிறு கடை வைத்து மோர், சர்பத் என்று விற்பனை செய்ததில் மொத்தம் 300 ரூபாய் கிடைத்தது. இவ்வருடத்திற்குத் தேவையான புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்களை அம்மாணவன், வீட்டில் தொந்தரவு செய்யாமலேயே வாங்கிக் கொண்டு, மீதமுள்ள பணத்தை அப்படியே வீட்டில் கொடுத்து விட்டான்!

— ஆழ்வை. அ. பட்சிராஜன்





எது ஆச்சரியம்?

ஒரு பையனைத் தந்தை கேட்டார்.

''தம்பி, மீன்கள் நீரிலே வாழ்வது உனக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லையா?''

பையன் சொன்னான்:

''அது ஆச்சரியமில்லை அப்பா. தான் வாழ்ந்த நீரிலே அது கொதித்துக் குழம்பாகிறதே, அது தான் ஆச்சரியம்!

—கவிஞர் கண்ணதாசனின் 'சிருஷ்டி ரகசியம்' நூலிலிருந்து.
தகவல்: அ. சாம்பசிவம், சென்னை-1

பழைய கதை; புதிய பாடல்

தூங்குமூஞ்சிகளும் வண்டிமாடுகளும்



குழந்தைக் கவிஞர்

கந்த ரேசர் தூங்கு மூஞ்சி!
தூக்கத் திலே அவரை மிஞ்சும்
சந்தன் அவரின் வண்டிக் காரன்.
கதையை நானும் கூறு கின்றேன்.

இரவு நேரம் வண்டி கட்டி
இருபத் தைந்து மைலைத் தாண்டித்
திரும ணத்தில் கலந்து கொள்ளத்
திட்ட மிட்டார் கந்த ரேசர்.

எட்டு மணிக்கு வண்டி வரவே
ஏறிக் கொண்டார் கந்த ரேசர்.
சட்டென் றுடனே வண்டிக் குள்ளே
சாய்ந்து படுத்துத் தூங்கி விட்டார்.

மூட்டைப் பூச்சி கடித்த தாலே
முண்டி எழுந்தார் இரண்டு மணியில்.
தோட்டத் திற்குள் வண்டி நன்றாய்ச்
சுற்றி வட்டம் போடக் கண்டார்.

"மக்குப் பயலே, வண்டி இழுக்கும்
மாட்டை நீயும் பூட்டி டாமல்,
செக்கு மாட்டைப் பூட்டி விட்டாய்.
சேச்சே, மாட்டை மாற்று" என்றார்.

கந்த ரேசர் கோப மாகத்
தோளில் தட்டி இதனைச் சொல்ல,
சந்தன் இறங்கி மாட்டை மாற்றிக்,
கட்டி விட்டு ஏறிக் கொண்டான்.

* * * * *

வியர்வை உடம்பை நனைத்த தாலே
விழித்துப் பார்த்த கந்த ரேசர்
அயர்ந்து தூங்கும் சந்தன் முதுகில்
அடித்துச் சொன்னார் கோப மாக:

"மாற்றி மாட்டைப் பூட்டு என்றால்,
மடையா, நீயும் என்ன செய்தாய்?
ஏற்றம் இறைக்கும் மாட்டைப் பூட்டி
ஏனோ மீண்டும் தொல்லை தந்தாய்?

வண்டி முன்னும் பின்னு மாக
வந்து வந்து போனால் நாமும்
சென்று சேர்தல் எந்தக் காலம்?
சேச்சே" என்று சீற லானார்.

இந்த வார்த்தை கேட்ட வுடனே
இறங்கி ஓடி வண்டி மாட்டைக்
சந்தன் பிடித்து வந்து மிகவும்
கவன மாகப் பூட்டி விட்டான்.

இரண்டு பேரும் தூங்கி டாமல்
இரவு முழுதும் வண்டி ஓட்டி
விரைந்து சென்றும் முகூர்த்த மெல்லாம்
முடிந்து மிகவும் நேர மாச்சு!

கேட்டதைக் கொடுக்கும் மோதிரம்!

ஜெர்மன் தேசக்கதை

மூலம்: ரிச்சர்ட் வாக்மன் லீண்டர்
தமிழ்: எச். கிருஷ்ணமூர்த்தி



அவன் ஓர் ஏழை விவசாயி. இளம் வயது. அவனுடைய நிலம் மிகவும் சிறியது. அதைப் பண்படுத்தினான்; உழுதான்; பாடுபட்டான். இருந்தாலும் அவனுக்குப் போதிய வருமானம் கிடைக்கவில்லை. ஒருநாள் நல்ல வெய்யில். கடுமையாக உழைத்தபிறகு கலப்பையின் மேல் உட்கார்ந்து சற்று நேரம் ஓய்வெடுத்தான். ''சே! இது என்ன வாழ்க்கை!'' என்று அலுத்துக் கொண்டே நெற்றி வியர்வையை வழித்துக் கீழே போட்டான்.

அப்போது ஒரு மந்திரக் கிழவி அந்த வழியாகப் போய்க் கொண்டிருந்தாள். அவளுடைய காதுகளில் விவசாயியின் சொற்கள் விழுந்தன. அவள் அவனைக் கூப்பிட்டாள். ''தம்பீ! ஒரு லாபமும் இல்லாமல் ஏன் இப்படி உழைக்கிறாய்? எதிரே போகும் சாலையில் இரண்டு நாட்கள் நடந்து போ. காடு வரும். அங்கே உயரமான சவுக்கு மரம் ஒன்று இருக்கும். அந்த மரத்தை வெட்டு. உனக்குச் சகல செல்வங்களும் கிடைக்கும்,'' என்று சொன்னாள்.

அவள் இன்னொரு முறை சொல்லும் வரை அவன் காத்திருக்கவில்லை. எடுத்தான் கோடரியை. நடந்தான் காட்டுக்கு.

இரண்டு நாட்கள் பயணம் செய்து அவன் அந்தச் சவுக்கு மரத்தை அடைந்தான். ஒரே மூச்சில் அதை வெட்டினான். கடகடவென்று அந்த மரம் முறிந்து விழுந்தது. மரத்தோடு கூட உச்சியிலிருந்த ஒரு பறவைக் கூடும் விழுந்தது. கூட்டிலிருந்த இரண்டு முட்டைகளும் சிதறி உடைந்தன. ஒரு முட்டையிலிருந்து ஒரு கழுகுக் குஞ்சு வெளியே வந்தது. இன்னொரு முட்டையிலிருந்து ஒரு மோதிரம் கீழே விழுந்தது.

கழுகுக் குஞ்சு மளமளவென ஒரு நொடியில் பெரிதாகி அந்த விவசாயியின் இடுப்பளவுக்கு வளர்ந்தது. தன் இறக்கைகளை விரித்து இரண்டு, மூன்று முறை அடித்துக் கொண்டது. பிறகு வாயைத் திறந்து பேசிக் கொண்டே அது மேலே பறக்கத் தொடங்கியது! ''எனக்கு விடுதலை அளித்தாய். மிக்க நன்றி, நானும் உனக்கு ஓர் உதவி செய்வேன். இன்னொரு முட்டையிலுள்ள மோதிரத்தை நீ எடுத்துக் கொள். அது ஒரு மாய மோதிரம்! கேட்டதைக் கொடுக்கும் மோதிரம். அதை விரலில் அணிந்து கொள். அதைச் சுழற்றிக் கொண்டே, உனக்கு என்ன வேண்டுமோ அதை உரக்கக் கேள். உடனே மோதிரம் கொடுக்கும். ஆனால், ஒருமுறைதான் நீ கேட்கலாம். அதற்குப் பிறகு மோதிரம் தன் சக்தியை இழந்து சாதாரண மோதிரம் ஆகிவிடும். ஆகையால், அவசரப்படாதே. யோசித்துக் கேள். பின்னால் வருத்தப்படாதே!'' என்று அறிவுரை கூறிவிட்டுக் கழுகு மேலே சென்று மறைந்தது.

விவசாயி மோதிரத்தை எடுத்து விரலில் அணிந்தான். வீட்டைநோக்கி

நடந்தான்.

சூரியன் மறையும் நேரம். வழியில் ஓர் ஊர் வந்தது. அங்கே ஒரு பொற்கொல்லன் நகைக் கடை வைத்திருந்தான். கடையில் விலை உயர்ந்த மோதிரங்கள் பல காட்சி அளித்தன. விவசாயி தன் மோதிரத்தைக் காட்டி,

"ஐயா, இதன் மதிப்பு எவ்வளவு இருக்கும்?" என்று கேட்டான்.

"ப்பூ! இதென்ன பிரமாத மோதிரம்? இதன் விலை அப்படி ஒன்றும் அதிகமாக இருக்காதே!" என்று பொய் சொன்னார்.

"பொற்கொல்லரே! இதனுடைய உண்மையான மதிப்பை அறியாமல் இப்படிப் பேசுகிறீர்கள். இது கேட்டதைக் கொடுக்கும் மோதிரம். உம் கடையிலுள்ள அத்தனை மோதிரங்களை ஒன்று சேர்த்தாலும், இதற்கு ஈடாகாது. தெரியுமா?" என்று சொன்னான் விவசாயி.

அந்தப் பொற்கொல்லன் மிகவும் கெட்டவன். நயவஞ்சகன். அவன் இனிமையாகப் பேசி, விவசாயியை அன்றிரவு தன் வீட்டில் தங்கச் செய்தான். நிறைய ஒயின் அளித்து உபசரித்தான். விருந்தாளி உறங்கும் போது, அவனுடைய விரலிலிருந்த மோதிரத்தைத் திருடினான். அதற்குப் பதிலாக அதைப் போல இருந்த வேறு ஒரு சாதாரண மோதிரத்தை அணிவித்தான்.

மறுநாள் காலையில் பொற்கொல்லன் அவசர அவசரமாக விவசாயியை எழுப்பி, "நீங்கள் வெகுதூரம் போக வேண்டுமே! சீக்கிரம் புறப்படுங்கள்!" என்று சொல்லி அனுப்பி வைத்தான்.

விவசாயியின் தலை மறைந்ததும், பொற்கொல்லன் தன் அறைக்கு ஓடினான். ஜன்னல்களை அடைத்தான். கதவுகளைத் தாளிட்டான். அறையின் நடுவில் நின்று கொண்டான். விரலிலிருந்த மோதிரத்தைச் சுழற்றிக் கொண்டே, "எனக்கு ஒரு லட்சம் தங்க டாலர்கள் உடனே வேண்டும்," என்று உரக்கச் சொன்னான்.

அவன் சொல்லி வாயை மூடுவதற்குள் புத்தம் புதிய டாலர்கள், பள




பளக்கும் டாலர்கள், தங்க டாலர்கள், கலகலவென்ற சப்தத்தோடு மழை போல மேலே இருந்து பொழிய ஆரம்பித்தன. அந்தக் காசுகள் அவனுடைய தலையிலும், முதுகிலும், கைகளிலும் வேகமாக வந்து அடித்தன. அவனுக்கு உடம்பு முழுவதும் காயம். வலி தாங்க முடியவில்லை. பரிதாபமாகக் கதறினான். கதவைத் திறப்பதற்காக அவன் நகர்ந்தான்.

சில அடி வைப்பதற்குள் காயங்களிலிருந்து இரத்தம் பெருகியது. அவன் தரையில் விழுந்தான். ஆனால், டாலர்கள் அவன் மீது விழுந்து கொண்டே இருந்தன. அந்தத் தரை மரப்பலகையால் ஆனது. காசுகளின் வேகத்தையும், கனத்தையும் தாங்காமல் அது பிளந்தது. தரைக்குக் கீழே இருந்த நில அறைக்குள் பொற்கொல்லன் விழுந்தான். காசுகளும் விழுந்தன. சரியாக ஒரு லட்சம் காசுகள் ஆகும் வரையில் டாலர்கள் தொடர்ந்து கொட்டிக் கொண்டே இருந்தன. கடைசியில், அந்த நில அறையிலேயே பொற்கொல்லன் இறந்து கிடந்தான். உடல் மீது டாலர்கள் குவிந்து கிடந்தன.

காசுகள் கொட்டும் சப்தத்தைக் கேட்டு ஊரார் ஓடி வந்தனர். பொற்கொல்லன் இறந்து கிடப்பதைக் கண்டனர். ''திடீரென இப்படி அதிர்ஷ்டம் அடிக்கும் போது இவன் சாக வேண்டுமா? ஐயோ, பாவம்!'' என்று பரிதாபப்பட்டனர். பொற்கொல்லனின் உறவினர்கள் எல்லாவற்றையும் தங்களுக்கிடையே பங்கு வைத்துக் கொண்டனர்.

விவசாயி வீட்டை அடைந்தான். மனைவியிடம் சந்தோஷமாக அந்த மோதிரத்தைக் காட்டினான். ''என் அருமை மனைவியே! இனி நமக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. அதிர்ஷ்ட தேவதை கண் திறந்துவிட்டாள். நாம் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். இந்த மோதிரத்திடம் என்ன கேட்க வேண்டும் என்பதை நன்றாக யோசித்து நாம் முடிவு செய்ய வேண்டும்,'' என்றான்.

ஆனால், அவனுடைய மனைவி கெட்டிக்காரி. என்ன கேட்க வேண்டும் என்பதை அவள் உடனே சொன்னாள். ''நம்முடைய நிலம் சிறியது. அதுவும் வசதியாக இல்லை. மற்றவர்களின் நிலம் குறுக்கே வந்து இடைஞ்



சலாக உள்ளது. குறுக்கே உள்ள நிலம் முழுவதும் நமக்கு வேண்டும் என்று மோதிரத்திடம் கேட்கலாமே??'' என்று சொன்னாள். ''அது மிகச் சிறிய நிலம். நாம் நன்றாக உழைத்து, அதிர்ஷ்டமும் நம் பக்கம் இருந்தால் ஒரே வருஷத்தில் அதை விலைக்கு வாங்கிவிடலாம். அதற்காக மோதிரத்தின் சக்தியை வீணாக்கலாமா?'' என்றான் விவசாயி.

அவ்வாறே அவர்கள் கடுமையாக உழைத்தனர். அமோக விளைச்சல். குறுக்கே இருந்த அத்தனை நிலத்தையும் விலைக்கு வாங்கினர். அதற்குப் பிறகும் அவர்களுடைய கையில் பணம் மிஞ்சியது.

''இப்போது நம்மிடம் நிலமும் உள்ளது. மோதிரத்தில் சக்தியும் உள்ளது பார்த்தாயா?'' என்று மனைவியிடம் பெருமையாகப் பேசினான் விவசாயி.

''பசுவும், குதிரையும் வேண்டும் என்று கேளுங்களேன்,'' மனைவி ஆலோசனை கூறினாள்: ''அற்ப விஷயத்திற்கெல்லாம் அபூர்வ சக்தியைச் செலவழிப்பதா? போடி, போ! பைத்தியக்காரி!'' என்று மனைவியை அன்போடு கோபித்துக் கொண்டான்.

அடுத்த வருஷத்திற்குள், அவர்கள் பசுவும், குதிரையும் வாங்கினர். விவசாயிக்கு ஒரே சந்தோஷம். ''நமக்குத் தேவையானவை எல்லாம் இருக்கின்றன. அபூர்வ மோதிரமும் இருக்கிறது. இதுதான் அதிர்ஷ்டம்!'' என்று மனைவியிடம் சொன்னான்.

ஆனால், அவன் மனைவி விடவில்லை. மோதிரத்திடம் உடனே ஏதாவது கேட்க வேண்டும் என்று வற்புறுத்தினாள். மேலும், ''உங்களை எனக்குப் புரியவே இல்லை. முன்பு, நீங்கள் கஷ்டப்பட்டீர்களே, அப்போது உங்கள் தலை எழுத்தை நொந்து கொண்டீர்கள். இது வேண்டும், அது வேண்டும் என்றும் ஆசைப்பட்டீர்கள். இப்போது எது கேட்டாலும் கிடைக்கும் நிலைமை. இருந்தாலும் ஒன்றுக்கும் ஆசைப்படாமல் கஷ்டப்பட்டு உழைக்கிறீர்கள். மனது வைத்தால் நீங்கள் இப்போது ஒரு லட்சாதிபதி ஆகலாம். அல்லது அரசர் கூட ஆகலாம்; சுக போகங்களில் புரளலாம். உங்களுடைய இளமைப் பருவம் வீணாகப் போகிறது.

''ஒரு முடிவுக்கும் வராமல் இப்படி யோசித்துக் கொண்டே இருக்கிறீர்களே!'' என்று மனைவி வருத்தப்பட்டாள்.

''நாம் சின்னவர்கள் தான். நமக்கு இன்னும் நீண்ட ஆயுள் இருக்கிறது. ஆனால், மோதிரத்திடம் ஒரே ஒரு முறைதானே கேட்க முடியும்? அப்புறம் அதற்குச் சக்தி கிடையாதே! நாளை நமக்கு என்ன நேருமோ? யாருக்குத் தெரியும்? ஒருவேளை அப்போது நமக்கு மோதிரத்தின் சக்தி தேவைப்படலாம். இந்த மோதிரம் வந்த பிறகுதான் நமக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது. எல்லோரும் நம்மைப் பார்த்து அதிசயிக்கின்றனர். நீ கொஞ்சம் பொறுமையாகவும், புத்திசாலியாகவும் இரேன். மோதிரத்திடம் என்ன கேட்க வேண்டும் என்பதை நாம் காலமெல்லாம் யோசித்துக் கொண்டே இருக்கலாம். அதில் என்ன தவறு?'' என்று விவசாயி பதிலளித்தான்.

கொஞ்ச நாளுக்காவது மனைவியின் வாயை அடைக்கலாம் என்று எண்ணி விவசாயி அப்படிப் பேசினான். இருந்தாலும் உண்மையிலேயே அந்த மோதிரம் அதிர்ஷ்ட தேவதையின் பார்வையை அவன் மீது திருப்பி விட்டது போலத் தோன்றியது. மோதிரம் வந்த பிறகு பயிர்கள் செழித்தன. விளைச்சல் அதிகரித்தது. லாபம் பெருகியது. நாளடைவில்



''ஏலே பாவி, என் ஓட்டு வீட்டுக்குள்ளேயும் புகுந்து நாலு எலிக்குஞ்சு பொரிச்சிட்டியே!''
—சுதர்ஸன்.

அவன் ஒரு செல்வச் சீமானானான். இருந்தாலும், அவன் உழைப்பதை நிறுத்தவே இல்லை. உலகத்தையே விலைக்கு வாங்கப் போவதைப் போல, அவன் தன் ஆட்களுடன் உழைத்து உழைத்துச் சம்பாதித்துக் கொண்டே இருந்தான். மாலை வேளைகளில் வீட்டுக்கு வெளியே உட்கார்ந்துகொண்டு ஓய்வெடுத்தான். அப்போது அந்தத் தெருவழியே போன பெரியவர்களும், குழந்தைகளும் நின்று அவனுக்கு வணக்கம் சொல்லிச் சென்றனர்.

இப்படிப் பல ஆண்டுகள் உருண்டன. எப்போதாவது அவர்கள் தனியாக இருக்கையில் மனைவி அந்த மோதிரத்தைப் பற்றி நினைவூட்டினாள். பலவித ஆலோசனைகளையும் சொன்னாள். "இப்போது அதற்கு என்ன அவசரம்? நல்ல யோசனைகள் எல்லாம் எப்போதும் தாமதமாகத்தான் வரும்!" என்று அவன் பதிலளித்தான். நாளடைவில் மனைவியும் அந்த மோதிரத்தைப் பற்றிப் பேசுவதை நிறுத்திவிட்டாள். விவசாயி அந்த மோதிரத்தை விரலிலேயே அணிந்திருந்தான். தினமும் அதைப் பல முறை சுழற்றவும் செய்தான். ஆனால் அப்படிச் சுழற்றும் போது தன் ஆசைகள் எதையும் வாய்விட்டு உரக்கச் சொல்லாமல் கவனமாக இருந்தான்.

விவசாயிக்கும், அவன் மனைவிக்கும் தலை நரைத்தது. உடலில் சுருக்கங்கள் தோன்றின. மூப்பு வந்தது. அந்தக் காலத்திலும் அவர்கள் மோதிரத்திடம் ஒன்றும் கேட்கவில்லை. இறைவன் திருவருளால் அவர்கள் இருவரும் நோய் நொடி இன்றி ஒரே நாளில் இந்த உலகத்தை விட்டே மறைந்தனர்.

பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் அந்த இரண்டு சவப்பெட்டிகளையும் சுற்றி நின்று அழுதனர். ஒரு பேரன் அந்த மோதிரத்தைக் கழற்றித் தன் தாத்தாவின் நினைவாக வைத்துக் கொள்ள விரும்பினான். ஆனால், மூத்தமகன் குறுக்கிட்டு, "அந்த மோதிரத்தை அப்பா சவக்குழிக்கே எடுத்துச் செல்லட்டும்! அதில் ஏதோ ரகசியம் அடங்கியிருக்கிறது. அதை அவர் யாருக்கும் சொல்லவில்லை. அம்மா கூட அந்த மோதிரத்தை அடிக்கடி உற்றுக் கவனிப்பது வழக்கம். ஒரு வேளை அம்மா தன் இளமைப் பருவத்தில் அதை அப்பாவுக்குப் பரிசாகக் கொடுத்திருக்கலாம்," என்று சொல்லி அந்தப் பிரச்னைக்கு அவன் ஒரு முடிவு கட்டினான்.

விரலில் அந்த மோதிரத்துடனேயே விவசாயி புதைக்கப்பட்டான். உண்மையிலேயே அது ஒரு சாதாரண மோதிரம்தான். இருந்தாலும் விவசாயி நினைத்ததைப் போல, அந்த அபூர்வ மோதிரம் வந்த வேளை அவனுக்கு அதிர்ஷ்டம் அடிக்கத் தொடங்கியது. எது உண்மை, எது பொய் என்று தீர்மானிப்பது சிலவேளைகளில் கஷ்டமாக இருக்கிறது. கெட்டவர்கள் கையிலிருக்கும் நல்ல பொருளை விட, நல்லவர்கள் கையிலுள்ள கெட்ட பொருளுக்கும் சில வேளைகளில் மதிப்பு உயர்ந்து விடுகிறது. இல்லையா?


Richard Volkmann - Leander (1830 - 1889) எழுதிய **The Wishing Ring** என்னும் கதையின் தமிழ் வடிவமே இது.



சித்திரப் புதிர்! [2]

ஆழி ————

1 இறைவனின் அருளைப் பெற சரியான வழியைக் கண்டுபிடியுங்கள்!





2 உடையைப்பார்த்துக் கண்டுபிடியுங்கள்— இவர் எந்த நாட்டுக்காரர்?


3 ஏதோ ஓர் அடிப்படையில், முதல் இரண்டு கட்டங்களில் எண்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதே அடிப்படையில் மூன்றாவது கட்டத்தைப் பூர்த்தி செய்யுங்கள், பார்ப்போம்.

3	4
12	144

2	8
16	256

5	4
20	





4 இது கழுதையுமல்ல குதிரையுமல்ல. என்ன பிராணி இது?

5 ஒரு கழுகு எத்தனை ஆண்டுகள் உயிர் வாழும்?

அ. 10 முதல் 20 ஆண்டுகள்.
ஆ. 30 முதல் 50 ஆண்டுகள்.
இ. 60 முதல் 100 ஆண்டுகள்.
எது சரி?

—— விடைகள் வேறு பக்கம்

பிருந்தாவனக் கவியரங்கம்

கண்டால்?

தேளைக் கண்டால் சிறுவர்க்கு அச்சம்.
தேர்வைக் கண்டால், மாணவர்க்கு அச்சம்.
செலவைக் கண்டால், வரவுக்கு அச்சம்.
சேவகர் கண்டால், திருடர்க்கு அச்சம்.

புலியைக கண்டால் மானுக்கு அச்சம்.
புரளியைக் கண்டால், மனிதர்க்கு அச்சம்.
ஒளியைக் கண்டால், இருளுக்கு அச்சம்.
பழியைக் கண்டால், பண்பிற்கு அச்சம்.



வேடனைக் கண்டால், விலங்குக்கு அச்சம்.
வேலையைக் கண்டால், சோம்பலுக்கு
அச்சம்.

அச்சம், அச்சம், எதற்கும் அச்சம்.
அச்சம் நீங்க, அவன் அருள் மிச்சம்.
—டி. பாபுகுமார் (1338), காரைக்குடி.

பூம் பூம் மாடு

பூம் பூம் மாடு வந்திருக்கு
பார்க்க வாருங்கடி.
ஆமாம் போட்டுத் தலையை ஆட்டும்
அழகைப் பாருங்கடி.

ஐயா வேட்டி தருவார் என்று
ஆசை காட்டுதடி.
அம்மா புடவை தருவாள் என்று
அழைத்துப் போகுதடி.

பாடம் கேட்டுப் பள்ளியில் நாம்
தலையை ஆட்டு றோம்.
பார்க்கப் போனால் நாமெல் லாரும்
பூம் பூம் மாடுதான்.

கேட்ப தில்லை ஐய மிருந்தும்
ஆமாம் போடு றோம்.
பார்க்கப் போனால் நாமும் கூடப்
பூம் பூம் மாடுதான்!
—ஆர். வசுமதி (658), சிதம்பரம்.




தப்பிய பூனை

வெள்ளைப் பூனை கறுப்புப் பூனை
இரண்டும் ஒன்று சேர்ந்தன.
கொள்ளை யிடவே பானை தன்னை
வீடு முழுதும் தேடின.

நள்ளி ருட்டில் தேடித் தேடி
நல்ல பானை கண்டன.
பல்லி னாலே மூடி தன்னைப்
பரப ரப்பாய் அகற்றின.

மூடி விழுந்த சத்தம் கேட்டு
விழித் தெழுந்த அன்னையும்
ஓடி வந்து தடியி னாலே
உதைத்தாள் வெள்ளைப் பூனையை.

இருட்டில் கூட வெள்ளைப் பூனை
இருக்கும் இடமோ தெரிந்தது.
கறுப்புப் பூனை இருளி னோடு
கலந்து தப்பி விட்டது!
—ஏ. எல். மீனான் (7274), ஓ. சிறுவய.



நீயும் வா

வாணி, வாணி, இங்கே வா.
வாசல் கூட்ட நீயும் வா.

தாரா, தாரா, இங்கே வா.
தண்ணீர் தெளிக்க நீயும் வா.

கோமதி, கோமதி, இங்கே வா.
கோலம் போட நீயும் வா.

வசந்தா, வசந்தா, இங்கே வா.
வண்ணம் தீட்ட நீயும் வா.

பாலா, பாலா, இங்கே வா.
பாடம் படிக்க நீயும் வா.

விமலா, விமலா, இங்கே வா.
விளையாடிடவே நீயும் வா.

—எஸ். விஜயா (5759), பெரமனூர்.





எங்கள் வீட்டுப் பூனை

எங்கள் வீட்டில் ஒரு பூனை
இனிய பாலின் நிறப்பூனை.
பொங்கும் பாலின் நுரைபோலப்
பூனை உடலோ மிகமென்மை.

'பென்சில் டார்ச்'சின் வெளிச்சம்போல்
சிறிய கண்கள் பளபளக்கும்.
தன்வால் தூக்கிப் புலிபோலத்
தாவிக் குதித்துப் பாய்ந்துவரும்!

இனி பிடித்த எலிகளெலாம்
வளைக்குள் இருந்து மெலிந்தனவே.
எலிக ளுக்குத் திண்டாட்டம்.
எங்க ளுக்குக் கொண்டாட்டம்.

—க. பழனிவேல் (5501), குன்றக்குடி.

வண்ண மயில்

வண்ண மயில்! வண்ண மயில்!
கண்ட வரைக் கவரும் மயில்!

தோகை மழில்! தோகை மயில்!
சோலை தன்னில் வாழும் மயில்!

அழகு மயில்! அழகு மயில்!
அருமை யாக அகவும் மயில்!

ஆறு முகன் ஏறும் மயில்!
அற்பு தமாய் ஆடும் மயில்!

வான வில்லின் வண்ணம் போல
வண்ணங்களைக் கொண்ட மயில்!

கான மயிலும் ஆட் ஆட
வான மழையும் வந்த திங்கே!

—எஸ். ரம்யா (1907), திருச்சி—20.



சித்திரப் புதிர்-2 விடை



1. உண்மை, நேர்மை, கடமை, அன்பு, உழைப்பு, துணிவு, பணிவு.
2. அரேபியா
3. (1) 3×4=12 12×12=144
   (2) 2×8=16 16×16=256
   (3) 5×4=20 20×20=400
   கடைசிக் கட்டத்தில் இ ரு க் க வேண்டியது —400.
4. கோவேறு கழுதை
5. இ. 60 முதல் 100 ஆண்டுகள்.

நொண்டிப் பசு

—த.கி.இராமசாமி—

தவிட்டுத் தண்ணீரைக் கலந்து — ஒரு பெரிய வாளியில் எடுத்துக் கொண்டு மாட்டுத் தொழுவத்திற்குள் நுழைந்தாள் செங்கமலம்.

அப்பொழுது இருட்டுகிற சமயம்.

மாட்டுத் தொழுவத்தில் மின் விளக்கு எரியவில்லை.

பின்புறக் கதவின் தாழ்ப்பாள் உடைந்து போய் பல மாதங்களாகியும் இன்னமும் சரிவரக் கவனிக்கப் படாததனால் அந்தக் கதவு சரியாகச் சாத்தப்படவில்லை.

சாயங்காலம் நன்றாகவே பெய்திருந்த மழை, சில நிமிஷங்களுக்கு முன்புதான் விட்டிருந்ததால் — வானமே இருண்டு கிடந்தது போல் காணப்பட்டது. இன்னும் சொல்லப் போனால் அமாவாசைக்கு, இன்னும் இரு தினங்களே இருந்தன.

மாட்டுத் தொழுவத்தில் சாதாரணமாக எட்டு முதல், பத்து மாடுகள் வரை ஒரே சமயத்தில் கட்டலாம்.

ஆனால் இப்போது இருப்பதோ ஒரே ஒரு பசுமாடு தான்.

அதுவும் செங்கமலம் பிறந்தவுடனே வாங்கப்பட்டது.

பத்து வருஷங்கள் ஒரு குழந்தை போலவே செங்கமலத்துடன் அது வளர்ந்து வருகிறது.

ஒரே ஒரு பெண் குழந்தை. அதுவும் தாயில்லாக் குழந்தை. அதற்குப் பசும்பால் கொடுத்து நன்றாக வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் செங்கமலத்தின் தந்தை ஜகந்நாதன், செங்கமலத்திற்காகவே வாங்கிய பசுமாடு.

'ஒரே மாட்டின் பால்தான் உடம்புக்கு நல்லது' — என்று ருக்குமணிப் பாட்டியின் சொல்லையே வேதமாக்கி — அந்தப் பசுமாட்டின் பாலையே செங்கமலத்திற்குக் கொடுத்து, அவளை வளர்த்தார்கள்.

தவிட்டுத் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருந்த அந்தப் பசுமாட்டின் கழுத்தை அன்போடு தடவிக் கொடுத்துக் கொண்டிருந்த செங்கமலத்திற்கு, திடீரென்று அழுகை வர ஆரம்பித்தது.

பத்து நாட்களுக்கு முன்பு பெய்த மழையிலே சறுக்கி விழுந்ததில் பசு மாட்டின் பின்புற இடக்கால் நன்றாக அடிபட்டு விட்டது.

தினமும் வைத்தியர் வந்து மருந்து வைத்துக் கட்டுகிறார். ஆனாலும் கால் குணமாவது கஷ்டம் தான் என்று அவர் சொல்லிவிட்டார்.

உள்ளே ரணத்தோடு போராடும் அந்த மிருகத்தின் உள்ளுணர்வுகளை நன்றாகவே அறிந்து கொண்டவள் போல் — செங்கமலம் அதன் நிலையை அறிந்து அழுது கொண்டிருந்தாள்.

செங்கமலத்தின் விசும்பல் ஒலியைக் கேட்டு, தவிட்டுத் தண்ணீரைக் குடித்துக் கொண்டிருந்த அந்த நொண்டிப் பசு வாளியிலிருந்து தலையைத் தூக்கி செங்கமலத்தைப் பார்த்தது.

தன்னை நினைத்துத்தான் செங்கமலம் வருந்துகிறாள் என்றெண்ணிய அந்த நொண்டிப் பசுவுக்கும் கண்ணீர் வந்தது.

தன் நன்றியைத் தெரிவிக்க நாக்கால் செங்கமலத்தின் கையை நக்கிக் கொடுத்தது.

* * * * *

"இந்தப் பசு இனிமேல் நமக்கெதற்கு? நூறோ, இருநூறோ வந்த விலைக்கு வித்துத் தொலையேன்."

செங்கமலத்தின் வீட்டுக்கு வந்த அவளது தாய் மாமன் கர்ண கடூரமாகக் குரல் கொடுத்ததை — சமையல் அறையிலிருந்து, கேட்டுக் கொண்டிருந்தாள் செங்கமலம்.

செங்கமலத்தின் பெற்ருேர் என்ன என்னவோ சொல்லிப் பார்த்தார்கள் அந்தப் பணக்காரத் தாய் மாமனே, அவர்கள் சொல்லுவதைக் கொஞ்சம் கூடப் பொறுமையோடு கேட்டதாகத் தெரியவில்லே.

இரக்கம் என்பதே இல்லாதவன். வாயில்லாப் பிராணிகளிடம் அன்பாக நடந்து கொள்ளத் தெரியாதவன். இப்படிப்பட்டவனிடம் பணம் இருந்து என்ன பயன்? நல்ல மனம் இல்லேயே!

'நொண்டிப் பசு வீட்டிற்கு ஆகாது' என்று வேறு சொல்லி, விற்பதற்கான ஏற்பாட்டையும் அவனே செய்து விட்டான். விடிந்தால், பசு வீட்டை விட்டுப் போய்விடும்!


இதை நினேத்து எத்தனே மணி நேரம் அங்கேயே இருந்தாளோ அவளுக்கே தெரியாது. திடீரென்று இரண்டு பேர், பின்புறக் கதவைத் தள்ளிக் கொண்டு மெல்ல உள்ளே நுழைவதைக் கண்டாள் செங்கமலம்.

வந்தவர்களில், ஒருவன் வெகு வேகமாகச் செங்கமலத்தின் வாயைப் பொத்தினுன். இன்னெருவன் செங்கமலம் அணிந்திருந்த தங்க நகைகளே அறுக்கவும் முயன்ருன்.

திடீரென்று ஏற்பட்ட தாக்குதலேச் சமாளிக்கவும் முடியாமல், வாய் விட்டுக் கதறவும் முடியாமல், செங்கமலம் திணறிக் கொண்டிருந்ததை அந்த நொண்டிப் பசு கூர்ந்து கவனித்தது.

'அம்மா... அம்மா...' என்று பயங்கரமாக அலறியது அந்த நொண்டிப் பசு. மாட்டின் சப்தத்தைக் கேட்டு யாரேனும் வந்து விடப் போகிருர்களே என்று பயந்து போன அந்தத் திருடர்கள், ஆத்திரத்தால் அந்தப் பசுமாட்டைத் தடிக் கம்பால் தாக்கினுர்கள்.

வலியைப் பொறுத்துக் கொண்டு தொடர்ந்து 'ம்மா... ம்மா' என்று அந்த நொண்டிப் பசு கதற — விரைவிலே நகைகளே அறுத்துக் கொண்டு ஓட வேண்டுமென அவர்கள் நினேத்தார்கள். அவர்களில் ஒருவன், "நகைகளேக் கழற்றிக் கொடுக்கிருயா? இல்லே. இதோ குத்திக் கொல்லட்டுமா?" என்று, இடுப்பிலிருந்த கத்தியை எடுத்துச் செங்கமலத்தின் முன் நீட்டினுன்.



செங்கமலத்தின் உயிருக்கு ஆபத்து என்று அறிந்ததும் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்துக் கொண்டு சரே லென்று அவர்கள் மீது பாய்ந்தது அந்த நொண்டிப் பசு!

தனது பலம் வாய்ந்த கொம்பு களால் அவர்கள் இருவர் மீதும் மாறி மாறி மோதிக் கீழே தள்ளவும், செங் கமலம் வாயைத் திறந்து உதவிக்கு அனைவரையும் அழைக்கவும் சரியாக இருந்தது.

செங்கமலம் அலறுகின்ற சப்தமும், தொடர்ந்து பசு மாட்டின் அலறலும் அக்கம் பக்கத்து வீட்டிலுள்ள அனை வரையும் திடுக்கிட வைத்தன!

செங்கமலத்தின் அப்பா, கையில் அரிக்கேன் விளக்கைத் தூக்கிக் கொண்டு 'ஏதோ ஒரு விபரீதம்' நடந்து விட்டதென்பதை உணர்ந்து ஓடோடி வந்தார். அக்கம் பக்கத் திலிருந்தவர்களும் கூடி விட்டார்கள். செங்கமலம் வெடவெடத்து நிற்பதை யும், எதிரிகளை வீழ்த்தி விட்ட மகிழ்ச் சியில் அந்தப் பசு நன்றியோடு பார்ப் பதையும் அவர்கள் கண்டார்கள்.

மாட்டுக் கொம்பால் பலமாகத் தாக்கப்பட்டு, எழுந்திரிக்கவும் முடி யாமல், ஓடவும் முடியாமல் தரையிலே விழுந்து கிடந்த அந்த இருவரையும் அக்கம் பக்கத்து ஜனங்கள் தூக்கிப் பிடித்து நிறுத்தி —

வெளிச்சத்தில் அவர்களது முகங் களைப் பார்த்த பொழுது,

அவர்கள் இருவரும்,

வெகுநாட்களாகவே போலீ சாரால் தேடப்பட்டு வரும் 'கேடி கள்' என்றும், பெருங் குற்றங்கள் நிறையச் செய்தவர்கள் என்றும் தெரிய வந்தது.

நடந்ததைச் செங்கமலம் கூற, ஜகந் நாதனும், மற்றவர்களும் அதிர்ச்சி யடைந்தார்கள்.

தன் மகள் செங்கமலத்தைக் காப் பாற்றிய அந்தப் பசுவைத் 'தெய்வம்' போல் ஜகந்நாதன் எண்ணினார்.

எக் காரணத்தைக் கொண்டும் அந்தப் பசுவை இனி விற்கப் போவ தில்லை என்று ஜகந்நாதன் உறுதி எடுத்துக் கொண்டார். அத்துடன் பட்டணத்திற்கு அந்தப் பசுவை அழைத்துக் கொண்டு போகவும், அதற்குச் சிகிச்சை செய்யவும் வேண் டிய ஏற்பாடுகளை மறுநாளே செய்ய லானார்.

பாலை மாத்திரம் கொடுத்து செங் கமலத்தை அந்தப் பசு வளர்க்கவில்லை. திருடர்களின் அடிகளையும் பொறுத் துக் கொண்டு செங்கமலத்தின் இனிய உயிரையும் அது காப்பாற்றி விட்டது. உண்மையில் அந்தப் பசு 'செங்கமலத் தின் தாயாக, சகோதரியாக, தோழி யாகவே இருக்கிறது' என்று கிரா- மத்து மக்கள் சொல்லிய சொல்,

செங்கமலத்தின் காதிற்கு மட்டு மல்ல;

அந்தப் பசுவின் காதிலேயும் தேனாக விழுந்தது!

மடித்து வைக்கும் ஸ்கூட்டர்!


சோவியத் யூனியனில், கிரிமி யாவைச் சேர்ந்த ஒரு மெக்கா னிக் புதுமையான ஒரு ஸ்கூட் டரைத் தயாரித்திருக்கிறாராம். இந்த ஸ்கூட்டரை மடக்கிவிட்டு மாடத்தில் வைத்து விடலாம். தேவையான போது ஓட்டுவ தற்கு வசதியாக, நீட்டிக்கொள் ளலாம். ஒரே நிமிடத்தில் மடக்க வும், நீட்டவும் செய்யலாம்.

இந்த ஸ்கூட்டரின் மொத்த எடை 26 கிலோ. வண்டியை ஓட்டிச் செல்பவரோடு, கூட இருவர் ஏறிச் செல்லலாம். மணிக்கு 40 கிலோ மீட்டர் வேகம் செல்லக் கூடியது.

மடக்கிய ஸ்கூட்டரை உறுதி யான பைக்குள் போட்டு, ரயிலிலோ, பஸ்ஸிலோ எடுத்துச் செல்லலாம். இதைத் தயாரித் திருப்பவர் பெயர் விளாடிமிர் அப்ரமோவ்.

ஆதாரம்: கலைக்கதிர், ஜனவரி 83

தகவல்: தி. சிவகுமார்.







நால்வரில் ஒருவன்

—சிற்பி சோமு

அந்த ஊரிலே சாமியார் ஒருவர் இருந்தார். அவருக்கு நான்கு சிஷ்யர்கள் இருந்தார்கள். அந்த நால்வரில் ஒருவனைத் தனக்கு வாரிசாகத் தேர்ந்தெடுக்க விரும்பினார் சாமியார்.

எவ்விதம் தேர்ந்தெடுப்பது என்று எண்ணிய சாமியார், அந்த நால்வருக்கும் ஒரு சோதனை வைப்பது என்றும் அவற்றில் வெற்றி கொள்பவனைத் தமக்கு வாரிசாக நியமித்து விடலாம் என்றும் முடிவுசெய்து, ஒரு நாள் அந்த நான்கு சிஷ்யர்களையும் அழைத்தார்.

''ஏ சிஷ்யர்களே! இன்றிலிருந்து மூன்று மாதங்கள் நான் இமய உச்சிக்குக் கடுந்தவம் மேற்கொள்ள இருக்கிறேன். அந்த மூன்று மாதங்களில் நீங்கள் எங்கு வேண்டுமானாலும் போகலாம். போக விருப்பம் இல்லையானால் இங்கேயே இருக்கலாம். அது உங்கள் இஷ்டம். ஆனால், நான் திரும்பி வரும்போது நீங்கள் நால்வரும் இங்கே இருக்க வேண்டும்! இது எனது கட்டளை. இதை மீறுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள்,'' என்றார்.

''அப்படியே ஆகட்டும் ஸ்வாமி!'' என்றனர் நால்வரும்.

சாமியார் புறப்பட்டுப் போய்விட்டார்.

அவர் போனதும் சிஷ்யர்கள் ஒன்று கூடினார்கள். ஆள் ஆளுக்கு ஒரு திசையை நோக்கிச் செல்வது என்று தீர்மானித்தார்கள். அவர்களில் ஒருவன் மட்டும் ''நான் எங்கும் போகப் போவதில்லை. இங்கேயே இருந்து ஆசிரமத்தை, குருநாதர் வரும்வரை பாதுகாத்து வருகிறேன். நீங்கள் சென்று வாருங்கள்'' என்று கூறிவிட்டான்.

''இது கிணற்றுத் தவளை. எங்கும் போகாது'' என்று மற்ற மூவரும் அவனைக் கேலி செய்துவிட்டுப்போய் விட்டனர்.

அவனோ அதை ஒன்றும் பொருட படுத்திக் கொள்ளவில்லை. மாறாக, முன்னைவிட மிகவும் சுறுசுறுப்பாகச் செயல்பட்டான். ஆசிரமத்தை மிகவும் அழகுபடுத்தினான். சுற்றுப் புறத்தைச் சீர் படுத்தினான்.

அந்த ஆசிரமம் முன்னைவிட இப்போது லட்சுமி கடாட்சமாக விளங்கியது.

குருநாதர் சொல்லிய மூன்று மாதங்கள் நாளையுடன் முடிவடைகின்றன.

விடிந்தால் குருநாதர் வந்துவிடுவார்.

திசைக்கு ஒருவனாகப் போயிருந்த அந்த மூன்று சிஷ்யர்களும் முதல் நாள் வந்து சேர்ந்தனர். ''முன்பு நாமிருந்த ஆசிரமம் இதுதானா?'' என்று அவர்கள் வியக்கும்படியாக ஆசிரமத்தை அழகுபடுத்தியிருந்தான் அங்கேயே தங்கியிருந்த சங்கரன் என்ற சிஷ்யன். இது அந்த மூவரின் உள்ளத்திலும் பொறாமைத் தீயை ஏற்றிவிட்டது. 'குருநாதரிடம் இவன் ஒருவன் நல்ல பெயர் எடுத்துக் கொள்ளவே நம்மைப் போல் எங்கும் செல்லாது இங்கேயே தங்கியிருந்து இப்படித் திட்டமிட்டு வேலை செய்து



"குழந்தைகளே, உங்களுக்கு என்ன வேணும்? சொல்லுங்க; தாரேன்."

"மாஸ்டர் குட்டிச்சாத்தான் படத்திலே வருதே தானா ஓடுற சைக்கிள் ரிக்ஷா, அது மாதிரி ஒண்ணு வேணும்"

"சாரி, அதுக்குப் பதில் பேரிச்சம் பழம் தாரேன்."

—சுதர்ஸன்.

இருக்கிறான். ஆகவே, இவனைக் குருநாதர் வருவதற்குள் தீர்த்துக் கட்டி விட வேண்டும்' என்று எண்ணிக் கொண்டே அந்த மூவரும், அவனை அன்று இரவே அடித்துக் கொன்று ஒரு சாக்கில் போட்டுக் கட்டி, ஆசிரமத்துக்கு அருகில் ஓடிக் கொண்டிருக்கும் ஆற்றில் வீசிவிட்டனர். பின்னர் ஒன்றும் அறியாதவர்கள் போல இருந்துவிட்டனர்.

காலையில் குருநாதர் வந்துவிட்டார். வந்தவர், ஆசிரமத்தைக் கண்டு வியந்து போய், "சிஷ்யர்களே... இது என்ன விந்தை! நமது ஆசிரமம் முன்னைவிட இப்போது இவ்வளவு பொலிவுடன் திகழ்கிறதே! எப்படி?" என்று கேட்டார்.

அந்த மூவரில் ஒருவன் கூறினான்: "குருநாதா, தாங்கள் இமயமலை சென்றதும் சங்கரன் மட்டும் எங்கோ போய்விட்டான். நாங்கள் மூவரும் எங்கும் செல்லாது இங்கேயே இருந்து ஆசிரமத்தைக் கவனித்து வந்தோம். நம் ஆசிரமத்தை அழகு படுத்துவதே எங்கள் தலையாய பணி என்று கருதித் தினந்தோறும் செயல்பட்டோம்...!" என்றான்.

அந்த மூவரில் இரண்டு பேர் அவனோடு ஒத்துப் பாடினார்கள்.

"சிஷ்ய சிகாமணிகளே! உங்கள் சேவையைப் பாராட்டுகிறேன். நீங்கள் மூவரும் உடனே சென்று எப்படியாவது சங்கரனைக் கண்டுபிடித்துக் கொண்டு வாருங்கள்."

மூவரும் 'திரு.திரு'வென விழித்தனர்.

"ஏன் விழிக்கிறீர்கள்? மூவரும் ஒன்றாகப் போங்கள் அல்லது திசைக்கொருவராகச் சென்று இன்னும் ஒரு வாரத்திற்குள், அதாவது அடுத்த வெள்ளிக்கிழமை பொழுது சாய்வதற்குள் அவனைக் கண்டுபிடித்துக் கொண்டு வாருங்கள்" என்றார் சாமியார்.

ஒன்றும் பேச முடியாது அந்த மூவரும் விடைபெற்றுச் சென்றனர். ஒரு காத தூரம் வந்துவிட்ட அவர்கள், "குருநாதரிடம் என்ன சொல்வது? முட்டாள்தனமாக நாம் சங்கரனைக் கொன்று ஆற்றில் வீசி விட்டோமே! இப்போது அவனைக் குருநாதர் கொண்டு வரச் சொல்கிறாரே! என்ன செய்யலாம்?" என்று சிந்திக்கலாயினர்.

அந்த மூவரில் ஒருவன் உபாயம் சொன்னான்!

ஒரு வாரம் தவணை தந்திருக்கிறார். அதுவரை சாப்பாட்டுக்கு என்ன செய்வது? பிச்சை எடுத்துத்தான் காலந்தள்ள வேண்டும். மரத்தடியிலோ, மண்டபத்திலோ படுத்துத் தூங்குவோம். ஒரு வாரம் சென்ற பிறகு, குருவிடம் போய், 'குருநாதரே, நாங்கள் திசைக்கொருவராகப் பிரிந்து சென்றோம். எங்கு தேடியும் அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை' என்று கூறிவிடலாம்" என்றான். அவன் திட்டத்தை மற்ற இருவரும் ஆமோதிக்கவே, அதன்படியே குருநாதரிடம் ஒருவர் பின் ஒருவராகவே வந்து சொன்னார்கள்.

சிறிது நேரத்தில் அவர்கள் கண்ட காட்சி அவர்களைத் திடுக்கிட வைத்தது. அவர்களால் கொல்லப்பட்டு ஆற்றிலே எறியப்பட்ட சங்கரன் கையில் மலர்க்கூடை ஒன்றினைக் கொண்டு வந்து குருநாதர் பாதங்க

ளில் வைத்து வணங்கினான்! ''குருதேவா! தாங்கள் வரும்போது இங்கிருந்து வரவேற்க முடியாமைக்கு வருந்துகிறேன். என்னை மன்னியுங்கள், ஸ்வாமி!'' என்றான்.

அந்த மூ வ ரு ம் பேயறைந்தது போல் நின்றனர். 'செத்தவன் எப்படிப் பிழைத்து வந்தான்?' என்று மனத்தினுள் குழப்பமடைந்தார்கள்.

''சிஷ்யா! எங்கே போய் இருந்தாய்? என்ன நடந்தது?'' என்றார், சாமியார்.

'சங்கரன் என்ன சொல்லப்போகிறானோ?' என்று அந்த மூவரும் கலங்கிப் போய் நின்றனர்.

''குருதேவா! தாங்கள் புறப்பட்டுப் போனதும், நகருக்குள் சென்று வரலாம் என்று ஆசிரமத்திலிருந்து புறப்பட்டுக் காட்டு வழியே சென்றேன். அப்போது என்னை மூன்று ஓநாய்கள் அடித்துக் கொன்று, அந்த இடத்திலேயே போட்டுவிட்டுப் போய்விட்டன. அப்போது அந்த வழியே ஒரு மகான் வந்தார். அவர் திருப்பாதம் பட்டு நான் உயிர்பெற்று எழுந்தேன். இதுநாள் வரை அந்த மகானுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தேன், குருதேவா...'' என்றான், சங்கரன்.

சங்கரன் தங்களைக் காட்டிக் கொடுக்கவில்லை என்று சந்தோஷப்பட்ட அந்த மூன்று சிஷ்யர்களும் சுதாரித்துக் கொண்டு, ''குருதேவா, நாங்கள் அப்போதே சொன்னோம். காட்டு வழியே போகாதே! ஆபத்து என்றோம். எங்கள் பேச்சைக் கேட்



காமல் போனதற்கு அவனுக்குத் தக்க விதமாகத் தண்டனை கிடைத்துவிட்டது'' என்றனர். செய்வதையும் செய்துவிட்டு மேலும் பொய் சொல்லும் அந்த மூவரையும்,

''ஏ துஷ்ட ஜென்மங்களே, நீங்கள் செய்த படுபாதகச் செயலை மறைக்க, சங்கரன் மனமறிந்து பொய் சொல்கிறான். ஏன்...? உங்களைக் காட்டிக் கொடுக்க அவன் விரும்பவில்லை.நீங்கள்தான் அவனைக் கொன்று ஆற்றில் தூக்கிப் போட்டீர்கள் என்பதை நான் ஞான திருஷ்டியால் நன்கறிவேன். இறந்த சங்கரனைத் தவ வலிமையால் உயிர் பெற்றெழச் செய்ததும் நான்தான். ஆனால், நீங்கள் மேலும், மேலும் பொய் சொல்கிறீர்கள், உங்கள் பாதகச் செயலுக்குத் தக்க தண்டனையாக, நீங்கள் மூவரும் இந்த விநாடியே ஓநாய்களாக உருமாறச் சாபமிடுகிறேன்'' என்றார்.

அடுத்த நிமிடம் அந்த மூவரும் ஓநாய்களாக உருமாறினார்கள்.

உடனே சங்கரன் குருதேவர் காலில் விழுந்து வணங்கி ''குருதேவா... ஏதோ அறியாமல் செய்து விட்டார்கள். அவர்களைக் காப்பாற்றுங்கள்'' என்றான்.


குருதேவரும் மனமிரங்கி அவர்களுக்குச் சுய உருக்கொடுத்து எழச் செய்தார். பின், ''சிஷ்யர்களே, உங்களில் ஒருவனை எனக்கு வாரிசாக நியமிக்கவே இவ்விதமாகச் சோதனைகள் செய்தேன். எல்லாவற்றிலும் சங்கரனே வென்றான். ஒரு சாதுக்குரிய அனைத்துக் குணங்களும், மற்றும் குரு பக்தியும் அவனிடமே நிறைந்து உள்ளன. ஆகவே, இன்றிலிருந்து அவனே எனது வாரிசு. அவனுக்குத் தக்க மரியாதை கொடுத்து வர வேண்டியது உங்கள் கடமை'' என்றார் குருதேவர்.

அந்த மூவரும் அவ்விதமே செய்கிறோம் என்று கூறிக் குருதேவரின் காலில் விழுந்து வணங்கினர். பிறகு, சங்கரன் காலிலும் விழுந்து வணங்கி மன்னிப்புக் கோரினர்.

''டிரைவரிடம் கேள்''

அணுவின் ஆற்றல்களை ஆராய்ந்து உலகுக்கு அறிவித்தவர்களில் மிக முக்கியமானவர் ரூதர் போர்ட். அவர் ஊர் ஊராகச் சென்று சொற்பொழிவாற்றி வந்தார். அவருடைய சொற்பொழிவுகள், அவருடன் வந்த கார் டிரைவர் மனத்தில் நன்கு பதிந்து விட்டன.

ஒருமுறை ரூதர் போர்டிடம், ''சார், உங்கள் சொற்பொழிவுகள் என் மனத்தில் நன்றாகப் பதிந்து விட்டன. ஆகையால், அடுத்த முறை



நான் உங்களுக்குப் பதிலாகச் சொற்பொழிவாற்றட்டுமா?'' என்று கேட்டார் டிரைவர்.

''சரி'' என்றார் ரூதர் போர்ட்.

ஓர் ஊரில் டிரைவர் ரூதர் போர்டைப் போல உடை அணிந்து சொற்பொழிவாற்றினார். ரூதர் போர்ட் டிரைவரைப் போல காரில் இருந்தார்.

சொற்பொழிவாற்றி விட்டுத் திரும்பும்போது, ஒருவர் ரூதர் போர்ட் வேஷத்திலிருந்த டிரைவரிடம், தனக்கு ஏற்பட்ட ஒரு சந்தேகத்தைத் தெரிவித்து விளக்கம் கேட்டார்.

''ப்பூ! இது ஒரு சாதாரணக் கேள்வி. இதற்கு என் போன்ற ஒரு விஞ்ஞானியா பதில் சொல்வது? என் டிரைவரிடம் கேள்; அவனே பதில் சொல்லிவிடுவான்'' என்று கூறி உண்மையான டிரைவர் தப்பித்தார்.

—எஸ். வாசுதேவன் (4891),
சிதம்பரம்.

ஜன்னல் ஓரம்



தம்பி சீனிவாசன்

எங்கே பயணம் போனாலும்
எந்தன் இடமோ ஜன்னல் இடம்!

உள்ளூர் பஸ்ஸில் போனாலும்
ஓரிடம் எனக்கு ஜன்னல் இடம்
தெள்ளத் தெளிவாய்க் கவனிப்பேன்
தெருவின் ஓரக் காட்சிகளை

நீண்ட பயணம் ரயிலானால்,
நினைக்க நினைக்க இன்பம்தான்.
வேண்டிப் பெறுவேன் ஜன்னல் இடம்,
விதவிதக் காட்சி பலகாண.

மரமும் தந்திக் கம்பமுமே
வரிசை யாக வரும் எதிரே
விரியும் காட்சி மலை — ஆறு
வெயிலும் மழையும் கண்காட்சி!

எத்தனை எத்தனை பாலங்கள்!
எத்தனை ஊர்கள் வழி நெடுக!
எத்தனை எத்தனை மனிதர்கள்!
எத்தனை எத்தனை வெட்டவெளி!

உள்ளே இருக்கும் என் மனமோ
ஓடும் வெளியில் ஜன்னல் வழி!
துள்ளிக் குதிக்கும் பயணத்தில்
சுகமே ஜன்னல் காட்சி இடம்!



பிருந்தாவனக் கதையரங்கம்

கலெக்டர் ஐயா

அது ஓர் அழகிய சிறிய கிராமம். அதனுடைய பெயர் நல்லூர் என்பதாகும். இயற்கை அன்னைக்கு அந்தக் கிராமத்திடம் என்ன பிரியமோ, தெரியவில்லை. தன்னிடம் உள்ள அழகையெல்லாம் அந்தக் கிராமத்துக்கு வாரி வழங்கியிருந்தாள். குளம், ஏரிகளிலுள்ள தண்ணீர் நீல வானத்தைப் படம் பிடித்துக் காட்டிக் கொண்டிருந்தன. மலர்கள் போட்டி போட்டுக் கொண்டு மணம் பரப்பிக் கொண்டிருந்தன.

அந்த ஊரிலே படிப்பில் ஆர்வம் மிக்க, ஆனால் வசதியில்லாத, கால் நடைகளை மேய்க்கும் 'கிந்தன்' என்ற பெயருடைய சிறுவனொருவன் இருந்தான். நல்லூரில் உயர்நிலைப் பள்ளி கிடையாது. ஐந்தாம் வகுப்பு வரையிலுள்ள ஓர் பள்ளிக் கூடம் இருந்தது. தன் தந்தையை வற்புறுத்தி அதில் சேர்ந்து கொண்டான் அவன். அதுவும் இலவசக் கல்வியும், சத்துணவும் கிடைப்பதாலேயே அனுமதி கிடைத்தது. தற்போது ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த கிந்தன்தான் இதுவரையில் பள்ளியின் முதல் மாணவன்.

இதுவரை அவனுக்கு வேண்டிய நோட்டுப் புத்தகங்களையெல்லாம் கொடுத்து அவன் ஆர்வத்தை வளர்த்தவர் நல்லெண்ணம் கொண்ட தலைமையாசிரியர்தான்! ஒரு முறை கிந்தனின் த்ந்தை தலைமையாசிரியரிடம், ''இவனுக்கெதுக்குங்க படிப்பெல்லாம்...?'', என்று கூறினார். அதற்குத் தலைமையாசிரியர், 'மண்ணிலேதான் தங்கம் விளைகிறது. அதுபோல கிந்தன் சிறந்த எதிர்காலத்தைத் தனக்கு உருவாக்கிக் கொள்வான். எனவே அவன் படிப்புக்கு, அவனுடைய அறிவென்னும் வெள்ளத்துக்குத் 'தடை' யென்னும் அணைக்கட்டாகக் குறுக்கே நில்லாதீர்கள்'', என்று கூறி கிந்தனின் ஆர்வத்தை வளர்த்தார்.

திருச்சி ராஜா (4433)

ஐந்தாம் வகுப்பிலும் மிக உயர்ந்த மதிப்பெண்கள் பெற்ற கிந்தனை, தலைமையாசிரியர் அழைத்து, ''கிந்தா, நீ மேற்படிப்புக்குச் சென்னை செல்ல வேண்டும். நான் தரும் பள்ளியின் முகவரியைக் கண்டுபிடித்து, அங்குள்ள தலைமையாசிரியரிடம் நான் தரும் நற்சான்றிதழ்களையும், சிபாரிசுக் கடிதத்தையும் கொடுத்தாயானால் அவர் உனக்கு ஓர் வளமான எதிர்காலத்தை உருவாக்கித் தருவார். மேலும் அவர் என் சிறந்த சிநேகிதர். அவருக்கென்று யாரும் கிடையாது. எனவே, அவர் உனக்கு வழிகாட்டிடுவார்'', என்று கூறி விடை கொடுத்தார்.

வீட்டிற்கு வந்து தன் தந்தையிடம் தன் எண்ணங்களைக் கூறிய கிந்தனுக்கு அடியும், உதையும், பண்ணையார் வீட்டுக் கால்நடைகளை மேய்க்கும் பதவியும்தான் கிடைத்தன. அவனுடைய படிப்பில் சிறிதும் ஆர்வம் காட்டாத அவன் தந்தை, 'பண்ணையார் வீட்டு ஆடு மாடுகளை மேய்த்தால் மாதம் 60 ரூபாய் கிடைக்குமே!'', என்றுதான் எண்ணினார்.



இரண்டு நாட்கள் அழுது கொண்டே வேலை பார்த்த கிந்தன், மூன்றாம் நாள் இரவு வீட்டிலுள்ள பெற்றோருக்குத் தெரியாமல், தலைமையாசிரியர் கொடுத்த சான்றிதழ்களையும், சிபாரிசுக்கடிதங்களையும்எடுத்துக்கொண்டு நல்லூர் வழியாகச் சென்னை செல்லும் இரயிலில் ஏறிவிட்டான்.

அது காலை நேரமாதலால் இன்னும் ஒருவரும் பள்ளிக்கு வந்துவிட்டிருக்கவில்லை. தலைமையாசிரியர் பாரதியாரின் கவிதைப் புத்தகத்தைப் படித்தவாறே பள்ளி மைதானத்தில் நடந்து கொண்டிருந்தார். அவர் காலில் போய் விழுந்து கதறி அழுதான் கிந்தன். அவனை மெதுவாகத் தூக்கி நிறுத்தி, அவன் யார்? ஏன் இங்கு வந்தான் என்ற விவரங்களையெல்லாம் கேட்டறிந்த அவர், தன் செலவிலேயே ஓர் விடுதியில் சேர்த்து அவனுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து அவனைக் கரையேற்றினார்.

பன்னிரண்டாம் வகுப்பிலே மாநிலத்திலேயே முதல் மாணவனாகத் தேர்ந்தான். பத்திரிகைகளின் பரிசுப் பணத்திலும் அரசாங்கச்செலவிலும் மேல் படிப்புப் படித்தான். ஐ.ஏ.எஸ் தேர்வு எழுதி வெற்றியும் பெற்றான். சில மாதங்களில் 'நல்லூர்'அடங்கிய திருச்சி மாவட்டத்திற்கு ஆட்சித் தலைவராக அரசாங்கத்தால்நியமனம்செய்யப்பட்டான். திருச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து ஊர்களுக்கும் சென்று அவர்கள் கொடுத்த மரியாதைகளையும், புகார்களையும் ஏற்றுக்கொண்டான். அவனுடைய ஊராகிய நல்லூருக்கும் வந்து சேர்ந்தான். அவனை யாருமே அடையாளம் கண்டுகொள்ளவில்லை. நடை உடையில் அவ்வளவு தூரம் மாறிப் போயிருந்தான்.

தன்னுடைய காரை அனுப்பி, தன்னுடைய பெற்றோரைத் தான் தங்கியிருந்த விடுதிக்கு அழைத்துவரச்சொன்னான். விடுதிக்கு அவர்கள் வந்ததும் ''என்ன நடக்குமோ?'' என்று பயந்து கொண்டிருந்தனர் இருவரும். சிறிது நேரத்தில் கிந்தன் வந்தான். அவனை அடையாளம் கண்டுகொள்ளவில்லை அவனுடைய பெற்றோர். ''துரை ஐயா! நாங்க ஏதாவது தப்பு பண்ணியிருந்தால் பெரிய மனசு பண்ணி மன்னிச்சிருங்க,'' என்றார் அவன் அப்பா. உடனே அவன் தாயும், ''ஆமா! துரை ஐயா!'' என்றாள்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை. உங்களுக்குக் குழந்தைகள் ஏதாவது உண்டா? என்று விசாரிக்கவே அழைத்துவரச் சொன்னேன், அவ்வளவுதான்,'' என்றான் கிந்தன்.

''அதை ஏன் கேட்கறீங்க துரை ஐயா! எனக்கு 'கிந்தன்' அப்படீன்னு ஒரே ஒரு மகன் இருந்தான். படிக்கணும்.. படிக்கணும்... அப்புடீன்னுட்டு ஒரே பிடிவாதமா இருந்தான். நான்தான் அவனை ஆடு, மாடு மேய்க்கச் சொல்லிப் பிடிவாதம் பண்ணி அடிச்சு நொறுக்கினேன்'' என்று கூறி வருத்தப்பட்டார்.

அதைக் கேட்டு அழுதுவிட்ட கிந்தன் தான்தான் அவர்கள் மகன் என்று கூறி விளக்கியும் அவர்கள் நம்ப மறுக்கவே, தன் அடையாளமாகப் பெற்றோருக்குத் தெரிந்த தழும்பு ஒன்றைக் காண்பித்து, அவர்கள் காலில் விழுந்தான்.

ஆனந்தக் கண்ணீர் வடித்த அவன் தந்தை, ''கி...ந்...தா'' என்று அவனைத் தன்னோடு கட்டியணைத்துக் கொண்டார். ''எனக்குத் தெரியும், எம்புள்ளை நிச்சயமாப் பெரிய ஆளா வருவான்னுட்டு,'' என்றாள் அவன் தாய்.

கோகுலம்



R. சிவகாமி

"ஏண்டா செல்வம்! இந்த மாசக் 'கோகுலம்' வாங்கிட்டியா?" வினவினான் செல்வத்தின் நண்பன் கார்த்திக்.

"ஓ, வாங்கிட்டேனே! அதுக்கு என்ன?"

"கொடேன்! படிச்சுட்டுத் தர்றேன்."

"ஏன்? நீ வாங்கல்லியா?" என்று கேட்டான் செல்வம்.

"ம்ஹூம். ரெண்டு ரூபாயாச்சே! அதுக்கு நாலு ஐஸ்கிரீம் வாங்கிச் சாப்பிடலாம்!"

"அப்படின்னா அந்த ஐஸ்கிரீம்லேயே கதை படிச்சுக்கோ!"

"டேய், டேய், இங்கேயே படிச்சுட்டுத் தர்றேன், தாடா!"

"முடியாது!"

"கொடுடான்னா... பிகு பண்றியே?"

"கேக்கறது ஓசி! இதுலே அதட்டல் வேறேயா? நீதான் தினமும் எட்டணுவுக்குக் குறையாமல் வாங்கித் திங்கிறியே! அந்த ஈ மொய்த்த பண்டத்தைத் திங்கறதை விட்டுட்டுத் தினம் பத்துக்காசு உண்டியலிலே போட்டால் என் தயவை எதிர்பார்க்க வேண்டாமே! நீயே 'கோகுலம்' வாங்கலாமே?"

"படிச்சு முடிச்சப்புறம், அதைத் தின்ன முடியுமா? நாம என்ன கழுதைங்களா?" என்றான் இளக்காரமாக கார்த்திக்.

"சேர்த்து வச்சுக்கிறது. லீவிலே திரும்பவும் படிக்கிறது."

"சீ, போ. உன்னைப் போய்க் கேட்டேனே. ரெண்டு ரூபாயைக் கொடுத்தால் மறு பேச்சுப் பேசாமல் தரான் கடைக்காரன். என்னவோ பெரிசா பேசறியே!" வேகமாய் வெளியேறினான் கார்த்திக்.

செல்வம் தன் கையிலிருந்த 'கோகுல'த்தைப் பிரித்தான்.

அப்போது அழகு அங்கு வந்தான். அவனும் நண்பனே.

அழகு, ஆவலுடன், "கோகுலம்

படிச்சிட்டியாடா?'' என்றான்.

''ஓ, படிச்சிட்டேன்! இந்தா எடுத்துட்டுப் போ. படிச்சிட்டுக் கொண்டு வா!'' என்றான் செல்வம்.

''சரிடா, படிச்ச உடனே கொண்டு வந்துடறேன்!'' என்ற அழகு, 'கோகுல'த்துடன் வெளியேறினான்.

இவை எல்லாவற்றையும் கவனித்து'க் கொண்டிருந்த செல்வத்தின் அண்ணா அவனைக் கேட்டார்:

''ஏண்டா, செல்வம், கார்த்திக் இங்கேயே படிச்சுட்டுத் தர்றேன்னு சொன்னான். கொடுக்க மாட்டேன்னுட்டே! அழகிடம் வீட்டுக்கே எடுத்துப் போகச் சொல்லிட்டியே! ஏன் இந்தப் பாரபட்சம்?''

''அது வந்தண்ணா... கார்த்திக் நல்ல காசுக்காரன்! அவனாலே வாங்க முடிஞ்சும் 'தீனி'யே தின்னுட்டு 'ஓசி' கேட்கிறான்! அதான் கிடையாதுன்னேன். கடையிலே போய் வாங்கட்டுமே! அழகு அப்படியில்லே. அவன் ஏழைப் பையன். காசு கொடுத்து அவனாலே வாங்க முடியாது. அதான் அழகு கேட்டவுடனே கொடுத்துட்டேன்! சரிதானே அண்ணா?''

''ஓ! ரொம்ப சரி,'' என்று பாராட்டினார், அண்ணா.

பாட்டில் நிறையக் காசு

அம்மாவும் நானும் அந்த பஸ் ஸ்டாண்டிற்கு வந்த போது கிட்டத் தட்ட மணி பன்னிரண்டு. அம்மாவுக்குத் தாகம் அதிகமாக எடுத்தது. பக்கத்தில் தண்ணீர் கிடைக்குமா என்று பார்த்ததில் எனக்கும் அம்மாவுக்கும் ஏமாற்றம்தான் கிடைத்தது. எங்கள் பஸ் கிளம்பக் கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் இருக்கிறது. ''எங்கேயாவது ஹோட்டலில் தண்ணீர் வாங்கி வரேன்'' என்று அம்மாவிடம் கூறிவிட்டு ஒரு பாட்டிலை எடுத்துக் கொண்டு கிளம்பினேன்.


பஸ் ஸ்டாண்டுக்கு எதிரிலேயே ஒரு ஹோட்டல் இருந்தது. ஹோட்டலுக்கு வெளியே ஏதோ ஒரு இயந்திரம் இருந்தது. எடை இயந்திரம் என்று நான் நினைத்தேன். ஆனால், நான் நினைத்தது தவறு என்று சொல்வது போல அந்த இயந்திரத்தின்மேல் கீழ்க்கண்ட வாசகம் இருந்தது.

''இயந்திரத்தில் இரண்டு ஒரு ரூபாய் நாணயங்களைப் போட்டால் இயந்திரம் 100 மில்லி அளவு ஆரஞ்சுப் பழச்சாறு அளிக்கும்.''

இதைப் பார்த்தவுடன் என் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இயந்திரத்தில் குழாயடியில் நான் கொண்டு சென்ற வாய் அகன்ற பாட்டிலைப் பிடித்துக் கொண்டேன். குழாயின் வாயும் பெரிதாகவே இருந்தது. அங்கிருந்த ஒரு துவாரத்தில் இரண்டு ஒருரூபாய் நாணயத்தைப் போட்டேன்; ஆரஞ்சுப்

எஸ்.எஸ். ராமன் (1)

பழச் சாறு வரும் என்று காத்திருந்தேன், ஆனால் அது வரவில்லை. காசு சரியாக விழவில்லையோ என்று நினைத்து, துவாரத்தில் ஓங்கி இரண்டு தட்டுத் தட்டினேன். அவ்வளவுதான்; ஆரஞ்சுப் பழச்சாற்றுக்குப் பதில் ஒரு



ரூபாய் நாணயங்களாக விழ ஆரம்பித்தன. 30 அல்லது 40 நாணயங்கள் விழுந்திருக்கும். பிறகு நின்றுவிட்டது. நான் பாட்டிலை மூடிவிட்டுத் துணிப் பைக்குள் போட்டுக் கொண்டு ஹோட்டலுக்குள் பிரவேசித்தேன்.

''சார்'' என்றேன்.

முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த அவர், என் குரலைக் கேட்டு நிமிர்ந்தார். மற்றவர்களைப் போல நானும் காசு கேட்க வந்தவன் என்று நினைத்தவர், என் கையில் இரண்டு ஒரு ரூபாய் நாணயத்தைக் கொடுத்து, ''தம்பி! இயந்திரம் வேலை செய்யவில்லை, அதற்காக மன்னிக்கவும்,'' என்று கூறிவிட்டு உள்ளே குரல் கொடுத்தார். ''டேய் ரத்தினம், ''இயந்திரம் வேலை செய்யவில்லை'' என போர்டு மாட்டச் சொல்லி எவ்வளவு நேரமாகிறது? உடனே மாட்டுடா. காலையிலேயிருந்து ஒரே தொல்லையாய்ப் போயிற்று,'' என்றார் சலித்துக் கொண்டே.

நான் பேச வாய் எடுத்தேன்.

''சார், அதில்லை...'' நான் முடிக்கவில்லை; பாதியிலேயே அவர் தடுத்தார்.

''இன்னிக்குக் காலையில் போதுமான அளவு ஆரஞ்சுச் சாறு ஊற்றவில்லை, ஆரஞ்சுச் சாறு தீர்ந்துவிட்டது, அதனால் காசு போட்டால் இயந்திரம் காசை விழுங்கிவிட்டு உங்களுக்கு ஏமாற்றத்தைத் தான் தந்திருக்கும். இதை இங்கு வந்தவர்களெல்லாம் சொல்லிச் சொல்லி எனக்குச் சலித்து விட்டது, தயவு செய்து போங்கள்,'' என்று கூறினார் அந்த மானேஜர்.

இனிமேலும் பேசிப் பிரயோஜனமில்லை என்று நான் வெளியே வந்து விடவில்லை. என்னைப் பேச விட மாட்டார் என்று தெரிந்ததனால், துணிப்பையிலிருந்த பாட்டிலை எடுத்து வெளியே வைத்தேன். மானேஜர் அதைப் பார்த்தவுடன் வாயைப் பிளந்தார்.


துவாரத்தில் காசு போட்டதிலிருந்து காசு வந்தவரை எல்லாவற்றையும் அவரிடம் கூறினேன்.

என்னை நன்றியுடன் பார்த்தார். ''தம்பி, உன்னைப் போல அபூர்வமான ஆசாமி இருப்பது கடினம், உன்னுடைய நேர்மை என்னை மிகவும் கவர்ந்துவிட்டது,'' என்று கூறியவர், உள்ளிருந்து ரத்தினத்தைக் கூப்பிட்டார். என் பாட்டிலில் ஆப்பிள் பழச்சாறு ஊற்றிக் கொண்டு வரச் சொன்னார்.

சிறிது நேரத்தில் அந்த பாட்டில், ஆப்பிள் பழச்சாறுடன் என் கைக்கு வந்தது. அதைப் பார்த்தவுடன் என் நாக்கில் நீர் கொட்டியது என்று சொல்லவே வேண்டியதில்லை. ஹோட்டல் மானேஜரிடம் அவர் கொடுத்த இரண்டு ரூபாய் நாணயங்களை நீட்டினேன்.

''தம்பி, நீ செய்த உதவிக்கு நான் இதை வாங்க மாட்டேன்,'' என்றார்.

''நேர்மைக்குப் பரிசு அளிப்பது தவறு,'' என்று கூறிய நான், காசை அவரிடம் கொடுத்துவிட்டு, ஒரு நல்ல காரியம் செய்த திருப்தியில், பாட்டிலுடன் அம்மா இருக்கும் இடத்தை நோக்கி நகர்ந்தேன்.



நல்ல உதவி


''என் சைக்கிள்லே, பெல் இல்லேடா! அதனாலே கூட்டம் வர்ரப்போ நீ பெல் அடி!''

''சரிடா!''

''அதோட என் சைக்கிள்லே ப்ரேக்கும் இல்லேடா, அதனாலே கூட்டம் வர்ரப்போ நீ ப்ரேக்கும் போடு!''

''????''

— ஜெம்பு



அன்று மாலை —

திப்பிலி ராஜாவின் ஊட்டி மாளிகையில் —

குளிர் குறைந்து விட்டது. காரணம் கூடியிருந்த மக்களின் மூச்சுக் காற்றும், நீலகிரித் தைல மணமும்.

கூடத்தில் பெருங்கூட்டம். நாற்காலிகளுக்குப் பதில் கட்டில்கள். கட்டில் கால்கள் சிறு கோப்பைகளின் உள்ளே நின்றன. கோப்பைகளில் நீலகிரித் தைலம்.

மக்கள் கம்பளிகளைப் போர்த்திக் கொண்டு கட்டில்களின் மீது சாய்ந்து கொண்டிருந்தனர்.

"தூங்காதே தம்பி தூங்காதே" — என்ற துயில் வாழ்த்துப் பாடலுடன் கூட்டம் தொடங்கியது.

மேடையிலிருந்த ராஜா ஒரு பித்தானை அழுத்தினார். பின்னால் மாட்டப்பட்டிருந்த பலகையை மூடியிருந்த திரை விலகவில்லை. அதற்குப் பதிலாக அப் பெயர்ப்பலகை 'டபக்' என்று ஒரு குட்டிக்கரணம் போட்டுத் திரையின் முன்னால் வந்து தொங்கியது. அதில்

"திப்பிலி ராஜாவின் தூக்கத் தொழிற்சாலை" — என்று எழுதப் பட்டிருந்தது.

"குளிர் மலை நாட்டு மக்களே! மனிதனுக்குத் தேவையான எத்தனையோ பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏராளம். மனித வாழ்வில் பாதி தூக்கம். அந்தத் தூக்கத்தைத் தயாரிக்கும் தொழிற்சாலை எங்கும் இல்லையே என்ற குறையைப் போக்கவே இந்தத் தொழிற்சாலையை இங்குத் தொடங்கி உள்ளேன்" — என்று ராஜா திறப்புரையாற்றத் தொடங்கினார்.

"ராஜா! 'தூங்காதே தம்பி' — பாட்டைத் துயில் வாழ்த்தாகப் போட்டது பொருந்துமா?" — என்று ஒரு பொடியன் குறுக்கிட்டான்.

"தம்பி! அந்தப் பாட்டைக் கேட்ட பின்புதானே இத்திட்டமே என் மனத்தில் எழுந்தது. எங்கெல்லாம் தூங்கக் கூடாது என்று அப் பாட்டுக் கூறுகின்றது. அப்படியென்றால் எங்குதான் தூங்குவது? இத் தொழிற்சாலையில் தூங்கலாம். இங்கே இன்னார் — இனியார், இல்லார் — உள்ளார்,

நல்லார் — பொல்லார் என்ற வேறுபாடுகளின்றி எதிரிகளும் சதிரிகளும் கூடத் தூங்க வரலாம்.''

''சதிரி என்றால் யாரோ?'' என்று ஒரு குரல் ஒரு கம்பளிக்குள்ளிருந்து கேட்டது. வரிசையாகச் சொற்களை அடுக்கிக் கொண்டு வந்த பொழுது ராஜா 'எதிரி — சதிரி' என்று உளறிவிட்டார். இருந்தாலும் சமாளித்துக் கொண்டு,

''எதிரே நிற்கும் பகைவன் எதிரி. நண்பனாய் நடித்துச் சதி செய்பவன் சதிரி. எதிரியும் சதிரியும் விழித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் கெடுதல் செய்வார்கள். இத் தொழிற் சாலை அவர்களை நல்லவர்களாக்கும் — தூங்கும் நேரத்தில் மட்டும்.''

''எதிரிகளும் சதிரிகளும் கூடி விரும்பித் தூங்கும் படி இங்கே என்ன வசதிகள் இருக்கின்றன?''


''இது குளிர் நாடு. எல்லோருக்கும் கம்பளிகள், கட்டில் கால் கிண்ணங்களில் நீலகிரித் தைலம், கட்டில் ஓரமாகச் சூட்டுக் குழாய். அக் குழாயில் வெப்பக் காற்று. வேண்டுவோர் திறந்து கையை, காலை, உடம்பைச் சூடு படுத்திக் கொள்ளலாம்.''

''இதெல்லாம் இருந்தால் குளிர் உறைக்காது. சரிதான் ராஜா! ஆனால், தூக்கம் வராதவர்கள் என்ன செய்வார்கள்?''

''இதோ பாருங்கள்'' — என்று ராஜா ஒரு மின்பித்தானை அழுத்தினார். சுவர் விளக்குகள் அணைந்தன. கூரையில் நிலவைப் போலவும், விண்மீன்கள் போலவும் சில வண்ண விளக்குகள் மின்னின.

''என் காலிலே முள் குத்திட்டுது. டாக்டர் வீடு எங்கே இருக்கு, சொல்லு.''

—சுதர்ஸன்.



''இதைப் பார்த்த பிறகும் தூக்கம் வரவில்லையென்றால்?...''

''ஒவ்வொரு கட்டிலிலும் உள்ள சிவப்புப் பித்தானை நீங்களே அழுத்திப் பாருங்கள்.''

ஒருவர் அழுத்தினார். அவர் கட்டிலுக்கு நேர் மேலே, கூரையில் ஒரு வண்ண ஒளி வட்டம் தோன்றியது. 'விர்'ரென்று சுழன்றது. அதைப் பார்த்தவர் மயங்கித் தூங்கத் தொடங்கிவிட்டார். பச்சையாய் இன்னொரு பித்தான் இருந்தது. அதனை இன்னொருவர் அழுத்தினார். இனிமையான செட்டி நாட்டுத் தாலாட்டுப் பாடல்கள் ஒலித்தன. பின்னர் வயலினில் நீலாம்பரி ராகம் ஒலித்தது.

ராஜா மீண்டும் பேச்சைத் தொடர்ந்தார்.

''அடுத்த வாரம் நீங்கள் மஞ்சள் பித்தானையும் அழுத்தலாம். அப்பொழுது என் வாழ்க்கை வரலாற்றுக் கதையைக் கேட்கலாம். தூக்கத்தில் புதிய மொழிகளைக் கற்றுக் கொள்ளலாம் என்பது புதிய அமெரிக்க ஆராய்ச்சி! தலையணைக்கடியில் ஒலி பெருக்கிகளை வைத்து மொழிப் பாடங்கள் விரைவில் ஒலிபரப்பப் படும். அடுத்த மாதத்திற்குள் தொழிற்சாலையைச்சுற்றித் தூங்கு மூஞ்சி மரங்கள் நடப்படும்.''

''ஆகா! அற்புதமான ஏற்பாடு! இங்கே ஒருவர் எத்தனை மணி நேரம் தூங்கலாம்?''

''ஒருவர் தனக்கு எவ்வளவு தூக்கம் தேவையோ அந்த அளவு தூக்கத்தை அவரே உற்பத்தி செய்து அவரே பயன்படுத்திக் கொள்ளலாம். விற்பனை செய்யக் கூடாது. வெளியே கடத்திச் செல்லவும் முடியாது.''

''கட்டணம்?''

''உண்டே! காலையில் எழுந்து போகும் போது ஒவ்வொரு தூங்காளியும் தான் கண்ட கனவினை ஓர் ஒலிப் பதிவுக் கருவியின் முன் சொல்லிவிட்டுப் போக வேண்டும். சிறந்த கனவினைப் பதிவு செய்தவருக்குக் 'கும்பகர்ண நினைவுப் பரிசு'ம், 'அனந்த சயனம் நினைவு ஆறுதல் பரிசு'ம்

அளிக்கப்படும் — ஆண்டு விழா வில்''.

''குறட்டை விடலாமா?''

''கூடாது. மீறிக் குறட்டை விடுபவர்கள் காலையில் தொழிற் சாலையைப் பெருக்க வேண்டும் என்பதே தண்டனை.''

''குறட்டையனும் கோள் சொல்பவனும் தத்தம் குற்றத்தை ஒப்புக் கொள்ள மாட்டார்களே!''

''அதனால்தான் குறப்பார் (குறட்டைப் பதிவாளர்) ஒருவர் இங்கே இருக்கின்றார். குறட்டைகளைப் பதிவு செய்து விடுவார். இனிய தூங்காளர்களே! இனிப் பேசிக் காலம் கழிக்க வேண்டாம். நம் கடன் பணி செய்து கிடப்பதே. கட்டிலில் கிடந்து சிந்திப்போம். செயல்படுவோம்! இல்லை! இல்லை! மன்னிக்கவும். சிந்திப்போம்! துயில்படுவோம்'' என்று ராஜா தம் பேச்சை முடித்து விட்டார்.

பிறகு மேடையின் ஓரத்தில் எரிந்து கொண்டிருந்த ஒரு குத்துவிளக்கின் அருகில் சென்று ''பட்'' என்று கை தட்டினார். தொழிற் சாலை தொடங்கப் பட்டதைக் குறிக்கும் வகையில் விளக்கு அணைந்தது. தொடர்ந்து மக்கள் கைதட்டவில்லை. ஏனெனில், அனைவரும் அதற்குள் தூங்கிவிட்டிருந்தனர்! ராஜாவுக்குக் கோபம் வரவில்லை. தொழிற் சாலையில் உற்பத்தி உடனே தொடங்கிவிட்டதென மகிழ்ந்தார். கொட்டாவி விட்டுக் கொண்டே மேடையில் இருந்த படுக்கையில் படுத்தார்.

* * * * *

ஒரு வாரம் ஓடியது. ஒரு நாள் குறப்பார் ஓடி வந்தார். ''அரசே! தொழிற் சாலையில் ஒரு கட்டிலின் குறுக்குப் பலகைகளைக் காணோம்!'' என்று அலறினார்.

''காவலாளி என்ன செய்கிறான்? அவனும் தூக்கம் தயாரிக்கத் தொடங்கி விட்டானா? ஆளை மாற்றுங்கள்'' என ராஜா ஆணையிட்டார்.

இரண்டொரு நாள் கழித்து

''நீங்கள் காலிலே கட்டிச் சறுக்கி விளையாடுவீர்களே, அந்தச் சறுக்குச் சக்கரங்களை காணோம்.'' — என்று குறப்பார் புலம்பினார். இன்னொரு நாள் ''இன்னொரு கட்டிலின் குறுக்குக்கட்டைகளைக்காணோம்!'' என்றார்.

ராஜாவுக்கு வழக்கம் போல் ஒன்றும் புரியவில்லை. கட்டிலில் படுத்துக் கொண்டே சிந்தித்தார்.

''சக்கரம் யாராவது பையன் எடுத்துச் சென்றிருப்பான் விளையாட. போகட்டும், பாவம்! குறுக்குப் பலகைகளைத் திருடியவன் என்ன செய்வான்? முழுக் கட்டிலையும் திருடிச் சென்றிருக்கலாம். ஒரு வேளை இரவுக் காவலன் குளிர் காய எரித்து விட்டிருப்பானோ? இப்படித் தொடங்கிய சிந்தனை, தூக்கத்தில் முடிந்தது.

நள்ளிரவு. ராஜாவின் கட்டிலுக் கடியில் கொர் — கொர் — என்ற குறட்டைச் சத்தம் கேட்டது. ராஜா விழித்துக் கொண்டார். மெதுவாகப்



ஆமைகள் 8

1. காந்தியடிகள் இந்த ஆமையை விரட்டியடிக்க அரும்பாடுபட்டார்.
2. பாரதியாரிடம் இந்த ஆமை இருந்ததால்தான், வீரமிக்க கவிதைகள் புனைந்தார்.
3. அரிச்சந்திரன், தருமர், காந்திஜி இவர்களிடம் இருந்த ஆமை இது!
4. மாணவர்கள் எவ்வளவு படித்தாலும், அவர்கள் மனத்தில் இந்த ஆமை இருந்தால், தேர்வில் தோற்பது உறுதி.
5. மனிதர்களிடம் இந்த ஆமை இருந்தால், 'வள்ளல்' என்று பெயர் வாங்க முடியாது.

இந்த ஆமைகள் யாவை?

விடைகள்:
1. தீண்டாமை, 2. அஞ்சாமை, 3. பொய்யாமை, 4. பதியாமை, 5. ஈயாமை.
-எஸ். ஆர். சின்னமணி, சுரந்தை

புரண்டு மூக்கினால் ஒரு பித்தானை அழுத்தினார். அவர் கட்டிலே 'சர்' ரென்று நகர்ந்தது. இரவில் தூங்கும் பொழுது எதிரிகள் தாக்க வந்தால், அரசர்கள் சட்டெனப் புரண்டு தப்பித்துக்கொள்வதைத் திப்பிலி ராஜா, திரைப்படங்களில் பார்த்திருக்கிறார். அவர் உடம்போ பெரியது. சட்டெனப் புரள முடியாது. எனவே, கட்டிலே நகரும்படி விசையமைத்திருந்தார்.

தொடர்ந்து அபாய மணி அலறியது. விளக்குகள் எரிந்தன. காவலாளிகள் நடந்து வந்தனர். தரையிலிருந்து குறட்டை ஒலி தொடர்ந்து கேட்டது. சமையலறையில் தூங்கிக் கொண்டிருந்த பொழுது அபாய மணி கேட்ட அவசரத்தில் வேலுக்குப் பதில் அகப்பையைத் தோளில் தூக்கி வந்திருந்த தலைமைக் காவலர் அகப்பையால் தரையைத் தட்டினார்!

'படா' ரென்று தரை பிளந்து விட்டது! அங்கே ஒரு சுரங்கம். அதில் ஒரு தாடிவாலா குறட்டை விட்டுக் கொண்டிருந்தான்! அதைப் பார்த்த தலைமைக் காவலர் பயந்து, மயங்கிச் சுரங்கத்தில் தாடிவாலாவின் மேலேயே விழுந்து அவனைப் பிடித்துக் கொண்டார். அவர் வீரமாக உள்ளே குதித்துத் திருடனைப் பிடித்து விட்டார் என்றெண்ணிய மற்ற காவலர்கள் தைரியமாக நடந்து வந்து இருவரையும் சுரங்கத்திலிருந்து தூக்கி விட்டனர். தாடி வாலாவின் தாடி, அகப்பையில் சிக்கிக் கொண்டதால் அவன் ஓட முடியவில்லை.

இதையெல்லாம் கண்டு ராஜா கலங்கவில்லை. ஏனெனில் எல்லாம் கனவில் நடக்கிறதென்று நினைத்துக் கொண்டிருந்தார். எழுந்தால் கனவு கலைந்துவிடுமென்று அஞ்சி, படுத்துக் கொண்டே திருடனைத் தீர விசாரித்தார்.

“டேய்! நீ யார்? எதற்காகச் சுரங்கம் வெட்டினாய்? உண்மையைச் சொன்னால் மன்னித்து விடுவேன். இல்லையென்றால்...?”

ராஜா தயங்கினார். “இல்லையென்றால் உன் கழுத்தை வெட்டிக் காக்காய்க்குப் போட்டு விடுவேன்” — என்று பயமுறுத்த எண்ணினார். அரண்மனையிலிருந்த ஒரே கத்தி மழுங்கிப் போய்க் கத்தரிக்காய் கூட வெட்டப் பயன்படாமல் சுவரில் அழகுக்காக மாட்டப்பட்டிருந்தது. அரண்மனையிலிருந்த ஒரே காக்-



காயைப் பிடிக்கப் பல மந்திரிகள் பயிற்சி செய்து கொண்டிருப்பதும் அவருக்குத் தெரியும். மேசையில் வெண்ணெய் வெட்ட ஒரு பிளேடு இருந்தது. உடனே, ''இல்லையென்ருல் உன் நகத்தை வெட்டி நாய்க்குப் போட்டு விடுவேன்'' — என்று ராஜா முழங்கினுர்.

தாடிவாலா நடுங்கினுன். ஊட்டிக் குளிரினுலா? இல்லை, ராஜாவின் மிரட்டலினுலா?

''அரசே! நான் வேலையில்லாப் பட்டதாரி. நீங்கள் ஏதோ தொழிற்சாலை திறந்தது கேட்டு வந்தேன். அதுவோ தூக்கத் தொழிற்சாலை. எல்லோரும் தூங்கும் பொழுது நான் சுரங்கம் வெட்டினேன். கட்டிலின் குறுக்குப் பலகைகளை எடுத்துச் சுரங்கச் சுவருக்கு முட்டுக் கொடுத்தேன். குறுகிய சுரங்கத்தில் படுத்தபடியே நகர, ஒரு பலகையின் கீழ் சக்கரங்களைக் கட்டி, நகர்ந்து வந்தேன். நாளை பௌர்ணமி. திருடுவதற்கு ஏற்ற நேரம் என்று காத்திருந்தேன். பல இரவுகள் தூங்காமல் சுரங்கம் வெட்டியதால், களைத்துப் போய்ச் சுரங்கத்தில் தூங்கி விட்டேன்'' என்று தாடிவாலா நடுங்கியபடியேகூறினுன்.

''நீ எதிரியல்ல! சதிரி! என்ன திருட வந்தாய்?''

''உங்கள் கையிலுள்ள முத்திரை மோதிரத்தை''.

''நீ சுரங்கம் வெட்டியது தப்பில்லை. கட்டிலின் கீழே ஒரு சுரங்கம் இல்லையே என்று நான் ஏங்கியதுண்டு. தூங்கியதும் தப்பில்லை. அதற்குத்தானே தொழிற்சாலை. ஆனுல் சட்டத்தை மீறிக் குறட்டை விட்டதுதான் தவறு. அதுதான் உன்னைக் காட்டிக் கொடுத்துவிட்டது. உண்மையைச் சொன்னதால் மன்னித்தேன். நீ திருட வந்தது இதுதானே! இந்தா! பிடி!'' என்று ராஜா, முத்திரை மோதிரத்தைக் கழற்றி வீசினுர்.

''சுரங்கம் வெட்டியதற்குக் கூலியாக இதை வைத்துக் கொள். இதை விற்று நம் தூக்கத் தொழிற்சாலைக்குப் பக்கத்தில் ஒரு டமாரப் பயிற்சி வகுப் பொன்று தொடங்கிப் பிழைத்துக் கொள். அல்லது தங்கம், வெள்ளி,



பந்து எங்கே?

''அக்கா! எங்க பாட்மிட்டன் பந்து. உங்க கொண்டையிலே மாட்டிடுத்து! தயவு செஞ்சு எடுத்து. கொடுத்திடுங்க!'' — ஜெம்பு

பித்தளை, அலுமினியச் சுரங்கங்களைத் தோண்டும் பயிற்சித் தொழிற்சாலைகளைத் தொடங்கு! மற்றவை காலையில்'' என்று சொல்லிவிட்டு ராஜா ரஜாயை இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்கத் தொடங்கினுர். காலை என்ருல் எட்டு மணி என்று காவலாளிகளுக்குத் தெரியும். வெளியில் குளிரும். சுரங்கத்தினுள் சூடாக இருக்கும் என்று எண்ணிய காவலாளிகள், சதிரியுடன் சுரங்கத்தில் நுழைந்தனர்.

சற்று நேரம் கழித்த பின் — எங்கும் ஓசை இல்லை — ராஜாவின் குறட்டை ஒலி தவிர!

பி:கு: ''தூக்கத் தொழிற்சாலையின் கிளைகளே பிற்காலத்தில் கல்லூரிகளாக மாறின என்று கல்லாவூர் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ஆனுல் செல்லாவூர் செப்பேடுகளில் இது பற்றிய குறிப்பு காணப்படவில்லை.'' — திப்பிலி நாட்டு வரலாறு. பகுதி 1, பக்கம் — 1, வரி — III.



திடீர் மாற்றம்!

கீதா ராகவன்

வாசலில் கிடந்த சாய்வு நாற்காலியை வெறித்துப் பார்த்தான் ரவி. பின் அம்மா பக்கம் திரும்பிக் கேட்டான் —

"அம்மா, இனிமேல் தாத்தா இங்கு வரவே மாட்டாராம்மா?"

மீனாட்சி, மகனின் தலையை வருடியவாறே அவனை அணைத்துக் கொண்டாள்.

"மாட்டாருடா ராஜா, அவர் ஸ்வாமிக்கிட்ட போயிட்டாரே".

ரவி வாசலையே வெறித்துப் பார்த்தபடி நின்றான். தாத்தா, அவனுக்குக் கதைகள் சொல்வார்; பள்ளிக் கூடத்தைப் பற்றியும் கேட்பார். அவன் மீது அளவிலா அன்பைக் கொட்டுவார். இப்போது அவர் உயிரோடு இல்லை. இது புரிந்தும் புரியாத ஒரு வயதில் இருந்த ரவிக்கு அவ்வப்போது அழுகை வந்தது நியாயம் தானே?

"அம்மா, நான் சோமு வீட்டுக்குப் போய் விளையாடிட்டு வறேன்" — கையில் பந்துடன் கிளம்பினான் அவன்.

ஒரு மாதமிருக்கும். இப்போதெல்லாம் தாத்தாவைப் பற்றி ரவி ஏதும் கேட்பதில்லை. அவனுக்குப் பாலு என்ற புதிய நண்பன கிடைத்ததில் மற்ற எல்லாமே மறந்து விட்டதோ! அவர்கள் வசிக்கும் தெருவுக்கு அடுத்த தெருவில் இருந்தது பாலுவின் வீடு. தில்லியிலிருந்து மாற்றலாகி வந்திருந்தார்கள். ரவியின் கிளாசில்தான் பாலுவும் சேர்ந்திருந்தான். புதிய நண்பனின் மயக்கத்தில் இருந்த ரவி மாலை வேளைகளில் அங்கேயே பழியாய்க் கிடந்தான்.

மீனாட்சிக்கு இது கொஞ்சமும் பிடிக்கவில்லைதான். 'தினம் எதுக்காக அவர்கள் வீட்டில் பழி கிடக்கறே?' என்று கேட்கவும் செய்தாள்.

"அம்மா, பாலு வீட்டிலே உள்ள பொம்மைகளையும், விளையாட்டுப் பொருட்களையும் நீ கண்ணாலே பார்த்தியோ, இப்படியெல்லாம் கேக்க மாட்டாய். எத்தனை படப் புஸ்தகங் கூட அடுக்கி வெச்சிருக்கான் தெரியுமா? அடேங்கப்பா. அங்கேதான் நான் விளையாடுவேன்" — என்றான் ரவி.

ஏதோ இந்த மட்டும் அவன் சந்தோஷமாய்ச் சிரித்து விளையாடிக் கொண்டிருப்பதில் அவளுக்குத் திருப்தி தான். போன மாசம் முழுக்க எதையோ பறி கொடுத்த மாதிரி

வெறிச்சோடிய பார்வையோடு சும்மாவேனும் உட்கார்ந்திருந்தவன், மற்றக் குழந்தைகளைப் போலச் சிரிப்பும் கும்மாளமுமாய் மாறியதில் அவள் நிம்மதியடைந்தாள்.

பாலுவும் இரண்டு முறை ரவியின் வீட்டுக்குவந்தான். மீனாட்சிக்கு அந்தப் பிள்ளையைக் கண்ட மாத்திரத்திலேயே பிடித்து விட்டது. மிகவும் நல்ல பையனாய்த்தான் தெரிந்தான்.

பரீட்சைக்கு இன்னும் ஒரே வாரம் தான் இருந்தது. ரவி, டிபன் சாப்பிட்டதும் சட்டையை மாற்றிக் கொண்டு, தலை வாரிக் கொண்டான். இதைப் பார்த்த மீனாட்சி,

''எங்கேடா, கிளம்பறே? பரீட்சைக்கு எண்ணி எட்டே நாள்தான் இருக்கு. நினைவிலே வெச்சுக்க'' என்று கோபமாய்க் கேட்டாள்.

''அம்மா, நான் பாலு வீடு வரை போயிட்டு அரை மணியிலே வந்துடறேன். சத்தியமா, சீக்கிரம் வருவேம்மா''

கெஞ்சும் பிள்ளையைக் கண்டு மனம் இரங்கினாள் மீனாட்சி. கறிகாய் வாங்க மார்கெட்டுக்குக் கிளம்பினாள். கடையில் பாலுவையும், அவன் தாயாரையும் கண்டதும் திகைப்பாய் இருந்தது.

''டேய் பாலு, உங்க வீட்டுக்கு ரவி வரலியா?'' என்று கேட்டாள்.

''இல்லையே மாமி. ரவி வரலியே!''

மட மடவென்று காய் வாங்கிக் கொண்டு வீடு சென்றாள், மீனாட்சி. எதிரே ரவியும் வந்து கொண்டிருந்தான்.

''டே ரவி, எங்கேடா போனே?''

''பாலு வீடு பூட்டியிருந்தது. அதனால், அவன் பக்கத்து வீட்டுக்குப் போய்த் தாத்தாவைப் பார்த்துட்டு வறேம்மா. நான் போகல்லேன்னா தாத்தா ரொம்ப வருத்தப்படுவாரே.''

''என்னடா உளர்றே?''

''அம்மா, பாலுவோட பக்கத்து வீட்டிலே ஒரு தாத்தா இருக்காரு. ஒரு வேலைக்காரன் மட்டும்தான் கூட. அவரைப் பாத்தா, நம்ம தாத்தா மாதிரியே இருக்கும்மா. தினம் என்கிட்டே பேசுவாரு. எனக்கும் பாலுவுக்கும் நிறையக் கதை சொல்லுவாரு; சாக்லெட் கொடுப்பாரு; விளையாடுவாரு; அவருக்கும் என்னைப் பாத்தாத்தான் சந்தோஷமா இருக்காம். அவரோட பிள்ளையும் பேரக்குழந்தையும் கார் விபத்துல இறந்துட்டாங்களாம். அதுனாலே என்னையே அவரோட பேரனாக நினைக்கிறாராம். அவரைப் பாக்கத்தான் போனேம்மா. உனக்கு எம்மேல கோபமா?'' — மூச்சு விடாமல் பேசி முடித்தான் ரவி.

''இல்லேப்பா, ரவி. அவராலே உனக்கும், உன்னாலே அவருக்கும் இத்தனை சந்தோஷத்தைக் கொடுக்க முடியும்னா, அதுலே எனக்கும் சந்தோஷம் தான்!'' — இப்போது இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

மூன்று நன்மைகள்

சிகரெட் பிடிப்பது தீமையென்று யார் சொன்னார்கள்? அதனால், மூன்று பெரிய நன்மைகள் ஏற்படுவதாகக் கூறு கூறுகிறது 'நல்வழி.'

1. நாய்கள் அவர்களை நெருங்காது.
2. அவர்களுக்கு முதுமை என்பதே இடையாது.
3. அவர்கள் வீட்டுக்குத் திருடன் வரவே மாட்டான்.



என்ன? ஆச்சரியமாக இருக்கிறதா தொடர்ந்து படியுங்கள்:

1. சிகரெட் பிடிப்பவர்கள் விரைவில் கூன் விழுந்து கையில் தடியுடன் நடப்பார்கள். நாய்கள் கடிக்க வந்தால் தடியால் அடிக்கலாம்.
2. இளமையிலேயே அவர்கள் இறந்து விடுவதால், அவர்களுக்கு என்றும் முதுமை வராது.
3. எப்போதும் அவர்கள் இருமிக் கொண்டே இருப்பதால் திருடன் அவர்கள் விழித்திருப்பார்கள் என்று அறிந்து ஓடிவிடுவான்.

-ஆர். எஸ். சுப்பிரமணியன்.



என் கதையைக் கேளுங்கள்

—ஒட்டைச்சிவிங்கி

உங்களில் யாராவது நெட்டையாக வளர்ந்திருந்தால், "அவனைப் பாரடா. ஒட்டைச் சிவிங்கி மாதிரி இருக்கிறான்!" என்று கிண்டல் செய்கிறீர்கள். ஆனால், என் உயரம் வளர எவராலுமே முடியாது. ஆமாம், உலகத்திலே உயரமான மிருகம் நான்தானே! கால் முதல் தலை வரை அளந்து பாருங்கள். சரியாகப் பதினெட்டு அடி இருப்பேன். என் கன்னத்திலே நீங்கள் அன்பாகத் தட்டிக் கொடுக்க வேண்டுமானால், முதலிலே ஒரு பெரிய ஏணியைத் தேடிப் பிடிக்க வேண்டும்!

மிகவும் உயரமாக இருப்பதால், மரத்திலுள்ள இலைகளைப் பறிப்பது எனக்கு மிகவும் சுலபம். அது மட்டுமா? எதிரிகள் தூரத்தில் வரும் போதே எனக்குத் தெரிந்துவிடும். அடிக்கடி கழுத்தை நாலா பக்கமும் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொள்வேன்.

நான் தண்ணீர் குடிப்பதை எப்போதாவது நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அது உங்களுக்கு வேடிக்கையாகத் தோன்றும். ஆடு, மாடு குடிப்பது போல் நான் குடிக்க மாட்டேன். என் முன்னங்கால்கள் இரண்டையும் அகல வசத்தில் பரப்பி வைத்துக் கொள்வேன். நன்றாகக் கீழே குனிந்து நீரைக் குடிப்பேன். முன்னங்கால்களை அப்படி வைத்துக் கொள்ளாது போனால், என் வாய்க்குத் தண்ணீர் எட்டவே எட்டாது. தரையிலுள்ள புல் பூண்டுகளைத் தின்னும்போதுகூட இப்படித்தான் செய்வேன்.

என் கால்களுக்குப் பலம் அதிகம். எதிரிகள் தப்பித் தவறி என் அருகிலே வந்துவிட்டால், உடனே நான் என்ன செய்வேன் தெரியுமா? கடிக்க மாட்டேன்; முட்ட மாட்டேன்; கழுதையைப் போல் 'பட், பட்'டென்று பலமாகக் கால்களால் உதை கொடுப்பேன். என் உதை தாங்காமல் சுருண்டு விழுந்த எதிரிகளுக்குக் கணக்கே இல்லை!

நான் பிறந்ததும் வளர்ந்ததும் ஆப்பிரிக்காவில்தான். அங்குள்ள வறண்ட பிரதேசத்தில்தான் என் இனத்தைக் காண முடியும். உலகத்தில் வேறு எந்தக் காட்டில் தேடினாலும், நாங்கள் அகப்பட மாட்டோம். தனியாக வாழ்வதற்கே எங்களுக்குப் பிடிக்காது. கூட்டம் கூட்டமாகவே வசிப்போம். பதினைந்து முதல் எண்பது வரை உள்ள பல கூட்டங்களைக் காணலாம்.

மே மாதமும், ஜூன் மாதமும் எங்களுக்கு மிகவும் முக்கியமான மாதங்கள். அந்த மாதங்களில் தான் எங்களுக்குக் குழந்தை பிறக்கும். ஒரு தாய்க்கு ஒரு சமயத்தில் ஒரே ஒரு குழந்தைதான் பிறப்பது வழக்கம். 'ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு' என்று அதை நாங்கள் அன்பாக வளர்ப்போம்.

பிறந்து மூன்று நாட்கள் வரை அதனால் நகர முடியாது. நாலாவது நாள்

எப்படியோ தட்டுத் தடுமாறி எங்களோடு நடக்க ஆரம்பித்துவிடும். அந்தச் சமயம் யாராவது அதைத் தூக்க வந்தால், அவர்களை நாங்கள் சும்மா விடமாட்டோம். எங்களுடைய கால்களுக்குச் சரியான வேலை கொடுத்துவிடுவோம்!

''கழுதைக்குக் கொம்பு இல்லை. அதனால் அது காலால் உதைக்கிறது. உனக்குத்தான் கொம்பு இருக்கிறதே! நீயும் ஏன் காலால் உதைக்கிறாய்?'' என்றுதானே கேட்கிறீர்கள்? அட்டே! என் தலையில் இருக்கின்றனவே, இவைகளைக் கொம்புகள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இல்லை, இல்லை. உண்மையில் அவை கொம்புகளே அல்ல. கொம்புகளைப் போல் வளர்ந்திருக்கும் மிருதுவான எலும்புகள்! உங்களுடைய மூக்கில் இருக்கிறதே குருத்து எலும்பு, அதே போலத்தான்.

எங்களில் சிலருக்கு இந்த மாதிரிக் கொம்புகள் மூன்று இருக்கும். சிலருக்கு நான்கு கூட உண்டு. இவற்றால் எங்களுக்கு ஒருவிதப் பயனுமில்லை. ஒருவேளை இவை இருப்பதால்தான் நாங்கள் அழகாக இருக்கிறோமோ, என்னவோ!

எங்களுடைய முக்கிய உணவு கருவேல இலைதான். கருவேல மரத்தைப் பற்றித்தான் உங்களுக்குத் தெரியுமே! நிறைய முள் இருக்கும். மரத்தில் ஏறினால், 'சுருக், சுருக்'கென்று உடம்பிலே குத்தும். நாங்கள் எதற்காக அதிலே ஏறப் போகிறோம்? தரையில் நின்று கொண்டே தலையை நீட்டுவோம். கடவுள் எங்களுக்கு நீளமான நாக்கைத் தந்திருக்கிறார். அந்த நாக்கினால், இலையை வளைத்துப் பறித்து வாய்க்குள்ளே அனுப்புவோம்.

சில சமயம் நாங்கள் ஆசையாக இலையைப் பறித்துக் கொண்டிருக்கும் போது, சிங்கமோ அல்லது சிறுத்தையோ அந்தப் பக்கமாக வரும். உடனே நாங்கள் ஓசைப்படாமல் அப்படியே தலையை மரக்கிளைகளுக்குள் மறைத்துக் கொண்டு, அந்த மரத்தைப் போலவே ஆடாமல், அசையாமல் நின்றுவிடுவோம். சிறிதுதூரத்தில் நின்று பார்த்தால், நாங்கள் நிற்பது எதிரிகளுக்குத் தெரியவே தெரியாது. பேசாமல் போய்விடுவார்கள். நாங்கள் தப்பித்துக் கொள்வோம். இப்படி எத்தனையோ முறை தப்பித்திருக்கிறோம்.

எதிரிகள் எங்களைக் கண்டுவிட்டார்கள் என்பது தெரிந்தால், அந்த இடத்தில் ஒரு விநாடிகூட நிற்கமாட்டோம். நாலு கால் பாய்ச்சலில் காற்றாய்ப் பறப்போம். மணிக்கு 35 மைல் வேகம் போவோம். நாங்கள் அப்படி ஓடும் போது எங்களுடைய வாலைச் சும்மா வைத்திருக்க மாட்டோம். கயிற்றைப் போல் முறுக்கி, கார்க் ஸ்குரூவைப் போல் வட்ட வட்டமாக வளைத்து வைத்துக் கொள்வோம்.

தண்ணீர் கிடைக்கும் போது நாங்கள் குடிப்போம். கிடைக்காத போது நாங்கள் அதிகமாகக் கவலைப்படமாட்டோம். தண்ணீர் இல்லாமல் எங்களால் வாரக் கணக்கில் காலந் தள்ள முடியும். இந்த விஷயத்தில் ஒட்டகத்தையும் நாங்கள் மிஞ்சிவிடுவோம்!

எனக்கு நன்றாக ஓடத் தெரிகிறது; ஒளியத் தெரிகிறது; உதைக்கவும் தெரிகிறது. ஆனால், கத்தத் தெரியுமா? இந்தச் சந்தேகம் உங்களில் பலருக்கு உண்டு. சிலர், ''ஒட்டைச்சிவிங்கிக்குக் குரலே கிடையாது. அதன் வாயிலிருந்து எவ்விதமான சத்தமும் வெளி





வராது'' என்று கூறுகிறார்கள். ஆனால், அது சரியல்ல. நான் அடிக்கடி சத்தம் போட மாட்டேன். அபூர்வமாகத்தான் கத்துவேன். என் சத்தம் சிங்கத்தின் கர்ஜனையைப் போலவோ, கழுதையின் குரலைப் போலவோ பலமாகக் கேட்காது. ஆட்டுக் குட்டி கத்துவது போல் மெதுவாகத்தான் கேட்கும். அதற்காக எனக்குக் குரலே இல்லை என்று கூறிவிடுவதா?


இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள், ''ஒட்டைச் சிவிங்கி தரையில் படுக்கவே படுக்காது. எப்போதும் நின்று கொண்டே இருக்கும். தூங்கும்போதுகூட நின்று கொண்டுதான் தூங்கும்'' என்கிறார்கள். இதுவும் பொய். நான் தரையிலே நன்றாகப் படுப்பேன். என் உடலை மட்டுமல்ல; கழுத்தையும் நன்றாகத் தரையில் நீட்டிக் கொண்டு இளைப்பாறுவேன்.

உங்களிலே பலர் மிருகங்களை வேட்டையாடிக் கொன்று தின்கிறார்கள். அவர்கள் எங்களையும் விட்டு வைக்கவில்லை. எங்களைச் சாப்பிடுவதற்காக வேட்டையாடினாலும் பரவாயில்லை. 'போகட்டும். நம் உயிர் போனாலும் அவர்களது வயிறாவது நிரம்புகிறதே!' என்று ஆறுதல் அடையலாம். ஆனால் சாப்பிடுவதற்காக எங்களை அவர்கள் வேட்டையாடவில்லையாம். எங்கள் மாமிசம் நன்றாக இருக்காதாம். பின்னர் எதற்காக வேட்டையாடுகிறார்கள் தெரியுமா? எங்களுடைய தோலும், உரோமமும் அவர்களுக்கு மிகவும் பயன்படுகின்றனவாம்.

எங்களுடைய தோல் மிகவும் உறுதியாயிருக்கும். 2 அங்குல கனம் வரை வளரும். இந்தத் தோலால் பலர் கவசம் போட்டுக் கொள்கிறார்களாம். உரோமத்தால் அழகான வளையல் செய்வார்களாம். அந்த வளையல் ஒரு முக்கியமான வேலையைச் செய்யுமாம்.

ஆப்பிரிக்காவில் சில பழங்குடி மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே, அவன் எங்களுடைய உரோமத்தால் செய்த வளையலை அவளுக்குக் கொடுத்து அனுப்புவானாம். அவள் அதை அப்படியே அவனிடம் திருப்பி அனுப்பினால், ''சரி, நாம் கல்யாணம் செய்து கொள்ளலாம்'' என்று அர்த்தமாம்.

அவர்கள் மணம் நடைபெற, நாங்கள் மரணம் அடைய வேண்டுமாம்! இது என்ன நியாயம்?





M.G.C.C.

''என் தாத்தா M.L.A. என் அப்பா M.P. நான் M.G.C.C.''

''M.G.C.C. யா! அப்படின்னா...?''


''Member of Gokulam Children's Club. கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினன்.''

— கீழை ஜி. எஸ். தர்மலிங்கம்



பிருந்தாவனம்

காசுக்கு எத்தனை?



நாலரை மூன்றரைக் காசுக்கு
ஏழரை எட்டரைக் கத்தரிக்காய்
காசுக்கு எத்தனை கத்தரிக்காய்?

விடை: $4\frac{1}{2} + 3\frac{1}{2} = 8$
$7\frac{1}{2} + 8\frac{1}{2} = 16$
8 காசுக்கு 16 கத்தரிக்காய்
ஒரு காசுக்கு 2 கத்தரிக்காய்.

— எஸ். விஜயா (5759), பெரமனூர்

இறைவன் முன்னால்...?

ஓர் அரசர் துறவி ஒருவரிடம் சென்று, ''தாங்கள் இறைவனை நினைத்துப் பிரார்த்தனை செய்யும் போது என்னையும் நினைத்துக் கொள்ளுங்கள்'' என்று வேண்டினார்.

''நான் இறைவனை நினைத்துப் பிரார்த்தனை செய்யும் போது, என்னையே மறந்து விடுவேனே! உங்களை எப்படி நினைவில் வைத்துக் கொள்வேன்'' என்றார் துறவி.

— த. சிந்து குமார் (4764), திருவட்டாறு.




பூகம்பமும், பாம்புகளும்

பூகம்பங்களை முன் கூட்டியே அறியக் கூடிய சக்தி பாம்பு இனத்துக்கு உண்டு.

மெக்ஸிகோவில் பாம்புகளைக் கொல்லக் கூடாது. ஏனெனில், அங்கே அடிக்கடி நிகழும் பூகம்பங்களைப் பற்றி முன் கூட்டியே அறிவிக்கின்றன, அங்குள்ள பாம்புகள். திடீரென்று கூட்டம் கூட்டமாக அவை வெளியேறிச் சென்றால், ஓரிரு நாட்களில் பூகம்பம் ஏற்படப் போகிறது என்று அறிந்து கொள்ளலாம். பூகம்பம் ஏற்பட இரண்டு நாட்களுக்கு முன்பே நிலம் இலேசாக அதிரும். மனிதர்களால் உணர முடியாத இந்த அதிர்வைப் பாம்புகள் உணர்ந்துவிடுகின்றன. அதனால்தான் தங்கள் பாதுகாப்புக்காக இடம் பெயர்கின்றன.



— எஸ். ஜெயஸ்ரீ (1254), திருச்சி — 14



பலநாட்டுப் பழமொழிகள்

* வானத்துக்கு மணிசூரியன்; வீட்டுக்கு மணி குழந்தை

— சீனப் பழமொழி

* இனாமாக ஒன்றைப் பெற்றுக் கொள்வதால் உங்கள் சுதந்திரம் குறைகிறது.

— போலந்துப் பழமொழி

* பசித்தவனுக்குச் சமாதானம் கூற முடியாது. ஏனெனில், பசிக்குக் காதுகள் கிடையாது.

— கிரீஸ் பழமொழி

* செல்வத்தை மறைக்கலாம்; ஆனால், வறுமையை மறைக்க முடியாது.

— பின்லாந்துப் பழமொழி

* முட்டாளின் முழு வாழ்க்கை, புத்திசாலியின் ஒரு நாள் வாழ்க்கைக்குச் சமம்.

— அரேபியப் பழமொழி

* குழந்தை பேசுவதெல்லாம் அடுப்பங்கரையில் கற்றவையே

— இங்கிலாந்துப் பழமொழி

— என். சந்திரன் (4785),
பாவட்டக்குடி

கத்தியை நம்பி

"நான், என் தம்பி, என் அண்ணன் — மூவருமே கத்தியை நம்பித்தான் வாழ்க்கை நடத்துகிறோம்."

"அடக் கடவுளே!"

"தப்பா எடுத்துக்காதீங்க. நான் சலூன் கடை, என் அண்ணன் கசாப்புக் கடை, என் தம்பி இளநி வியாபாரம்."

— கே. சுப்ரமணியன் (5389)

இராஜாஜி படித்த பள்ளி

நம் தமிழ்நாட்டில் தமிழ், தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளையும் கற்றுத் தரும் பள்ளி தருமபுரம் மாவட்டத்தில் உள்ள ஒசூரில் இருக்கிறது. அங்குதான் மூதறிஞர் இராஜாஜி படித்தார். பள்ளியின் பெயர்: இராமபிரகாஷ் விஜயலட்சுமி அரசினர் ஆண்கள் மேல் நிலைப் பள்ளி.

— கே. எம். தியாகராசன் (6097),
திருப்பத்தூர் (வ.ஆ).



புரிகிறதா?

ளிளி ம க ள் திதிதி மிமி மிமி செத்தாள்

விடை: இருளி மகள் முத்தி இருமி. இருமி செத்தாள்.

— பி. கே. அன்பரசி (5439),
கண்ணமங்கலம்.





கனியைக் காணோம்!

மாணவர்: ஐயா, ஓர் ஐயம்.


ஆசிரியர்: கேள். உன் ஐயத்தை தீர்த்து வைக்கிறேன்.

மாணவன்: சேலத்தில் இரும்புக்கனி கிடைப்பதாகச் சொன்னீர்களே, அப்படி ஒரு கனியைச் சேலம் கடைத் தெரு முழுதும் கேட்டுப் பார்த்து விட்டேன். கிடைக்கவில்லையே!


— பி. கோகுல் (5496), உடுமலைப் பேட்டை

மொத்தம் பத்து

கீழே உள்ள படத்தில் தமிழ், ஆங்கிலம், கணிதம் இப்படிப் பல மறைந்துள்ளன. மொத்தம் பத்து. தெரிகின்றனவா?



விடை:



— சே. பாபு (1404), காளம் பாளையம்.



எங்கள் வயது என்ன?


என் தந்தையின் நண்பர் ஒருவர் எங்கள் வீட்டிற்கு வந்தார். அவர் என் தந்தையிடம், "உங்கள் வீட்டில் உள்ளவர்களின் வயதைக் கூற முடியுமா?" என்று கேட்டார்.

உடனே என் தந்தை சொன்னார்: "என் மகனுக்கும், மகளுக்கும் வயதில் வித்தியாசம் இரண்டு. என் மகனுடைய வயதை நான்கால் பெருக்கினால், என்னுடைய வயது வரும். என் மகளுடைய வயதை நான்கால் பெருக்கினால், என் மனைவியின் வயது வரும். என் வயதுக்கும், என் மனைவியின் வயதுக்கும் உள்ள வித்தியாசம் எட்டு. என்னுடைய வயதையும், என் மகளுடைய வயதையும் கூட்டி, என் மனைவியின் வயதைச் சேர்த்தால் என் அப்பாவின் வயது வரும். என் அப்பாவின் வயதை எட்டால் வகுத்தால், என் மகனுடைய வயதும், பத்தால் வகுத்தால் என் மகளுடைய வயதும், இரண்டால் வகுத்தால் என் வயதும் வரும். அப்படியானால், எங்கள் வயது என்ன?"

நண்பர் உடனே 'டக்'கென்று எங்கள் ஒவ்வொருவருடைய வயதையும் சரியாகக் கூறிவிட்டார். உங்களாலும் கூற முடியுமா? முயன்று பாருங்களேன்.

விடை: என் வயது 10, என் தங்கையின் வயது 8, அம்மா வயது 32, அப்பா வயது 40, தாத்தா வயது 80.

— எஸ். சந்திர மோகன் (4694), சின்னப்பம்பட்டி.



இல்லை; உண்டு

கால் இல்லை; ஆனால் ஓடும். (கடிகாரம்)
கால் உண்டு; ஆனால் ஓடாது. (நாற்காலி)
நாக்கு இல்லை; ஆனால் பாடும். (ரேடியோ)
நாக்கு உண்டு; ஆனால் பாடாது. (கோவில் மணி)
முள் இல்லை; ஆனால் குத்தும். (குண்டூசி)
முள் உண்டு; ஆனால் குத்தாது. (கடிகாரம்)

— ஆர். ஜானகிராமன் (6081),
சேலம் — 1.

மறைந்திருக்கும் நாடுகள்


கீழேயுள்ள வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நாட்டின் பெயர் மறைந்துள்ளது; கண்டு பிடியுங்கள்:

1. இங்கு இந்தி யாருக்குத் தெரியும்?
2. வாழைநார் வேட்டி நெய்யப்பயன்படும்.
3. தன் தந்தைக்குத் தெரியாமலே சியாம் சினிமாவுக்குச் சென்றான்.
4. பறந்து வந்த ஈ ராக்கியின் மூக்கில் உட்கார்ந்தது.
5. அப்பர் மாடியில் உறங்குகிறார்.

விடை: 1) இந்தியா; 2) நார்வே, 3) மலேசியா; 4) ஈராக்; 5) பர்மா.

— இரா. சத்திய நாராயணன் (201),
சென்னை—93.





கோபு வாங்கியது என்ன?

கோபுவின் அம்மா பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்துப் பக்கத்திலுள்ள கடையில் ஏதோ வாங்கி வரச் சொன்னாள். அந்த நோட்டைக் கடைக்காரரிடம் கொடுத்து, அம்மா சொன்னபடி அவன் ஒரு ரூபாய் வீதம் எட்டும், பத்துப் பைசாவிற்கு ஒன்று வீதம் இருபதும் வாங்கி வந்தான். வரும் போது அவன் கையில் அம்மா கொடுத்த ரூபாயில் எதுவும் குறையவில்லை. கடைக்காரர் இலவசமாகவோ, கடனாகவோ அவனுக்கு எதுவும் கொடுக்கவும் இல்லை. அப்படியானால், கோபு வாங்கி வந்தது என்ன?

விடை: கோபு வாங்கி வந்தது பத்து ரூபாய் நோட்டுக்கான சில்லறைதான்!
8 ஒரு ரூபாய் நோட்டு; 20 பத்துக் காசு நாணயங்கள்.

— வி. ரமேஷ் (2586),
சென்னை— 18.

ஒரு பூனை புலியாகிறது

முன்கதைச் சுருக்கம்

''நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே! நாட்டுக்கு நீ என்ன செய்தாய் என்று உன்னையே கேட்டுக் கொள்'' என்னும் கென்னடியின் பொன் மொழியை விளக்கி ஓர் அறிஞர் பள்ளியில் பேசினார். விஜய் குமார் என்னும் பணக்கார மாணவன் அதைக் கேட்டு 'நான் நாட்டுக்குச் சேவை செய்யப் போகிறேன்' என்று மார் தட்டுகிறான். அவனுடைய ஏழை நண்பனான சேரன், 'என்னால் அது முடியாது' என்று பின் வாங்குகிறான்.

சில நாட்களில் விஜய் குமாருடன் ஊட்டிக்குப் போன சேரன், இந்திய ஒற்றர் படையைச் சேர்ந்த தேனீ என்பவனைத் தற்செயலாகச் சந்திக்கிறான். குண்டடி பட்டுச் சாகும் நிலையில் இருந்த தேனீ, ஒரு மைக்ரோ பிலிம் சுருளைச் சேரனிடம் கொடுத்து, ''தாய் நாட்டுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யும் துரோகிகளின் பட்டியல் இதில் உள்ளது. இதைச் சென்னையில் 693641 என்னும் தொலை பேசியுடன் தொடர்பு கொண்டு, அங்குள்ளவர்களிடம் சேர்த்து விடு. நவம்பர் மாதம் பதினான்காம் தேதி சென்னையில் ஒரு அரசியல்வாதியைக் கொலை செய்யப் போகிறார்கள். அதற்குள் இதைச் சென்னையில் சேர்த்து விட வேண்டும்'' என்று கூறுகிறான். அவ்வாறே செய்வதாகச் சேரன் வாக்களித்த பிறகு தேனீ இறக்கிறான்.

சேரன் அங்கிருந்து ஓடுவதற்குள், தேனீயைச் சுட்ட தேசத் துரோகிகள் அங்கே வந்து விடுகிறார்கள். அவர்கள் சேரனைப் பார்த்து விடுகிறார்கள். அவனிடம் முக்கியமான பிலிம் சுருள் இருக்கிறது என்பதை உணர்ந்து, அவனைப் பிடிக்க ஓடுகிறார்கள்.

சேரன் அன்றிரவு அவர்களிடமிருந்து தப்பி விடுகிறான். மறு நாளும் அவர்களிடம் சிக்காமல் கோவைக்கு வருகிறான். கோவையிலிருந்து லாரி மூலம் சென்னைக்குப் பயணமாகிறான். தன்னுடன் விஜய் வீட்டின் காக்கர்ஸ் ஸ்பானியல் என்னும் உயர்ந்த ஜாதி நாயையும் எடுத்துச் செல்கிறான். தன்னை விரட்டி வருபவர்களிடமிருந்து தப்பித்து விட்டோம் என்று சேரன் நினைத்துக் கொண்டிருக்கும் போதே, ஒரு அம்பாசிடர் கார், லாரியைக் கடந்து சென்று நடுச் சாலையில் நிற்கிறது. அதிலிருந்து, சேரனை விரட்டி வந்த அதே ஆசாமிகள் இருவர் இறங்கிச் சாலையின் குறுக்கே நிற்க, மேலே செல்ல முடியாத லாரியும் நிற்கிறது. நாம் இப்படிச் சிக்கிக் கொண்டோமே என்ற அச்சத்தால், சேரனின் இதயமும் ஒரு நொடி நின்று விடுகிறது.

அப்புறம் என்ன நடந்தது?

ஐந்தாம் அத்தியாயத்தைப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

டாக்டர் பூவண்ணன்

5

சேரன் எங்கே?

ஊட்டியில் தன்னை விரட்டிய வர்கள் இங்கேயும் வந்து விட்டார்கள் என்பதைப் பார்த்த சேரன் திடுக்கிட்டது. ஒரு நொடிதான். 'அதோ! இரண்டு பேரும் லாரியை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் சிக்கக் கூடாது!' என்று சேரனின் அறிவு எச்சரிக்கை செய்தது.

சேரன், தனக்குப் பக்கத்திலிருந்த சிறிய கதவைத் திறந்து கொண்டு, நாயோடு பொத்தென்று கீழே குதித்தான்.

அதைப் பார்த்ததும், 'ஏய்!, அங்கேயே நில்!' என்று கத்தினான், ஜாக்கி.

அந்த வாக்கியத்தை அவன் சொல்லி முடிப்பதற்கு முன், இடப்புறம் இருந்த கரும்புத் தோட்டத்தை நோக்கி நாயைச் சுமந்தபடி ஓடிய சேரன், சில விநாடிகளில் அக் கரும்புத் தோட்டத்தில் புகுந்து மறைந்தான்.

ஜாக்கி, உடனே, ''பாபு, ஓடு! பையன் இந்த முறையும் தந்திரமாகத் தப்பப் பார்க்கிறான். பிடி அவனை'' என்று கத்தினான்.

பாபு வேகமாகக் கரும்புத் தோட்டத்தில் புகுந்து ஓடினான்.

சாலையைக் காட்டிலும் கரும்பு விளைந்த வயலின் பரப்பு தாழ்ந்து இருந்தது. அதனால் சாலையில் நின்ற ஜாக்கியால் கரும்புகளின் தோகைகள், அசைவதைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. ஒரு சதுரத்தை இரண்டு முக்கோணமாக வெட்டும் ஒரு இடைக் கோடு போல கரும்புத் தோட்டத்தின் மேற்பரப்பில் தோகைகளின் அசைவு, அலைபோலப் படருவதை ஜாக்கி பார்த்தான். சேரனைப் பாபு விரட்டிச் செல்கிறான் என்பதை உணர்ந்தான்.

லாரியிலிருந்த கந்தப்பனுக்கும் அவனுக்குப் பக்கத்திலிருந்த கிளீனருக்கும் ஒன்றும் புரியவில்லை. அவர்களும் சேரன் நுழைந்த கரும்புத் தோட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஜாக்கி ஒரு கணம் தன் பார்வையைக் கரும்பிலிருந்து சாலைக்குத் திருப்பிய போது, லாரி இன்னும் அங்கேயே நிற்பதையும், அதிலிருப்போர் கரும்புத் தோட்டத்தையே பார்ப்பதையும் கவனித்தான். உடனே அவர்களை அங்கிருந்து அப்புறப் படுத்துவது நல்லது என்று முடிவு செய்தான்.

ஜாக்கியின் வலக்கரம் அவனது பேண்ட் பாக்கெட்டில் நுழைந்து வெளிப்பட்ட போது அதில் ஒரு ரிவால்வர் இருந்தது. ஜாக்கி வேகமாக நடந்து லாரியை அடைந்தான். கையிலிருந்த ரிவால்வரினால் லாரியைத் தட்டி டிரைவரின் கவனத்தைத் திருப்பினான்.

கந்தப்பன் ஜாக்கியையும், அவன் கையிலிருந்த ரிவால்வரையும் பார்த்துத் திகைத்தான். கிளீனரோ நடுங்கினான்.

''டிரைவர், உங்களுக்கும் உங்கள் லாரிக்கும் சேதம் ஏற்பட வேண்டாம் என்று நினைத்தால் உடனே புறப் படுங்கள். அதோடு இங்கே என்ன நடந்தது என்பதைப் பற்றி யாரிடமும் மூச்சு விடாதீர்கள், உம்... வண்டி கிளம்பட்டும்.''

அவனது பேச்சுக்கு அபிநயம் பிடிப்பது போல ரிவால்வர் மெல்ல அசைந்தது.

'மகனின் நண்பன் சேரன், ஏன் கரும்புத் தோட்டத்தில் புகுந்து மறைந்தான்? அவனைப் பிடிக்க முற்படும் இவர்கள் யார்? சேரன் ஏதாவது குற்றம் செய்திருப்பானா?'

இத்தனை கேள்விகளும் கந்தப்பனின் மனத்திலே பிறந்தன. அவற்றுக்கு விடை காணும் ஆசையை ஜாக்கியின் கையில் காட்சியளித்த ரிவால்வர் விரட்டியது. அதோடு கந்தப்பன் அங்கேயே இருந்தால் தொல்லை வரும் என்றும் அது மிரட்டியது.

கந்தப்பன் உடனே லாரியை ஸ்டார்ட் செய்தான். மறு நிமிடம் அந்த லாரி மெல்ல நகர்ந்து வேக மாகச் சென்றது.

ஜாக்கியின் முகத்தில் புன்னகை. துப்பாக்கியை வாயருகே எடுத்துச் சென்று அதன் சாதனைக்காக அதற் கொரு முத்தம் இட்டான், பிறகு அதைப் பழையபடி பாக்கெட்டில் வைத்துக் கொண்டு, கரும்புத் தோட் டத்தைப் பார்த்தான். அதற்குள் வீசிய காற்றால் தோட்டம் முழுவதுமே தலையாட்டுவது போல அசைந்து கொண்டிருப்பது தெரிந்தது. முன்பு போல தோட்டத்தில் யாரோ ஓடு வதால் ஏற்படும் சலனத்தைத் தனியே கண்டு பிடிக்க முடியவில்லை.

சேரன் எங்கே?

அவனைப் பிடிக்கச் சென்ற பாபு எங்கே?

ஜாக்கியின் மனம் கேட்டது.

அதே நேரத்தில் சாலையில் வந்த மற்றொரு லாரி ஹாரன் அடித்தபடி மெதுவாக அங்கே நின்று, சாலையின் முக்கால் பகுதியை' அடைத்துக் கொண்டு குறுக்கே நிற்கும் அம்பாசி டருக்கும் பக்கத்தில் உள்ள சிறிதளவு இடத்தில் ஆமை போல நகர்ந்து அதைக் கடந்து, பழையபடி வேக மாகச் சென்றது.

ஜாக்கி அதைக் கண்டதும், அம்பா சிடரை நோக்கிச் சென்றான். அதில் ஏறி அமர்ந்தான். காரை ரிவர்ஸ் எடுத்து, சாலையின் ஓரத்தில் மற்ற வண்டிகளுக்கு இடைஞ்சல் இல்லா மல் நிறுத்தினான். பிறகு மீண்டும் சேரன் புகுந்த கரும்புத் தோட்டத் தின் அருகே வந்தான்.

சேரன் எங்கே?

அவனைப் பிடிக்கச் சென்ற பாபு எங்கே?

ஜாக்கியின் மனம் கேட்டது.

"ஒரு பையன் இவ்வளவு நேரம் தோட்டத்துக்குள்ளே ஓடுவானா? பாபு இன்னுமா அவனை விரட்டிக் கொண்டிருக்கிறான்?''

ஜாக்கியின் மனம் அமைதி இழந் தது. அவன், கரும்புத் தோட்டத்தின் ஓரத்திலேயே நடந்து போனான். சிறிதுதூரம் சென்றதும் கரும்புத் தோட்டத்தைப் பிரிக்கும் உயரமான வரப்புத் தெரிந்தது. ஜாக்கி அந்த வரப்பின் மீது நடந்தான். இருபுறத்து வயலையும் கூர்ந்து பார்த்தபடி நடந்



தான். அவன் நடக்க, நடக்க, 'சேரன் எங்கே?' பாபு எங்கே?' என்று அவன் மனம் கேட்டுக்கொண்டே இருந்தது.

வரப்பின் மேல் சுமார் பத்து நிமிடம் நடந்த பிறகு, எதிர்த்திசையில் யாரோ வருவதைக் கண்டான். வருவது யார்? பாபுதானா?

''பாபு...''

ஜாக்கி, குரல் கொடுத்ததும், 'எஸ் ஜாக்கி' என்ற பதில் வந்ததுடன், எதிரே வந்தவன் கொஞ்சம் வேகமாக நடந்தான்.

ஜாக்கி திடுக்கிட்டான்! அவன் திடுக்கிட்டமைக்குக் காரணம், எதிரே பாபு மட்டும் — பாபு ஒருவன் மட்டுமே வந்து கொண்டிருந்ததுதான். அப்படியானால் மீண்டும் பொடியன் தப்பித்துக் கொண்டானா? சேரன் எங்கே?

ஜாக்கியும் பாபுவை நோக்கி வேகமாக நடந்தான். சில விநாடிகளில் இருவரும் நெருங்கிய போது இருவர் வாயிலிருந்தும் ஒரே கேள்விதான் வெடித்துக் கிளம்பியது.

''பையன் கிடைத்தானா?''

ஜாக்கிதான் ஏமாந்து விட்டதை நன்றாக உணர்ந்து கொண்டான்.

''என்ன பாபு இது! நான் கேக்கற அதே கேள்வியை நீ கேக்கறே. நீதானே பையனைப் பின் தொடர்ந்து போனே. பையன் கிடைச்சானான்னு நான் கேட்கிறது நியாயம். நீதான் பதில் சொல்லணும். சொல்லு பாபு என்ன நடந்தது? சேரன் எங்கே?''

''கரும்புத் தோட்டத்திலே பையன் நுழைஞ்சதை நீ காட்டினே. உடனே நான் அவனைப் பிடிக்க ஓடினேன். அவன் எனக்கு முன்னாடி கொஞ்ச தூரத்தில் ஓடறதை உணர முடிஞ்சுது. கரும்புகளின் அசைவைப் பின்பற்றி ஓடினேன். கரும்புகளை விலக்கி, வழியுண்டாக்கிப்போறது எனக்குச் சிரமமாயிருந்தது. பையன் பழக்கப் பட்டவன் போல் முன்னேறிட்டான். அதே நேரத்திலே காத்தும் பலமா வீசிச்சு. எல்லாக் கரும்புகளும் அசையவே, நான் அவனைத் தவற விட்டுட்டேன். இந்த வரப்பிலே ஏறி நின்னு பார்த்தா, கரும்பு வயல் இன்னும கடல் போலப் பரவியிருக்கு. இதுலே எந்த மூலையிலே அவன் இருக்கிறானோ? தெரியலே!''

பாபு சொன்னான்.

''பாபு, மூன்றாவது முறையா பையன் தப்பிச்சுட்டான். பையன் முன்னாடி போனானா? இல்லே, உன்னை ஏமாத்தி பின்னாடி வந்து சாலைக்குப் போயிட்டானா?''

''தெரியலே! வா. ரோடுக்குப் போய்ப் பார்ப்போம்!''

பாபுவும், ஜாக்கியும் வரப்பின் மீதே வேகமாக ஓடினார்கள். அவர்கள் சாலையை அடையும் போது, இரண்டு லாரிகள் அவர்களைக் கடந்து ஓடின. சாலையில் வேறு யாரும் இல்லை. அவர்கள் ஓட்டி வந்த அம்பாசிடர்தான் அனாதையாக நின்று கொண்டிருந்தது.

''பாபு, பையனோட ஒரு நாய் இருந்ததே...?''

''ஆமாம். அதையும் காணோம். அதுவும் அவனோடு ஓடியிருக்கும்.''

ஜாக்கி சிறிது நேரம் யோசித்தான். பிறகு, ''பாபு, பையன் சென்னைக்குப் போகிறவன். எப்படியும் சென்னைக்குத்தான் போவான். நீயும் நானும் வயலுக்கு மத்தியில் இருக்கும் போது அவன் சாலைக்குப் போய், ஏதேனும் லாரியில், ஏறிப் போயிருக்கலாம். அதனாலே நான் காரிலே சென்னைக்குப் போறேன். நீ இந்த வயலுக்குப் பின்னாடியிருக்கிற கிராமத்துக்குப் போய்ப் பாரு. கிராமத்துலே புதுசா ஒருத்தன் வந்தா உடனே தெரிஞ்சுடும். அதுவும் அழகான — உயர்ந்த ஜாதி நாயோட ஒரு பையன் வந்திருந்தா அவனைக் கண்டு பிடிக்கிறது சிரமமில்லே. பையன் கிடைச்சா விடாதே! பிடிச்சுக்கோ. பையன் கிடைக்கலேன்னா கோயமுத்தூருக்குப் போய்ப் பாரு. பையன் கோவைக்குப் போக மாட்டான். எதுக்கும் அங்கே பாத்துட்டு, நீயும் சென்னைக்கு வந்துடு'' என்றான்.

அப்போதே மெல்ல இருள் பரவ ஆரம்பித்து விட்டது. பாபு 'சரி' என்று ஒப்புக் கொண்டு, தான் திரும்

பிய வரப்பின் மீதே மீண்டும் நடந்து, மறுமுனையிலிருக்கும் சிற்றூரை நோக்கிச் சென்றான்.

ஜாக்கி அம்பாசிடரில் ஏறி அதைக் கிளப்பினான். அப்போதும் அவன் மனம், 'சேரன் எங்கே?' என்று கேட்டுக் கொண்டே இருந்தது.

'ஜாக்கி காரை வேகமாகச் செலுத்தினான். வழியில் எங்கேயும் நிறுத்தவில்லை. சென்னையிலிருக்கும் தன்னைச் சார்ந்த ஆட்களுக்கு விஷயத்தைத் தெரிவிக்க வேண்டும். அதற்குத் தொலைபேசி தேவை. அதுவும் ரகசியமாகப் பேசக் கூடிய தொலைபேசி வேண்டும். அதனால் வேலூர் வழியாகச் சென்னைக்குச் செல்ல விரும்பினான். வேலூர் ஜாக்கியின் சொந்த ஊர். அவன் குடும்பமும் அங்கேதான் இருக்கிறது. வீட்டில் தொலைபேசியும் இருக்கிறது. அங்கே போனால் குடும்பத்தாரையும் பார்க்கலாம். தொலைபேசியில் பேசலாம். சில மணி நேரம் நிம்மதியாகத் தூங்கலாம். மறு நாள் காலையில் மீண்டும் பயணத்தைத் தொடங்கிச் சென்னைக்குச் செல்லலாம்.


ஜாக்கி இந்தத் தீர்மானத்தோடு, காரை ஒட்டினான். சுமார் ஐந்து மணி நேரத்திற்கு பிறகு, இரவு பத்தரை மணிக்கு ஜாக்கியின் கார் வேலூருக்குள் நுழைந்தது. சைதாப்பேட்டைப் பகுதியில் கோட்டைப் பிள்ளையார் கோயில் தெருவில் அவன் வீடு இருக்கிறது. ஆனால், அது கார் நுழைய முடியாத குறுகலான — வளைந்து நெளிந்து செல்லும் சந்து. அதனால் அதை ஒட்டிய சாலையில் காரை நிறுத்தி விட்டுத் தன் வீட்டை நோக்கி நடந்தான்.

அப்போதும் அவன் மனம் 'சேரன் எங்கே?' என்று கேட்டுக் கொண்டே இருந்தது.

ஜாக்கியை போலவே நீங்களும் யோசித்துப் பாருங்கள்.

உண்மையில் அப்போது சேரன் எங்கே இருந்தான்?

(தொடரும்)





விடமும் பிறகு நாகாவிலுள்ள மாஸ்டர் ஹிஹோன்னுவிடமும் கற்றுத் தேர்ந்திருக்கிறார். அவர் குச்சிச் சண்டை, இரட்டைக் கத்திச் சண்டை ஆகியவற்றை மாஸ்டர் ஷிகா ஜியிடம் பயின்று கொண்டார்.

சித்தோரியோ கராத்தே கழகத்தின் தலைமையகம் சிங்கப்பூரில் இருக்கிறது. தமிழகத்தில் சித்தோரியோ கராத்தே கழகத்தின் தலைவராகத் தமிழக நல வாழ்வுத் துறை அமைச்சர் ஹண்டே இருக்கிறார்.

ஸ்டேட் வங்கியில் ஓர் அதிகாரியாகப் பணியாற்றும் கோதண்டம் 1980ம் வருஷம் இந்தோனீஷியாவில் நடைபெற்ற இரண்டாவது ஆசிய சித்தோரியோ கராத்தே போட்டியில்

தற்காப்புக்குக் கராத்தே

ஒக்கினவா, ரைகூ தீவுகளில் கராத்தே இரகசியமாகத்தான் தொடங்கப்பட்டது. ஆயுதங்களில்லாமல் போரிடும் இந்தக் கலைக்கு, உடல் வலிமையைப் பெருக்கிக் கொள்ளும் இந்தக் கராத்தே சண்டைக்கு ஆதரவு கிட்டியதில் அதிசயமில்லை. உந்தத்தல், எறிதல், தாக்குதல், தாக்குதலைச் சமாளித்தல் என்று கராத்தே தற்காப்புக்குப் பெரிதும் உதவியது.

கராத்தேயைப் பற்றிப் பல சினிமாக்கள், கார்ட்டூன் சித்திரங்கள் உண்டு. வெள்ளித் திரையில் புரூஸ் லீ கராத்தேயைப் பிராபல்யப்படுத்தியிருக்கிறார்.

கராத்தே கலையைக் காஞ்சீபுரம் ராஜாவிடமிருந்து சீன, ஜப்பானிய வல்லுநர்கள் கற்றுப் போய்ப் பரப்பியதாகக் கூட அரிய செய்தி உண்டு. இதனால் கராத்தேக்கு 'ராஜ விளையாட்டு' என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

கராத்தே பள்ளிகளில் பல உண்டு. சித்தோரியோ கராத்தேயைக் காலஞ்சென்ற மாஸ்டர் கென்வா மாமுனிஷுரியிலுள்ள மாஸ்டர் இடோசு

'கறுப்பு பெல்ட்' பெற்றிருக்கிறார். 1982ம் வருஷம் கோலாலம்பூரில் நடைபெற்ற ஆசியப் போட்டியிலும் பங்கேற்றிருக்கிறார். இந்தியாவில் நடக்கும் பல கராத்தே போட்டிகளில் பங்கேற்ற பெருமையும் இவருக்கு உண்டு. சிங்கப்பூரில் நடைபெறப் போகும் நான்காவது ஆசிய சித்தோரியோ கராத்தே போட்டிகளில் பங்கேற்க இவரது தலைமையில் ஒரு குழு செல்கிறது. இந்தக் குழுவில் கராத்தே விற்பன்னர்கள் இ. எஸ். குமார், வி. பார்த்தசாரதி, இ. மணிவண்ணன், ரவிச்சந்திரன், ஆர். ஸ்ரீவத்ஸன், பன்னீர் செல்வம், சம்சுதீன் இடம் பெற்றிருக்கிறார்கள். இந்த ஆசியப் போட்டியில் ஜப்பான், நேபால், மலேசியா, சிங்கப்பூர், இந்தோனீஷியா, தாய்வான், ஆஸ்திரேலியா முதலிய நாடுகளைச் சேர்ந்த கராத்தே விற்பன்னர்களும் கலந்து கொண்டு வெற்றிக்குப் போராடுகிறார்கள். தமிழகத்தைச் சேர்ந்த இ. எஸ். குமார், கோதண்டன் இருவருக்கும் சிங்கப்பூர்த் தலைமையகம் பல நுட்பங்களைப் பயிற்சியளிக்கத் திட்டமிட்டுள்ளது.

பெண்களும் கராத்தே பயிற்சியில் தற்காப்புக்காக ஈடுபடுவது குறிப்பிடத்தக்கது. ஜப்பானிலும், மலேசியாவிலும் கராத்தே கலையைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக ஆக்கியிருக்கிறார்கள். அமெரிக்காவிலும் கராத்தே இன்று பரவி வருவது வியப்பான தகவல்.

தமிழகத்தில் தற்காப்புக்குக் கராத்தே உதவுவதால் போலீஸ்காரர்களுக்கும் இந்தக் கலையைப் பயிற்றுவிக்கிறார்கள்.

''கராத்தே கலைக்குக் கிரிக்கெட்டைப் போல அவ்வளவு பிராபல்யம் தமிழகத்தில் இல்லை. இந்தக் கலையைப் பயின்றால் உடலில் அடிபட்டுவிடுமோ என்று சிலருக்குப் பயம். சர்வதேசப் பந்தயங்களிலும், தமிழக கராத்தே விற்பன்னர்கள் பங்கேற்பதை வரவேற்று உற்சாகம் அளிக்க வேண்டும். ''இந்தியாவுக்குப் பெருமை சேர்ப்பதற்காக நாங்களும் சர்வதேசப் பந்தயங்களில் கலந்து கொள்ளச் செல்கிறோம்.'' என்று இந்த அணியில் பங்கேற்கும் ஸ்ரீவத்ஸன் கூறுகிறார்.

திருடர்களுக்கு மத்தியில் நிராயுதபாணியாக மாட்டிக் கொள்பவர் கராத்தே கற்றிருந்தால் எளிதில் அவர்களிடமிருந்து தப்ப இயலும்.

கராத்தே விற்பன்னர்களுக்கு அவர்களது தகுதிக்கேற்ப வெள்ளை பெல்ட், ப்ரௌன் பெல்ட், கறுப்பு பெல்ட் வழங்குகிறார்கள். கறுப்பு பெல்ட் பெற்றால் இக்கலையில் நன்கு தேர்ந்தவர் என்று அறிந்து கொள்ளலாம்.

கராத்தே போட்டியிடுவதற்கு முன் கராத்தே வீரர்கள் பணிவுடன் ஒருவருக்கொருவர் வணங்கிய பிறகே, 'ஸ்போர்ட்டிங் ஸ்பிரிட்டு'டன் சண்டையிடுவார்கள். கராத்தே விற்பன்னர்கள் பொறுமையுடனும், மிகுந்த ஒழுக்கத்தோடும், ஸ்போர்ட்ஸ்மன்ஷிப்புடன் வெற்றி இலக்கையடைவதில் குறியாக இருப்பார்கள்.

உடல் வளர்ச்சிக்கும், மன வளர்ச்சிக்கும், தற்காப்புக்கும் கராத்தே உதவுவதால் இன்று இக்கலை உலகம் முழுவதும் வெகு வேகமாகப் பரவி வருகிறது.

குண்டுமணி



கேளுங்கள்; சொல்லுகிறோம்

* கிரிக்கெட் விளையாட்டில் பிரபலமானவர்களின் முகவரிகள் அடங்கிய புத்தகம் இருக்கிறதா? எங்கு கிடைக்கும்?

ஆர். சுந்தர், விக்கிர பாண்டியம்.

அப்படி ஒரு புத்தகம் இருப்பதாகத் தெரியவில்லை. **Board oj Control for Cricket In India, P. Box. No. 11094, BOMBAY – 400020.** என்ற முகவரிக்கு எழுதிக் கேட்டால், தேவையானவர்கள் முகவரிகளைப் பெறலாம்.

*** காலம் இல்லை என்பவன் கணக்குத் தெரியாதவன். நேரம் இல்லை என்பவன் நேர்மை இல்லாதவன். ஓய்வு இல்லை என்பவன் ஒழுங்கு தெரியாதவன். — இப்படிச் சொன்னவர் யார்? அவருக்கும் கல்விக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.**

— சே. குருசாமி, செஞ்சி.

அப்படியா... ம், தெரியுது, தெரியுது. நெய்யாடுபாக்கம் துரைசாமி அவர்களின் மகன் 'கல்வித்தந்தை' என்று போற்றப்படும் சுந்தரவடிவேலுதானே! சந்தேகமில்லை. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களேதான்!

*** நீங்கள் ஏதேனும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டிருக்கிறீர்களா? பரிசு பெற்றதுண்டா?**

— வே. தாமரை, திருக்கழுக்குன்றம்.

ஓ!, கயிறு இழுக்கும் போட்டியில் கலந்து கொண்டிருக்கிறேன். அதில் வெற்றி பெற்று பரிசும் பெற்றிருக்கிறேன் — ஒரு சோப்பு டப்பா!

*** இங்கே மதுரையில் சௌராஷ்டிரர்கள் என்று பலர் இருக்கிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வது புரியவில்லையே! அந்த பாஷை எங்கிருந்து வந்தது?**

— ஏ. எல். ராமு, மதுரை.

மேற்கு இந்தியாவில் இப்போது கத்தியவார் என்று அழைக்கப்படும் பகுதிக்கு முன்பு சௌராஷ்டிரம் என்று பெயர். அங்கிருந்து வந்தவர்கள்தான் சௌராஷ்டிரர்கள். அவர்கள் பேசும் மொழி சௌராஷ்டிரம். அதுவும் அவர்களுடன் வந்ததுதான்.


* கோகுலத்தில் 10—ஆம் வகுப்பிற்குரிய மாதிரி வினாத்தாள் வெளியிடுவீர்களா?

— எஸ். சிவ குமார், செங்கோட்டை

வெளியிடும் உத்தேசமில்லை. மாதப் பத்திரிகையில் இம்மாதிரி விஷயங்களுக்கு இடம் அளிக்க இயலவில்லையே!

*** மை டியர் குட்டிச் சாத்தான்' படத்தை அவர்கள் கொடுக்கும் கண்ணாடியால் பார்க்க வேண்டும் என்கிறார்கள். ஆனால், முன்னதாகவே கண்ணாடி அணிந்திருப்பவர்கள் எப்படிப் பார்ப்பார்கள்?**

— க. ஸ்ரீராம், நெய்வேலி.



முன்பு அணிந்துள்ள கண்ணாடிக்கு மேல் அவர்கள் தரும் கண்ணாடியை அணிந்து கொண்டு பார்க்கலாம்; நன்றாகத் தெரியும்

*** ஆனைமலை என்கிறார்களே, அங்கு யானைகள் அதிகமோ?**

— கே. பி. தசரதன், சேலம்—3

அதிகம்தான். தென்னிந்தியாவிலே மிக உயரமான சிகரம் இந்த மலையில்தான் இருக்கிறது. அதற்குப் பெயர் ஆனைமுடி!

*** இந்த ஆண்டு குடியரசு தினத்தில் 15 சிறுவர் சிறுமியர் வீரச் செயலுக்கான விருது பெற்றதாகச் சென்ற இதழில் படித்தேன். இப்படி எத்தனை பேர் இதுவரை விருது பெற்றிருக்கிறார்கள்?**

— ஏ. பாபு, பரோடா

இந்த விருது 1957ல் தான் முதல் முதலாகக் கொடுக்கப்பட்டது. அந்த ஆண்டில் ஒரு பையன், ஒரு பெண் ஆக இருவர்தான் விருது பெற்றனர். இது வரை 210 சிறுவர்களும் 55 சிறுமிகளும் மொத்தம் 265 பேர் இந்த விருதினைப் பெற்றிருக்கிறார்கள்.

*** கல்கியின் இயற்பெயர் என்ன?**

பி. பாரதி ஆனந்த், சமத்தூர்.



ரா. கிருஷ்ணமூர்த்தி.

*** தூக்கத்தில் கனவு வருவது எப்படி?**

— அ. நடராஜன், அண்ணாமலை நகர்.

இந்தக் கேள்விக்கு இது வரை யாரும் சரியான பதிலைக் கூறியதாகத் தெரியவில்லை. கனவுகள் மனிதனுடைய ஆசைகளையே குறிக்கின்றன என்றார் பிளேட்டோ என்னும் கிரேக்க அறிஞர். நாம் உறங்கும் போதும் சில உறுப்புக்கள் வேலை செய்கின்றன. அவைகளின் தூண்டுதலினால்தான் கனவுகள் உண்டாகின்றன என்றார் மற்றொரு கிரேக்க அறிஞரான அரிஸ்டாட்டில். இந்தக் கருத்துக்களை அடிப்படையாக வைத்தே இப்போது பலரும் பலவிதமாகக் கூறி வருகின்றனர்.

பாரதியார் பாடிய சிறுவர் பாடல்களில் மிகச் சிறந்த பாடல் எது?

— தமிழ்த்தீபம், திருவாரூர்.

'ஓடி விளையாடு பாப்பா' என்று தொடங்கும் 'பாப்பாப் பாட்டு'த்தான்.

*** சிகரெட், சுருட்டு, பீடி — இந்த மூன்றில் எது அதிகம் கெடுதல் இல்லாதது?**

— நா. சினி, மண்டபம்.

எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்லது?

*** 'அதிகாரி' என்பது தமிழ்ச் சொல்லா? பிற மொழிச் சொல்லா? நாம் அந்தச் சொல்லைப் பயன்படுத்தலாமா?**

— கி. டி. லலிதா, மதுரை.

திருக்குறளில் பத்துக் குறள்கள் கொண்டது ஓர் அதிகாரம் என்று கூறப்படவில்லையா? தொல்காப்பியத்தில் எழுத்து அதிகாரம், சொல் அதிகாரம், பொருள் அதிகாரம் என்று காணப்படவில்லையா? ஆகையால், அதிகாரி என்ற சொல்லை நாமும் பயன் படுத்துவதில் தவறில்லை.


*** சங்கராந்தியில் பிறந்த பிள்ளை என்று சுவாமி விவேகானந்தரைக் குறிப்பிட்டிருந்தீர்கள், சென்ற இதழில். இதே போல் கிறிஸ்துமஸ் தினத்தில் பிறந்து உலகப் புகழ் பெற்றவர் யாரேனும் உண்டா?**

— வி. மரியதாஸ், பாளையங் கோட்டை.

'புவி ஈர்ப்பு' சக்தியைக் கண்டு பிடித்தாரே; விஞ்ஞானி ஐசக் நியூடன், அவர் பிறந்தது கிறிஸ்துமஸ் தினத்தில்தான்.

*** என் போன்ற 10 வயதுப் பையன்கள், பெண்களெல்லாம் படிக்க வேண்டிய வயதில் வேலைக்குப் போகிறார்களே, இதைத் தடுக்க முடியாதா?**

— வி. சுபாஷ், அருப்புக் கோட்டை



அரசாங்கமும் என்ன என்னவோ செய்துதான் பார்க்கிறது; தடுக்க முடியவில்லை. இந்தியாவில் இப்படி ஒரு கோடிக் குழந்தைகளுக்கு மேல் வேலை பார்க்கிறார்களாம். தீப்பெட்டி செய்தல், வெடிமருந்து தயாரித்தல், பீடி சுற்றுதல், தோல் பதனிடுதல், வீடு கட்டுதல் போன்ற வேலைகளில் இவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். சின்ன வயதிலே வேலைக்குப் போய் பணம் சம்

பாதித்துப் பெற்றேரைக் காப்பாற்ற வேண்டிய நிலைமையும் சில குடும்பங்களில் இருக்கின்றது.

*** தைப் பூச சமயம். நான் என் தாயாருடன் பழநிக்குப் பாதை யாத்திரை போய் வந்தேன். அப்போது 'பாலனைப் போல் தோன்றுகின்ற பழநி வேலா — நீயும் பண்டாரம் போல் நிற்பதேனே பழநி வேலா' என்ற பாட்டை அடிக்கடி பலர் பாடினார்கள். அந்தப் பாட்டை எழுதிய கவிஞர் உங்கள் அலுவலகத்தில்தானே இருக்கிறார்?**

— ஆர். செந்தில்நாதன், தேவகோட்டை.

நிச்சயமாக இல்லை. அவர் திருச்சி 'தினத்தந்தி' அலுவலகத்தில் செய்தி ஆசிரியராக இருக்கிறார். 'அப்பாவின் ஆசை', 'பலாப் பழம்' போன்ற சிறுவர் நாடகங்களை எழுதிப் புகழ் பெற்ற கலைமாமணி திருச்சி பாரதன் தான் அக் கவிஞர்!


*** நான் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், கோவிலுக்குப் போவேன். ஒவ்வொரு சாமிக்கும் ஒரு பாட்டுப் பாடுவேன். அந்தந்த சந்நிதியில் மனதுக்குள் பாடுவேன். சில நாட்களில் அங்கு ஒருவர் வந்து சப்தம் போட்டுப் பாடுவார். அப்போது எனக்குச் சரியாகப் பாட வராது. இப்படி சப்தம் போட்டுக் கோயிலில் பாடுவது நல்லதா?**

— எஸ். என். சுந்தர், சென்னை—4.

கூட்டுப் பிரார்த்தனை செய்யும் போது அல்லது பஜனை நடத்தும் போது, உரக்கப் பாடலாம். தனியாகப் பாடும் போது, மனதுக்குள் பாடுவதே நல்லது. ஐந்தாறு பேர் அவரைப் போல் ஆளுக்கு ஒரு பாட்டை உரத்த குரலில் பாட ஆரம்பித்தால் ஒரே கூச்சலாகத்தான் இருக்கும். மற்றவர்களால் நிம்மதியாகத் தரிசனம் செய்ய முடியாது.

*** மலை ஏறுவதற்கு காரை விட ஜீப் (Jeep) பயன்படுத்துவது நல்லது என்கிறார்களே, ஏன்?**

— ஜி. தாமரைக் கண்ணன், பெருந்துறை.





கூத்தபிரான் திருச்சி பாரதன்

சாதாரண மோட்டார் வண்டிகளில் பின்னால் உள்ள இரண்டு சக்கரங்களை மட்டுமே எஞ்சின் சுழற்றும். பின் சக்கரங்கள் சுழலும் போது முன் சக்கரங்களையும் அவை தள்ளிக் கொண்டு செல்லும். ஆனால், ஜீப் வண்டியில் நான்கு சக்கரங்களையுமே எஞ்சின் தன் சக்தியினால் சுழற்றுகிறது. இதனால், மலைகளில் ஏறும் போதும், சேறுகளில் ஓடும் போதும் எளிதாகச் செல்ல முடிகிறது.

*** எங்களைப் போன்ற சிறுவர்களுக்கு ஏற்ற விதத்தில் நாடகம் எழுதுவதில் இன்று சிறந்து விளங்குகிறவர் யார்?**

— ஆர். கோபி, சென்னை—18.

கூத்தபிரான் என்று கூறலாம். நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதி, மேடைகளில், சிறுவர்களைக் கொண்டே நடிக்க வைத்தும் வானொலியில் ஒலி பரப்பியும் வெற்றிக் கண்டவர் அவர்.

*** எங்கள் ஊரில் உள்ள பெரியார் சிலைக்கு அடியில், 'கடவுளை நம்புகிறவன் முட்டாள்' என்று எழுதியிருக்கிறது. இதைப் பார்க்கும் போதெல்லாம் கஷ்டமாயிருக்கிறது. இதற்கு என்ன செய்யலாம்?**

— பழ. இராமசாமி, காரைக்குடி.

பெரியார் எத்தனையோ பொன் மொழிகளைக் கூறியிருக்கிறார். அவற்றில் ஒன்றை எடுத்துப் போட்டிருக்கலாம்.

அரசாங்கத்துக்கு இது குறித்து ஒரு வேண்டுகோள் தயாரித்து, அதில் ஆயிரக் கணக்கானவர்கள் கையெழுத்துப் போட்டு அனுப்பினால், பலன் ஏற்படலாம்.

20-3-85 வரை
கோ.சி.ச. உறுப்பினர் எண்ணிக்கை
9618

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி
உறுப்பினர் எண், பெயர், முகவரி

2426. கு. விஸ்வநாதன் (ரமேஷ்) மே/பா. கு. விஸ்வநாத ஐயர், கருங்காடு நரசிங்கநல்லூர் அஞ்சல்.

2427. அ. ராம சுப்பிரமணியன், நியூ ரமேஷ் ஸ்டோர், ரூபா வாட்ச் எதிர்ப்புறம், இராஜபாளையம்.

2428. கே. மங்கள ரேகா, 139, பன்னீர் செல்வம் தெரு, காவேரிப்பட்டிணம்.

2429. எல். ஜெயப்பிரகாஷ், 1/6, தென்கரை அக்ரஹாரம், தென்கரை—624 226.

2430. ஆர். ராமசுப்பிரமணியன், 3/265, வண்டியூர் மெயின் ரோடு, சதாசிவ நகர், மதுரை—20.

2431. எஸ். சங்கரவடிவு, 32, மேலத்தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி—1.

2432. ஆர். ரவிக்கண்ணன், 20/1, மேலரத வீதி, வடகரை, பெரியகுளம்.

2433. எஸ். ராஜேஷ்குமார், 1, மாரியப்பா இல்லம், கணக்குப் பிள்ளைத் தெரு, கள்ளக்குறிச்சி—606 202.

2434. வி. சுரேஷ், 8/60, வடக்குத் தெரு, செந்துறை—621 714.

2435. எம். ஆர். அனந்தபத்மநாபன், என். சட்டக்கல், நாக்கம்பட்டி—635 204.

2436. எஸ். கிஷோர், D—14, ராமசாமி நகர், உடுமலைப்பேட்டை.

2437. ஆர். ஸ்ரீநிவாசன், 20, சுந்தரேச சுவாமி கோயில் தெரு, கொசப்பேட்டை, வேலூர்—632 001.

2438. ச. குமர வடிவேலன், 10—ஏ, ராம்நகர், நியூ சங்கரன்பாளையம், வேலூர்—632 001.

2439. ஆர். சாய்ராம்; 3/40—ஏ, எம். எஸ். அக்ரகாரம், பரமக்குடி—623 707.

2440. த. லதா, 62, பஜனைக் கோவில் சந்து, கோயமுத்தூர்—1.

2441. ஜெ. பிரேமா, த/பெ. கே. ஜகந்நாதன், ஏ—5, **G.C.T. Old Hostel,** கோவை—641 013.

2442. பி. சியாமளா, **D/o.** சி. பிச்சை குருக்கள், கோட்டைச் சிவன் கோவில் தெரு, அறந்தாங்கி.

2443. சு. மாணிக்கவாசகம், 25, பி. எம். சுவாமி காலனி, ராபர்ட்சன் ரோடு, கோவை—40.

2444. அ. குமரேசன், 16/52, இஸ்மாயில் ராவுத்தர் வீதி, கோயமுத்தூர்—1.

2445. அ. சுரேஷ்குமார், 27, பெருமாள் கோவில் தெரு, அதிராம்பட்டினம், தஞ்சை மாவட்டம்.

2446. ச. வசந்தி, **D/o.** கே. டி. சங்கரன், எலெக்ட்ரீஷியன், பெரியார் புராஜெக்ட், 626 525.

2447. வி. அம்பிகா, 45, வடக்கு மாட வீதி, திருவொற்றியூர், சென்னை—19.

2448. எச். ராதாகிருஷ்ணன் (தங்கராஜ்) 35—ஏ, குமாரவேல் தெரு, முக்கூடல்—627 601.

2449. நா. ரங்கநாதன், 25, சரோஜினி தெரு, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி—2.

2450. எம். முருகானந்தம், 1, கைலாச நாதர் கோவில் தெற்கு வீதி, ஒக்க. குடவாசல் போஸ்ட்.

2451. **B. Rajesh, B—7/2:6 Sector 1, Vashi, New Bombay—400 703.**

2452. கே. ஜெ. சுஜாதா, 6, சித்திவிநாயகர் காலனி, மடப்புரம், திருவாரூர்.

2453. பி. ராஜகுமார், **S/o.** ஏ. பி. பெரியசாமி, உதவிச் செயற் பொறியாளர், கால்வாய் உட்கோட்ட எண் **III,** பாப்பிரெட்டிப்பட்டி—636 905.

2454. ஆர். கணேஷ், 17/D, எம். எஸ். மணியம் காலனி, பட்டுக்கோட்டை.

2455. வெ. சுதா, **D/o. K.** வெங்கடரமணன், டிவிஷனல் என்ஜினியர், பெரியார் புராஜக்ட்—626 525.

2456. ஜி. சிவசங்கர், 49, ஐ. சி. எல். காலனி, இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், சங்கரி மேற்கு (637 303)

2457. பி. ஆர். ஜெயகுமார், ஸ்ரீ காஞ்சி காமாட்சி வீவர்ஸ் கார் பரேடிவ் சொஸைடி, ஏகாம்பர நாதர் சன்னதி தெரு, காஞ்சிபுரம்.

2458. எல். நாமகிரி லக்ஷ்மி, 1/1, சர்தார் மாணிக்கம் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை—33.

2459. எஸ். சங்கரநாராயணன், 2, சன்னதி தெரு, திருவட்டீஸ்வரன் பேட்டை, சென்னை—5.

2460. எஸ். ஸ்ரீராம், 2, சன்னதித் தெரு, திருவட்டீஸ்வரன் பேட்டை, சென்னை—5.

2461. அறிவழகன், 32—பி, குட்டி கவுண்டர் வீதி, ரத்தினபுரி, கோவை—27.

2462. அ. கலைச்செல்வன், 60—A, **Y.M.R.** பட்டி, சின்ன அம்மன் பவனம், திண்டுக்கல்.

2463. என். மீரா, 43—ஏ, யானை கட்டி மைதானம், பீமநகர், திருச்சி—1.

2464. என். மீனாட்சி சுந்தரம், 22, சுப்பிரமணியபுரம், முதல் மெயின் ரோடு, மதுரை—625 011.

2465. டி. எஸ். கண்ணன், 8, சன்னதித் தெரு, திருப்பரங்குன்றம், மதுரை—5.
2466. ஜெ. ராமன், **A—5, G.C.T. Old Hostel,** கோவை—13.
2467. ஹெச். பாரூக், **C/o.** ஹபீஸ் உசேன், சானிடரி இன்ஸ்பெக்டர், எலம்பலூர் ரோடு, பெரம்பலூர் தாலுகா.
2468. எஸ். ஸ்ரீராம், 81, கீழ மேல் அக்ரஹாரம், முசிறி—621 211.
2469. ஆர். மோகன் குமார், 2, 14—வது தெரு, விநோபாஜி நகர், அஸ்தினாபுரம், சென்னை—64.
2470. ஆர். சந்திரசேகரன், 1, 14—வது தெரு, விநோபாஜி நகர், அஸ்தினாபுரம், சென்னை—64.
2471. வெ. ஜெயலட்சுமி, 121, இராமலிங்கம் ரோடு, ஆர். எஸ். புரம், கோவை—2.
2472. சி. கண்ணன், 43, மங்கலம் சாலை, கருவம்பாளையம், திருப்பூர்.
2473. ஏ. கே. ராகவன், 9, இரண்டாவது தெரு, ரேஸ்வியூ காலனி, சென்னை—32.
2474. கே. வெங்கிட சுப்பிரமணியன், பி—2/531, கைலாசபுரம் டவுன்ஷிப், திருச்சி-14.
2475. எம். கதிரேசன், 11, செட்டியார் கோவில் வடக்கு வீதி, குத்தாலம், மயிலாடுதுறை தாலுகா.
2476. எஸ். ஹேமா, எம்/30, **A.M.I.G. Flats,** முனுசாமி சாலை, கே. கே. நகர், (மேற்கு), சென்னை—78.
2477. **T. V. Balasubramaniam, J. C. 40/97, Mini Cottage, Puthan-Cottai, Trivandrum—9.**
2478. எஸ். செந்தில் முருகன், 147, ஏ. கே. தெரு, இடைப்பாடி, சேலம் மாவட்டம்.
2479. கே. டி. அசோக்குமார், 6, சித்திவிநாயகர் காலனி, மடப்புரம், திருவாரூர்.
2480. எஸ். நாராயணன், 4, இராஜாஜி சாலை, இராம்நகர், கோவை—9.
2481. இரா. இராஜ்குமார், 3/29, நடுத்தெரு, போலகம் திருமருகல்—609 702.
2482. த. விஜயராஜா, 4, தெ. சி. கிட்டங்கித் தெரு, விருதுநகர்.
2483. சு. ஸ்ரீப்ரியா, பிளாட் நிர். 30, 3—வது தெரு, தபால் தந்தி நகர், மதுரை—14.
2484. ந. செந்தில் வடிவு, 7/8, எம். ஜி. சக்ரபாணி தெரு, சத்தியா தோட்டம், சென்னை—93.
2485. ஆர். ஸ்ரீராம், 24, கச்சேரித் தெரு, இராசிபுரம்—637 408.
2486. வி. கணேசன், 4/26, கஸ்தூரிபா தெரு, வந்தவாசி.
2487. எஸ். கார்த்திக் பிரகாஷ், 58, காமாட்சியம்மன் கோவில் தெரு, அருப்புக்கோட்டை.
2488. ஆர். சங்கர், 4/86, இரட்டைத் தெரு, புலியூர்க்குறிச்சி, தக்கலை—629 175.
2489. கோ. சு. சுஜாதா 176, திருச்சி ரோடு, கோவை—18.
2490. ப. மு. கணேஷ், 8/515, திருச்சி ரோடு, கோவை—18.
2491. ஏ. சி. கோதண்டராமன், 2, தபால் தந்தி காலனி, மன்னார்புரம், திருச்சி—20.
2492. கி. ஏ. சரவணன், 23, ஒத்தச் செக்கார வீதி, கோவை—1.
2493. இரா. கிருஷ்ணன், 216, வைத்தியாலயா தெரு, மேற்கு காலனி, கோவை—20.
2494. வி. சரவணன், ராஜா ஸ்டுடியோ, கடைத்தெரு, பொன்னமராவதி—636 810.
2495. க. அ. நக்கீரன், 65, தேர் வீதி, அந்தியூர்—638 501.
2496. மை. தமிழ்ச்செல்வன், **S/o.** சி. மைக்கேல் (ஓவிய ஆசிரியர்), காந்தி கலா நிலையம், மேல்நிலைப்பள்ளி, புங்கமுத்தூர், கோவை மாவட்டம்.
2497. ஆர். ஜெய்க்குமார், 6, பஜனைக் கோவில் தெரு, தாழங்குப்பம், சென்னை—57.
2498. இரா. வைத்தீஸ்வரன், பிளாக் நம்பர் 10—ஏ, இரண்டாவது தெரு, பாஷ்யம் நகர், சென்னை—44.
2499. எஸ். சுதா, பிளாட் நம்பர் 4, அரவிந்தர் தெரு, ஆனந்த நகர், சென்னை—59.
2500. ம. மலர்விழி, 31, வரதராஜப் பெருமாள் கோவில் தெரு, தண்டையார்பேட்டை, சென்னை.
2501. பி. ஜி. தேவசிகாமணி, 46—ஏ, கும்பகோணம் ரோடு, பண்ருட்டி.
2502. ஜெ. கார்த்திகா, 62, கிழக்கு கோவிந்தபுரம், திண்டுக்கல்—1.
2503. இரா. புவனேஸ்வரி, 193, லிங்கன் தெரு, கே. கே. நகர், திருச்சி—21.
2504. இரா. ரேவதி, 193, லிங்கன் தெரு, கே. கே. நகர், திருச்சி—21.
2505. ரா. சிதம்பரம், 11, பட்டாபிராமன் பிள்ளைத் தெரு, தென்னூர், திருச்சி—17.
2506. டி. எஸ். குருவாயூரப்பன், 113, ஆர். எஸ். ரோடு, கும்மிடிப்பூண்டி—601 201.
2507. இரா. ஊர்து சகாயராணி, **D/o. V.** இராஜகோபால், ஆசிரியர், ஜெயிலானியா முதல் தெரு, 7—வது சந்து, திருச்சி—20.
2508. கே. சி. விஜயமோகன், 138, ஈ. பி. காலனி, திருநெல்வேலி—627 011.
2509. இரா. ரமேஷ், 49, சீனுவாசபுரம், பட்டுக்கோட்டை.
2510. ஆர். கோபால், 222—ஏ, காமராஜ் ரோடு, கும்பகோணம்.
2511. என். கணேசன், 14, மைனர் நஞ்சப்ப செட்டி தெரு, இராசிபுரம்—637 408.
2512. சே. ரமா, 69, சரவணப் பெருமாள் முதலி தெரு, சென்னை—84.

(இன்னும் வரும்)

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)
Editor: K. Rajendran



அன்னை கஸ்தூரி பா

தோற்றம்: ஏப்ரல் 1869 மறைவு: 22.2.1944



REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka